சக்தி

பெண்ணிதழ்

பெண்கள் மேம்பாட்டு பன்மொழி மின்னிதழ்

மலர்-2 இதழ்- 10 | நிறுவனர் & தலைமைப் பதிப்பாசிரியர் முனைவர் செ. ராஜேஸ்வரி | ஜூன் 2026

தமிழ்ப் பெண் ஆளுமை கவிஞர் வித்யா மனோகர் சிறப்புப் பேட்டி

எங்கெங்கு காணினும் சக்தி
சக்தி பெண்ணிதழ்

மலர் -2 இதழ் - 10 ஜூன 2026

நிறுவனர் & தலைமைப் பதிப்பாசிரியர் :
முனைவர் கெ.ராஜேஸ்வரி

சிறப்பாசிரியர் :
முனைவர் தேமொழி (USA)

பொறுப்பாசிரியர் :
முனைவர் சந்திரிகா சுப்ரமணியன்(சிட்னி)

துணை ஆசிரியர் :
கவிஞர் மேனகா நரேஷ் (NJ) செயற்கை

நுண்ணறிவு படங்கள்:
முனைவர் திருமதி கெ. ராஜேஸ்வரி

உள்ளடக்கம்

1. **"தியாகத்தின் மறுபெயர் தந்தை"** 2
~கவிஞர். நளினி சுந்தரராஜன்.

2. **சோழ மன்னன் செய்த ஆணவக்கொலை** 3
முனைவர் தேமொழி

3. **எழுத்தாளர் வித்யா மனோகர், புதுச்சேரி** 6
மேனகா நரேஷ்

4. **தியாகத் தீபமாய்...** 13
முனைவர் சிவ இளங்கோ, புதுச்சேரி

5. **இந்தியாவின் 'வானிலை பெண்மணி' - அன்னா மணி** 17
மேனகா நரேஷ்

6. **"முகம் தெரியாத அறவிகள்"** 25
நெல்லை.க.சோமசுந்தரி

7. **அம்மன் கோயில்களில் பௌத்தத் தடயங்கள்** 29
முனைவர் திருமதி கெ. ராஜேஸ்வரி

8. **உலக அமைதிகாத்து வாழ்க!** 34
முனைவர். இல.ஜெயந்தி

9. **விடியலின் விதை!** 43
அமுதமொழி

10. **மாலை பூக்கும் நாள்** 45
சசிகலா விஸ்வநாதன்

11. **"இந்திய மாநிலங்களவையின் முதல் பெண் துணைத் தலைவர்: வயோலெட் ஆல்வா – ஓர் வரலாற்றுப் பயணம்!"** 56
லயன் MJF. ச.வெங்கடேசன்

12. **கவிதை** 59
ரிஸ்கா முக்தார்-

13. **நட்பின் விளக்கம்** 60
அசீபா பாத்திமா

14. ***The woman sitting between Tim Cook and Elon Musk wasn't a politician or celebrity.*** 62

15. **இயற்கை இனி செயற்கை!** 64
மு.செந்தாமரை

16. **நோய் தீர்க்கும் காவல் தெய்வம் சமயபுரம் மாரியம்மன்** 67
பிரபா எஸ். ராஜேஷ்

17. **ஹைக்கூ கவிதைகள்** 73
Dr ஜலீலா முஸம்மில்

18. ***ARANYANI*** 74
VIJENI

19. **ஜெயஸஞ்ஜீவி** 83
வை.மு.கோதைநாயகி அம்மாள்

Shakthi Pennithazh
Printed and Published by :
E.Satish Rajkumar (Advocate)
3/422, Dinamani Nagar, Madhurai,
Tamil Nadu - 625 018.
Ph : +91 7871123226, +91 7010997630

கட்டுரைகள் அனுப்ப..
sakthipennithazh@gmail.com
rajetamiljuly1@gmail.com

இவ்விதழில் இடம்பெற்றுள்ளகருத்துகள் அனைத்தும் கட்டுரையாளர்களின் கருத்துகளே ஆகும்.
அவற்றுக்கும் இதழாசிரியருக்கும் எந்தத் தொடர்பும் இல்லை

தந்தையர் தினம் ஜூன் 21.

”தியாகத்தின் மறுபெயர் தந்தை”

விடியலின் முன்னே தான் எழுந்து
வியர்வை சிந்த தினம் உழைப்பார்!
இல்லற பாரச் சுமையைத் தாங்கி
ஓடும் சகடமாய் அயராது சுற்றுவார்!

உள்ளே அழும் நெஞ்சினை மறைத்து
உதட்டில் புன்சிரிப்பை உதிர்ப்பார்!
பிள்ளை உயர்வு ஒன்றே மதியென
தியாக மெழுகாய் தன்னை உருக்குவார்!

பழைய ஆடையும் காலணியும் போதுமென
புதியன எல்லாம் குடும்பத்திற்கு வாங்குவார்!
பசி நோக்காது கண் துஞ்சாது
பொருள் ஈட்டும் வழிகளனைத்தும் தேடுவார்!



காய்ந்த கைகள் முரடாய் இருந்தாலும்
உள்ளத்தில் பூவென மலர்ந்திருப்பார்!
கண்டிப்பான குரல் உரக்க ஒலித்தாலும்
கனிவான ஆறுதலும் அணைத்துத் தருவார்.

வெயிலில் தான் வாடிக் காய்ந்து
குளிர் நிழல் குழந்தைக்கு அருளுவார்!
வழிகாட்டியாய் நாளும் துணை நின்று
பாதுகாக்கும் கோட்டை அரணாவார்!

மார்பிலும் தோளிலும் சேய் தாங்கி
ஆதூரமாய் தாலாட்டுப் பாடுவார்!
வளர்ந்த விழுது கிளை பரப்ப
ஆலமரத்தின் ஆணிவேரெனத் தாங்குவார்.

தந்தை சொல்லே மந்திரம் என்று
அவர் காட்டும் நல்வழி நடப்போம்!
தலைவன் தியாகமின்றி நம் உயர்வு
சிறப்பில்லை என்றுணர்ந்து வாழ்வோம்!

~கவிஞர். ஞலினி சுந்தரராஜன்.
விஸ்கான்சின், வட அமெரிக்கா.

சோழ மன்னன் செய்த ஆணவக்கொலை

முனைவர் தேமொழி
சான் பிரான்சிஸ்

பத்தொன்பதாம் நூற்றாண்டு தமிழகத்தில் நிலவிய சோதனை மற்றும் சித்திரவதை நடைமுறைகள்; ஒரு வரலாற்றுப் பார்வை என்ற தலைப்பில் மதுரை டோக் கல்லூரி வரலாற்றுப் பேராசிரியர் முனைவர் தெ.துர்க்காதேவி; சோதனை, சித்ரவதை ஆகிய இரு முறையில் தீர்ப்பளிக்கும் முன்னர் விசாரணைக்கு உள்ளாகும் கைதி எதிர்கொள்ளும் கொடுமைகளையும் துன்புறுத்தல்களையும் (தமிழ் மரபு அறக்கட்டளை - திசைக்கூடல், மே 2026) விவரித்து இருந்தார். விசாரணைக்கு உள்ளானவர் குற்றவாளி என்று தீர்ப்பளிக்கப்பட்டால் அவருக்குக் கொடுக்கப்படும் தண்டனைகளை விசாரணைக்கு உள்ளாகும் பொழுதே கைதிகள் அனுபவிப்பதும் உண்டு.

தமிழ் இலக்கியங்கள் வழியாக சுண்ணாம்புக் காளவாயில் போடுதல், கல்லைக் கட்டி கடலில் மூழ்கடித்தல், கழுவில் ஏற்றல், மாறுகால் மாறுகை வாங்கல், யானையின் காலால் இடறப்படுதல், கசையடி, பிரம்படி, நாடுகடத்தல், தூக்கிலிடுதல் போன்ற பற்பல தண்டனைகளை நாம் அறிந்துள்ளோம். சிற்பங்களாக தொல்லியல் தரவுகளாகவும் அவை கிடைத்து வருகின்றன. தண்டனைகள் எப்படிப்பட்டவை என்பதற்கு சாக்ரடீசுக்கு நஞ்சு அருந்துமாறு கொடுக்கப்பட்ட தண்டனை, உலகம் உருண்டை என்று சொன்னதற்காக உயிருடன் எரிக்கப்பட்ட புரூனோ என்று வரலாறு முழுவதும் உலகம் முழுவதும் மனிதக் குலத்தில் பலகாலமாகக் கொடுமையான தண்டனைகள் வழங்கப்பட்டது பதிவாகியுள்ளது.

சான்றுகள் இல்லை என்றே கூறப்பட்டாலும் மக்களிடையே பலகாலம் வழங்கப்படும் கதை அம்பிகாபதி அமராவதி காதல் கதை. இக்கதையை அக்காலத்தில் நிலவிய ஆணவக் கொலை என்று கருதப்பட வேண்டிய நிகழ்ச்சி எனலாம். வரலாற்றில் அறியப்படும் கதை மாந்தர்களை ஒட்டி வழங்கும் இக்கதையின் காலம் கி. பி. 12 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி. சோழப்பேரரசன் மகள் இளவரசி அமராவதியும், கவிச் சக்கரவர்த்தி கம்பரின் மகன் புலவர் அம்பிகாபதியும் காதலிக்கிறார்கள். இவர்கள் காதலை ஏற்காத சோழ மன்னன் அம்பிகாபதிக்கு மரணதண்டனை கொடுக்கிறான். காதலன் மறைந்ததை அறிந்த அமராவதியும் உயிர் நீக்கினாள் என்பது இக்காதல் காப்பியத்தின் முடிவு.

அம்பிகாபதி-அமராவதி காதல் நாம் நன்கு அறியும் கதையாக, பாடலாக (கவிஞர் சே.ர.குமாரசாமி) , காப்பியமாக (பேராசிரியர் சுந்தர சண்முகனார்), நாடகமாக (மறைமலை அடிகள்), திரைப்படமாக (இளங்கோவன்) ஆகியோர்களால் பல்வேறு வடிவங்களில் உயிர் பெற்றுள்ளது. இவற்றில் 'அமரன் அம்பிகாபதி' என்ற தலைப்பில் கவிஞர் சே.ர.குமாரசாமி பி. ஏ. (தேவி பதிப்பகம், 1956) எழுதியுள்ள நூலில் அம்பிகாபதியைக் குற்றவாளி என்று கூறிக் கொதித்து எழும் குலோத்துங்கச் சோழனின் ஆணையைப் பின்வரும் வரிகளில் குமாரசாமி விவரிக்கிறார்.

"நடத்தையிலே தீயநெறி நச்சரவா யானான்!
கடத்திச் சென்றேகுங்கள் ! காவலர்காள் ! ஓய்ந்திருக்கும்
வாட்கு விருந்தாய் வழங்குங்கள்! போர்க்களிற்றின்
தாட்கிடையே இன்னவனைத் தந்து நசுக்குங்கள்! (70)
தீங்கு புரிந்தென் திருவைக் கவர்ந்தவனை
ஏங்குங் கடலுள் எறியுங்கள்! பண்புலவாக்
கொச்சை வாழ்வேற்ற கொடியவனைக் கொண்டேகி
உச்சிமலை நின்று உருட்டியுயிர் வாங்குங்கள் !

தீராப் பசியுடைய தீய விலங்குகட்குச்
சேரா விருந்தாய்ச் செலுத்துங்கள்! என்னாவி
கண்டு தவழும் கரைகாணாப் பேருவகைக்
கொண்டு மகிழ குறையெல்லாம் தான்விலகச்
செய்க இவற்றுள் செயலொன்று!" என்றரசன்
மெய்கனலே கொண்டெரிய மேவும் சினங்குமுற (80)
ஆங்கு கொதித்தெழுந்து ஆர்த்தான்! ...
[அமரன் அம்பிகாபதி, சே.ர. குமாரசாமி]

ஒருவரை எப்படி எல்லாம் கொல்லலாம் என்ற பட்டியல்தான் இது. வாளால் வெட்டிக் கொல்வது, யானைக் காலால் தலையை இடறுவது, கடலில் மூழ்கடிப்பது, மலையிலிருந்து உருட்டுவது, விலங்குகளுக்கு இரையாக்குவது என்று வழக்கில் இருந்த தண்டனைகளைத் தனது பாடலில் சேர்த்துள்ளார் குமாரசாமி. குற்றம் புரிந்தவர்களாக இருந்தாலும் அவர்களுக்குக் கொடிய தண்டனையை வழங்குவதை ஏற்காத மனித நேயம் இக்காலத்தின் வளர்ச்சி. மரண தண்டனையைப் பெரும்பாலான நாடுகள் நீக்கிவிட்டன. சித்திரவதைகளையும் கட்டுக்குள் கொண்டு வருகின்றன. விஷவாயுக் கூடத்தில் இரக்கமின்றிக் கொல்லப்பட்ட யூதர்களின் மரணத்தை இன்றைய உலகில் ஒருவர் கூட ஏற்கமாட்டார்கள்.

யாயும் ஞாயும் யாரா கியரோ
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்
யானும் நீயும் எவ்வழி அறிதும்
செம்புலப் பெயல்நீர் போல
அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே.
[குறுந்தொகை 40]

என்ற பாடலை வியந்து வியந்து போற்றுகிறது தமிழ் உலகம். அதே வேளையில், உயிர்களிடையே இயல்பாக எழும் காதல் உணர்வுகளுக்காக ஆணவக் கொலைகள் இன்றும் தமிழ்நாட்டில், இந்தியாவில் நிகழ்த்தப்படுகின்றன என்ற உண்மை நாம் எந்த அளவு மனித நேயத்தில் முன்னேறி உள்ளோம் என்று காட்டுகிறது.

தமிழ்ப் பெண் ஆளுமைகள்- 1

எழுத்தாளர் வித்யா மனோகர், புதுச்சேரி

மேனகா நரேஷ்
நியூஜெர்சி

தமிழ் இலக்கிய உலகில் தனித்துவமான குரலாகத் திகழும் எழுத்தாளர் வித்யா மனோகர், கவிதை மற்றும் கட்டுரை ஆகிய இரு தளங்களிலும் இயல்பாகச் செயல்பட்டு வரும் படைப்பாளி. பள்ளிப் பருவத்திலேயே வாசிப்பிலும் எழுத்திலும் ஈர்க்கப்பட்ட அவர், தமிழ் இலக்கியத்தில் முதுகலை வரை பயின்று தனது இலக்கியப் பயணத்தை உறுதியாக முன்னெடுத்தார்.

பெண்களின் மனஉணர்வுகள், சமூகச் சிக்கல்கள், வாழ்வியலின் நுணுக்கங்கள் ஆகியவற்றை எளிமையான மொழியில் ஆழமாக வெளிப்படுத்துவது இவரது எழுத்தின் சிறப்பாகும். பல்வேறு தமிழ் அமைப்புகள் வழங்கிய விருதுகள் மூலம் அவரது இலக்கியப் பணி கவுரவிக்கப்பட்டுள்ளது. வாசிப்பின் வடிவம் மாறினாலும் நல்ல இலக்கியம் காலத்தைத் தாண்டி நிலைத்திருக்கும் என்ற நம்பிக்கையுடன், புதிய படைப்புகளை உருவாக்கும் கனவோடு தொடர்ந்து இயங்கி வருகிறார்.

1. வணக்கம் வித்யா! உங்களைப் பற்றிய அறிமுகத்தை கூறுங்கள்.

சக்தி இதழ் வாசகர்களுக்கு முதற்கண் என் வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்! சிறுவயதில் எனக்குக் கூட்டுக்குடும்ப வாழ்வு வரமாகக் கிடைத்தது.அன்புள்ளமும், அனுபவ அறிவும் மிக்கப் பாட்டியின் வளர்ப்பில், இரு தாய்மாமன்கள் மாமியர் அரவணைப்பில் நிறையக் கற்றுக்கொள்ள முடிந்தது. என் தந்தையின் அறிவும், தாயின் பொறுமையும் மரபணுக்கள் எனக்கு அளித்த கொடை எனலாம். அதனால் கல்வியோடு கூடவே விட்டுக்கொடுத்தல், புரிந்துகொள்ளுதல் போன்ற நற்பண்புகளும் வளர்ந்தன. சிறந்த வாழ்விற்கான அடித்தளம் வாய்க்கப் பெற்றேன். எங்கள் பெற்றோருக்கு நாங்கள் நால்வரும் பெண்குழந்தைகள். அண்ணன் தம்பி இல்லையே என்ற ஏக்கம் எனக்கிருந்தது உண்மையே.ஆனால் அன்பும் பாசமும் மிகுந்த உடன்பிறந்த உறவாக மருத்துவ இணையர்கள் திரு. சரவணன், மங்கை சரவணன் இருவரும் என் வாழ்க்கைப் பயணத்தில் இணைந்திருப்பது காலத்தின் கருணையே!

என் கணவர் மனோகர் சிறந்த ஒளிப்படக் கலைஞர். என்னுடைய வளர்ச்சிக்கு எப்போதும் உறுதுணையாக நிற்பவர். என் குழந்தைகள் அரவிந்தன், கனகாங்கி இருவருமே எனக்கு வரமாகக் கிடைத்தவர்கள். உடல் மன வளர்ச்சிகளில் பல சவால்களை சந்தித்து

நாற்காலியில் சுற்றி வரும் மகனுக்குத் தாயாய் இருப்பதில் தாய்மையின் பூரணத்தை உணர்கிறேன்.

2.உங்களின் எழுத்துப் பயணம் துவங்கியது எப்போது?

பள்ளிப் பருவத்திலேயே வாசிப்பின் மீது ஆர்வத்தை உண்டாக்கிய பெருமை அப்பாவைச் சாரும். கோடை விடுமுறைகளில் கையில் தாளைக் கொடுத்து எதைப் பற்றியாவது எழுது என்பார்கள். அன்று தொடங்கிய ஆர்வம் இன்று வரை தொடர்கிறது. நான் அறிந்த வரையில் ஆறாம் வகுப்புப் படிக்கும்போது, எனக்குத் தெரிந்த ஒரு சில வார்த்தைகளைக் கொண்டு நான் எழுதியதே என் முதல் கவிதை எனலாம். அம்மா இரசித்த கவிதை வரிகள் அவை! அக்கவிதையை இன்றளவும் அப்பா பாதுகாத்து வைத்திருக்கிறார்கள்.

பள்ளிப்பருவத்தில் எனக்கு அமைந்த தமிழாசிரியர்களின் பங்கும் அளப்பரியது. பேச்சுப்போட்டி, கட்டுரைப் போட்டி என்று பலவற்றிலும் பங்கு கொள்ள ஊக்கமளித்தார்கள். கல்லூரிப் படிப்பில் தமிழ்ப்பாடம் தான் படிப்பேனென்று உறுதியுடனும் மிகுந்த ஆர்வத்துடனும் தமிழ் இலக்கியம் பயின்றேன். முதுகலை வரை பயிலும் வாய்ப்புக் கிட்டியது. இப்போது கவிதை, கட்டுரை என்று இருதளங்களிலும் இயல்பாக இயங்குவதற்கு நான் கற்ற கல்வி துணை நிற்கிறது.

3.உங்கள் எழுத்தில் பெண்களின் அனுபவங்கள் மற்றும் சமூகச் சிக்கல்கள் எந்த வகையில் பிரதிபலிக்கின்றன?

‘‘பொது வாழ்வில் பெண்களுக்குக் கிடைக்கும் அனுபவங்களை உற்று நோக்கினால் அவை, சமூகத்தின் நிலைமையை மிகத் துல்லியமாக வெளிப்படுத்துவதை உணரலாம். ஒரு பண்பட்ட சமூகத்தில் மட்டுமே பெண்கள் பாதுகாப்புடனும் நிம்மதியுடனும் சுதந்திரமாகவும் இயங்கமுடியும்.

சமுதாயத்தைத் திருத்த வேண்டும் என்று களமிறங்குவதை விடப் பெண்களுக்கு விழிப்புணர்வு தருவதற்கு எழுத்தை ஆயுதமாகப் பயன்படுத்தலாம் என்பதை அனுபவத்தின் வழி உணர்ந்தேன்.

கமலா தாஸ் ஈரோடு தமிழன்பன் விருது

பலதரப்பட்ட பெண்களின் மன உணர்வுகளைக் கேட்டறிந்துத் தொகுத்திருக்கிறேன். பெண்களின் உளப்போராட்டங்கள் கனவுகள், விருப்பங்கள் ஆகியவை என் எழுத்தில் இயல்பாகஇடம்பெறுவதைவிரும்புகிறேன்.பெண்களைப்பலவீனத்தின்அடையாளமாக அல்லாமல் வாழ்வை எதிர்கொள்ளும் வலிமையான மனிதர்களாக எழுத முயல்கிறேன்.''

4.இன்றைய தமிழ் இலக்கிய உலகில் புதிய எழுத்தாளர்கள் எதிர்கொள்ளும் முக்கியச் சவால்கள் என்ன என்று நினைக்கிறீர்கள்?

போட்டிகள் நிறைந்திருக்கும் இலக்கிய உலகில் புதிதாக எழுத வருபவர்கள் தரமான படைப்புகளை அளிப்பதற்கான முயற்சியில் வெற்றி பெற வேண்டும். பின்னர் அப்படைப்பை வெளியிடுதல், வாசகர் வட்டம் போன்றவற்றிலும் பல நேரங்களில் தடைகளைக் கடந்து வரவேண்டிய சூழலே நிலவுகிறது.

படைப்புலகில் அறிமுகம், முன்னோடி படைப்பாளர்களுடனான தொடர்புகள், இலக்கிய வட்டார ஆதரவு போன்றவை இல்லாதபோது புதிய எழுத்தாளர்கள் கவனிக்கப்படாமல் போவதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளன. இவற்றையெல்லாம் கடந்து வர,

தனக்கென ஒரு தனி நடை , பார்வை இவற்றை உருவாக்குவது புதிய எழுத்தாளர்களுக்கு மிகப்பெரிய சவாலாக உள்ளது.

சவால்கள் பல இருந்தாலும் இன்றைய காலகட்டத்தில் புதிய எழுத்தாளர்கள் வளர்வதற்கான வாய்ப்புகளும் பெருகியுள்ளன என்பது வரவேற்கத்தக்கது.

Tamil America TV
Tamil America Global Network Inc
Greater New York, USA
தமிழ்ப்பணிச் செம்மல் விருது
Partnership Excellence Award 2022
வித்யா மனோகர்
வல்லினச் சிறகுகள்
அமெரிக்காவின் முதன்மையான இணையவழி தொலைக்காட்சியான தமிழ் அமெரிக்கா தொலைக்காட்சி, எமது பங்காளர் அமைப்பாக தங்களது அரிய தன்னலமற்ற தமிழ்ப் பணி, கலைப்பணி, ஊடகப்பணி மற்றும் உங்கள் நிறுவனத்தின் தொடர்ந்த ஆதரவைப் போற்றிப் பாராட்டி இந்த விருதினை வழங்கி பெருமிதம் கொள்கிறது.

இணைய இதழ்கள் வளர்ச்சி, முகநூல்,மின்நூல்கள், யூடியூப் இலக்கியச் சேனல்கள் இவற்றின் உதவியால் எழுத்தாளர்கள் வாசகர்களுடன் நேரடித் தொடர்பில் இருக்க முடிகிறது. எத்தனையோ சவால்களும் போட்டிகளும் இருந்தாலும் "நல்ல இலக்கியம் எப்படியும் தன் இருப்பைத் தக்க வைத்துக் கொண்டு காலம் கடந்தும் வாழும்" என்பதே உண்மை.

5.உங்களுக்கு மிகவும் பிடித்த தமிழ் எழுத்தாளர்கள் அல்லது உந்துதலாக இருந்த படைப்புகள் எவை?

புதுச்சேரியில் வசிக்கும் கலைமாமணி அமிர்தகணேசன் அவர்கள் (என் சித்தப்பா) மகாகவி ஈரோடு தமிழன்பன் ஐயா மீது பேரன்பும், அவரின் படைப்புகள் மீது பெருங்காதலும் கொண்டவர். மகாகவியின் 102 நூல்கள் அடங்கிய பெருந்தொகுப்பை உருவாக்கியவர்.அவர் மூலமாகத் தமிழன்பன் ஐயா கவிதைகள் பலவற்றை வாசிக்கும் வாய்ப்பைப் பெற்றேன். கருத்தாழமிக்க அக்கவிதைகளால் ஈர்க்கப்பட்டுப் பல்வேறு தலைப்புகளில் கட்டுரைகள்,உரைகள் அளிப்பதை மகிழ்வுடனும், மிகுந்த ஆர்வத்துடனும் செயல்படுத்தி வருகிறேன்.

6.வாசகர்களின் விமர்சனங்கள் மற்றும் எதிர்வினைகள் உங்கள் எழுத்தில் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளதா?

என் மன உணர்வுகளைச் சொல்வதற்கு நான் கடினமான மொழியைத் தேர்ந்தெடுப்பதில்லை. இலகுவான மொழி என்பதால் என் கவிதைகள் வாசகர்களை எளிதில் சென்றடைந்துவிடுகின்றன.

எழுத்தைப் பொதுவெளியில் பதிவு செய்யும்போது நிச்சயமாக விமர்சனங்கள் வரும். ஆரோக்கியமான விமர்சனங்களுச் செவிசாய்க்கலாம். அவை நம் படைப்பை மேம்படுத்துவதற்கு உதவும். மற்றவற்றைக் கடந்து போவதே சிறப்பு.

7.நீங்கள் இதுவரை எத்தனை நூல்கள் எழுதி இருக்கிறீர்கள்?

'மகனுக்குக் கைக்குட்டையாய்' முதல் கவிதை நூல்

'காத்திருப்பு' இரண்டாவது கவிதை நூல்.

(வல்லினச் சிறகுகள் இதழ் நடத்திய மருத்துவர் ஜெ. அம்பிகா தேவி நினைவு போட்டியில் பரிசு பெற்ற நூல்)

'நேர்கொண்ட பார்வையர்' (கட்டுரைகள்)

வல்லினச் சிறகுகள் இதழில் எழுதிய நேர்காணல்கள் தொகுப்பு நூல்

கவிதை தொகுப்புகள் இரண்டுமே மகாகவி ஈரோடு தமிழன்பன் அணிந்துரையுடன் வெளிவந்துள்ளன.

8.நீங்கள் பெற்ற விருதுகளைப் பற்றிக் குறிப்பிடுங்கள்...

ஈரோடு தமிழன்பன் வாசகர் பேரவை அமெரிக்கா, ஒருதுளிக் கவிதை புதுச்சேரி, வல்லினச் சிறகுகள் அட்லாண்டா இணைந்து வழங்கிய தமிழன்பன் 80 விருது

தமிழன்பன் 80 விருது

அமெரிக்கத் தொலைக்காட்சி ஊடகம் வழங்கிய தமிழ்ப்பணிச் செம்மல் விருது

தென்சென்னை தமிழ்ச் சங்கம் வழங்கிய கவிமலர் விருது

தமிழ் உறவுகள் குழுமம் வழங்கிய கவியரசர் கண்ணதாசன் விருது

தமிழ் - மலையாளிகள் அமைப்பு, ஒருதுளிக் கவிதை சத்வாவனா நூல்கள் இணைந்து வழங்கிய கமலா தாஸ் ஈரோடு தமிழன்பன் விருது

தமிழணங்கு பன்மொழி ஆய்விதழ் வழங்கிய தமிழணங்கு இயல்தமிழ் விருது

23-05-2026 சென்னையில் நடைபெற உள்ள தமிழ்த்தடாகம் ஆண்டு விழா நிகழ்வில் தமிழ்ஒளி விருது பெற உள்ளேன்.

9.டிஜிட்டல் காலத்தில் புத்தக வாசிப்புப் பழக்கம் எப்படி மாறி உள்ளது என்று நீங்கள் கருதுகிறீர்கள்?

இணையத்தின் மூலம் நாம் விரும்பும் நூல்களை உடனடியாகப் பெற முடிகிறது. முன்பெல்லாம் நாம் தேடித்தேடிப் பெற்று வாசித்த நூல்கள் இன்று சில நொடிகளில் பதிவிறக்கம் செய்யப்படுகின்றன. டிஜிட்டல் காலத்தில் தகவல்கள் எளிதில் பரிமாறப்படுகிறது. இந்த வளர்ச்சியை நாம் வரவேற்கலாம்.

மேலும் வளரிளம் தலைமுறையினர் பல மொழி நூல்களைப் படிக்க முடிகிறது.

புதிய எழுத்தாளர்கள் டிஜிட்டல் தளங்கள் மூலம் தங்கள் படைப்புகளை எளிதில் வெளியிட முடிகிறது. மின்னூல் வெளியீடு, சமூக ஊடகங்களில் இலக்கியப் பக்கங்கள் போன்றவை புதிய வாசகர்களை உருவாக்குகின்றன. புத்தகங்களை வாசிப்பது போலவே கேட்கும் பழக்கமும் அதிகரித்துள்ளது.

தமிழணங்கு இயல்தமிழ் விருது

டிஜிட்டல் தளங்களின் வருகை, வாசிப்புப் பழக்கத்தை அழித்துவிடவில்லை. வாசிப்பின் வடிவம்தான் மாறி இருக்கிறது என்பது என் கருத்து.

10.எதிர்காலத்தில் நீங்கள் எழுத விரும்பும் புதிய படைப்புகள் அல்லது கனவு திட்டங்கள் பற்றிப் பகிர விரும்புகிறீர்களா?

இதழ்களுக்கென்றும் தனிப்பட்ட முறையிலும் எழுதிய கட்டுரைகளைத் தொகுக்க வேண்டும். மரபு வகைமையில் ஒரு கவிதை நூல் வெளியிட வேண்டும் என்ற எண்ணம் உள்ளது.

மனிதநேயம், பெண்களின் வாழ்வியல் உண்மைகள், சமூகப் பொறுப்பு ஆகியவற்றை மையமாகக் கொண்டு எழுத்தை அர்த்தமுள்ள பயணமாக மாற்றியுள்ள வித்யா மனோகர், இன்றைய தமிழ் இலக்கிய உலகில் கவனிக்கத்தக்க படைப்பாளிகளில் ஒருவராகத் திகழ்கிறார். எளிமையான மொழியாலும், ஆழமான சிந்தனைகளாலும் வாசகர்களைத் தொடும் அவரது படைப்புகள், சமூக விழிப்புணர்வையும் மனித உறவுகளின் மகத்துவத்தையும் வெளிப்படுத்துகின்றன. சவால்களைத் தாண்டியும் தனது இலக்கியப் பயணத்தை உறுதியுடன் தொடரும் அவர், வருங்காலத்திலும் பல சிறந்த படைப்புகளைத் தமிழ் இலக்கியத்திற்கு வழங்குவார் என்ற நம்பிக்கை உறுதியாக உள்ளது. எழுத்தாளர் வித்யா மனோகருக்கு ‘‘சக்தி’’ இதழ் சார்பில் மனமார்ந்த வாழ்த்துகள்!

பேட்டி எடுத்தவர்
மேனகா நரேஷ்

தியாகத் தீபமாய்...

என் அன்பிற்குரிய பீம்!

உன்னை 'பீம்' என்று அழைக்க எனக்குள் கொள்ளை ஆசை...
ஆனால் ஒருநாள் கூட அப்படி அழைத்ததில்லை.
வெட்கம் மட்டுமல்ல அதற்குக் காரணம்;
உயர்ந்த பொருளைத் தொடுவதற்கு
உற்ற தயக்கம் தான் அது!

என்னதான் மனதோடும், உடலோடும்
ஒட்டி உறவாடினாலும்
எனக்கு நீ எட்டாக் கனிதான்!
கல்விக்காகவும், பிற பணிகளுக்காகவும்
நீண்ட தூரம் நீ பிரியும் வேளைகளில்,
உன்னை ஆரத் தழுவி, முத்தமிட்டுப்
பிரியாவிடை தந்திட விரும்புவதுண்டு;
அதுவும் நடந்ததில்லை ஒருபோதும்!

ஆயிரக் கணக்கில் உன்னை அரவணைக்கிறார்கள்;
அன்பின் மிகுதியில் கன்னம் வருடி வாழ்த்துகிறார்கள்;

அவர்களுக்கான ஆதவன் நீ என்று
அழகாகப் பேசி மாலை இடுகிறார்கள்;

அத்தனைக் கூட்டத்திலும், தொலைவிலும்
ஏங்கிப் பனிக்கும் என் கண்களையும்
அது சொல்லும் ஆயிரம் செய்திகளையும்
நீ கண்டு கொண்டதை நானும் அறிவேன்.

உன் படிப்பையும், அறிவையும் வியந்து
உலகம் கொண்டாடும் போதெல்லாம்
நீ எனக்கானவன் இல்லையோ என்று
ஏங்கித் தவித்திடும் என் மனதை
உன்னையன்றி யார் புரிந்திடுவார்?

என் தனிமையும், துயரமும் என்னைத் தகிக்கும்
என்பதை நீ அறிவாய்; அது
உன்னையும் தகிக்கும் என்பதை நானும் அறிவேன்;
நினைத்த நேரம் சல்லாபம் என்றெல்லாம்
விரும்பிய வாழ்க்கை வாழ
எனக்கும் விருப்பமில்லை; உனக்கும் நேரமில்லை.

ஒட்டுமொத்த அறிவையும் அள்ளிச் சேர்க்கும்
உறுதி கொண்ட உன் மனதுதான் என்னைத்
தேற்றும் மருந்து என்பதை நீ அறிவாய் தானே!
என் கண்ணீர் உன்னைத் தேக்கக் கூடாது;
நீ உயர உயரத்தான் இந்த நாடே உயரும்!

உன் பாதையில் அமைதி குலையவும் செய்யும்...
ஆனால் உன் இதயம் எதையும் தாங்கும்!
தொட்டால் நொறுங்கிப் போகும் உணர்வுகளின் ஊடே,
உனக்குள் உரம் ஏற்றும் வல்லமை எனக்கிருப்பதை
நீ சொல்லித்தானே நானும் அறிவேன்!

யாரும் எட்டாத சிகரத்தை நீ அடைய
நானே காரணம் என்று என்னையே நம்ப வைத்தாய்!
உனக்கான கண்ணாடியாய் நான்
இருப்பதென்பது என் கனவும் கூட...
ஆனால் எல்லாமே நான்தான் என்று நீ எழுதியும் வைத்தது
யசோதரைக்கும் கிடைக்காத பேறு அல்லவா?

வாழ்வின் பொருள் தேடிப் போன புத்தனைப் போல்,
வக்கற்றவர்கள் படும் துயரத்தின்
ஆழத்தையும், காரணத்தையும் நீயும் தேடினாய்...
அதற்கான தேடலும், தவமும்,
உன்னை விட்டு எம்மைப் பிரிப்பதுதான்
தேவையும், அறமும் என்று
எனக்குள்ளேயே சொல்லிக் கொள்வேன்;

யசோதரையைப் போல...
இந்த நினைவிலும் என்னைப் புத்தனின் மனைவிக்கு ஈடாய்
உயர்த்தியது கூட உன் உழைப்பும், கல்வியும்தான்!

இத்தனைக் கல்வி கற்றும்,
கல்வி தந்த தாளாளன் பதவி கொடுத்தும்,
சாதி சொல்லிப் பணியாட்கள் ஏற்க மறுத்த வேளை,
நீ கொண்ட வேதனைக்கு
இதமாய் நான் இருந்திருப்பேனோ?

திருமணத்திலும் சாதியம் தீவிழி விழிக்க,
இரவு நேர அங்காடிக் குறடுகளின் மேல்
இருமனமும் இணைந்தோமே...
இவையெல்லாம் நம்மோடு போகட்டும் என்று
சமுதாய நலக் கூடங்கள் நாட்டி
அவமானத்தையே அவமானப்படுத்திய
ஆற்றல் மிக்கவன் நீதானே...

ஆனால் நீயோ,
'யாதுமாகி நின்றாய் நீ'
என்றென்னை அரவணைத்தாய்!
எல்லோருக்கும் யாதுமான உன்னை
எப்படி நான் எனக்குள் அடைத்திருப்பேன்?

"நீ வெளியே போகாமல் இருந்திருந்தால்
உனக்கு ஞானம் கிடைத்திருக்காதா" என்று
யசோதரை கேட்டபோது
மனைவியிடம் மயங்கியதுண்டே புத்தன்!

ஆனால் நீ வெளியே போனதால்தான்
ஞானத்தின் தலைவன் ஆனாய்!
உன் மூளை மாபெரும் வாசகசாலை;
பல்கலைக்கழகங்கள் உன்னைப் படிக்கின்றன;
சென்ற இடமெல்லாம் சிலையை எழுப்புகின்றன;

உன்னை உடலால் தொடும் மனைவி
என்ற தகுதி எனக்குண்டு தான்!
ஆனால், உள்ளத்தால் தொடுவதற்கு
என் சிற்றறிவும், நானும் முடங்கிக்
கொள்ளத்தான் வேண்டும்; நீயோ
முடக்கி விட்டேன் என்னை என்று
முடங்கலில் வருந்தி எழுதுகிறாய்...

"பணமும், ஆடம்பரமும் நோக்கி முடங்குவது வாழ்க்கை அல்ல"
என்ற உன் அறிவுரை

ஊருக்கு மட்டுமல்ல; எனக்கும்தான்!
"முன்னேற்றப் பாதைகளின்
விளக்கும் நாமே; அதன் ஒளியும் நாமே;
நமக்கான மீட்பர்கள் நாம்தான்" என்ற உன்
போதி மரத்தைச் சிந்தனை ஒன்று போதாதா பீம்!

நீ முடங்கி இருந்தால் வரலாறு
அல்லவா முடங்கி இருக்கும்;
ஏழ்மையிலிருந்து விடுபடும்
எண்ணங்களும் முடங்கி இருக்குமே;
அவமானத்திலிருந்து வெளிவரும்
அத்தனை வாய்ப்புகளும் முடங்கி இருக்குமே;
சமூகத்தின் மானமும் முடங்கி இருக்கும்; ஏன்,
சமூக நீதியே முடங்கி இருக்கும்;
ஆனால் உன் பெயர் உள்ளவரை எதுதான் முடங்கும்?

நீ தந்த அரசியல் சாசனத்தை முடக்கவும் கூடுமோ?
இந்த நாடே முடங்கிப் போகுமே!

முடங்காத எண்ணங்களின் முழக்கத்தை உன்
மூலமாகத் தானே நாடு கண்டது!
இந்தப் பெருமை உனக்கு இருக்கும் வரை
நானும் அதில் இருப்பேன் தானே!

இதுதான் பீம்... நீ என்னை ஏற்றி வைத்த உச்சம்!
ஞானத் தேடல் தேடுபவர்க்கானது!
ஆனாலும் பிறர் முடங்கலைத் தவிர்த்த
நீயோ புத்தனையும் விஞ்சி நின்றாய்!
புத்தனின் அறம் ஆழ்ந்த
நீயும் ஒரு புத்தன் தான் பீம்!
நானும் உன் யசோதரை தான்!

- அன்னை ரமாபாய்

முனைவர் சிவ இளங்கோ, புதுச்சேரி

இந்தியாவின் 'வானிலை பெண்மணி' - அன்னா மணி

மேனகா நரேஷ்
நியூஜெர்சி

அன்னா மணி (1918–2001) இந்தியாவின் முன்னோடி இயற்பியலாளரும், வானிலை ஆய்வாளரும் ஆவார். இந்தியாவின் 'வானிலை பெண்மணி' (Weather Woman of India) என்று அழைக்கப்படும் இவர், வானிலை முன்னறிவிப்பு, சூரிய ஆற்றல் துறைகளில் பெரும் மாற்றங்களைக் கொண்டு வந்தார். இந்தியா இறக்குமதி செய்துகொண்டிருந்த நூற்றுக்கும் மேற்பட்ட வானிலை ஆய்வு கருவிகளை உள்நாட்டிலேயே தயாரித்துத் தரப்படுத்தினார். 1960-களில் இந்தியாவின் முதல் ஓசோன் ஆய்வு கருவியை (Ozone Sonde) உருவாக்கி, ஓசோன் படலத்தைக் கண்காணிப்பதில் முக்கியப் பங்காற்றினார். சூரியக் கதிர்வீச்சு, காற்றின் வேகம் குறித்த தரவுகளை இந்தியா முழுவதும் சேகரித்து, காற்றாலை ஆற்றல் திட்டங்களுக்கு அடித்தளம் அமைத்தார். நோபல் பரிசு பெற்ற சர் சி.வி. ராமனின் வழிகாட்டுதலில் ஒளிச்சிதறல் குறித்து ஆய்வு செய்தார். அவரது விடாமுயற்சியால் இந்தியா வானிலை கருவிகள் தயாரிப்பில் தன்னிறைவு பெற்றது.

பிறப்பு, ஆரம்பகால வாழ்க்கை

அன்னா மணி தென் இந்தியாவின் திருவாங்கூர் சமஸ்தானத்தில், பீருமேடு என்ற ஊரில் 1918ஆம் ஆண்டு, ஆகஸ்ட் 23 ஆம் தேதி பிறந்தார். எட்டுக் குழந்தைகள் கொண்ட குடும்பத்தில் இவர் ஏழாவது குழந்தை. அன்னா மணியின் தந்தை ஒரு சிவில் பொறியாளர்; அவருக்குப் பெரிய ஏலக்காய் தோட்டங்களும் இருந்தன. அன்னாவின் குடும்பம் பழமையான சிரியன் கிறிஸ்தவத் தேவாலயத்தைச் சேர்ந்தது. எனினும், அவரது தந்தை வாழ்க்கை முழுவதும் நாத்திகராகவே இருந்தார்.

அன்னா மணியின் குடும்பம், மேல் தர தொழில்முறை குடும்பமாக இருந்தது. குழந்தைப் பருவத்திலிருந்தே ஆண் குழந்தைகள் உயர்நிலைத் தொழில்களுக்குத் தயார் செய்யப்பட, பெண் குழந்தைகள் திருமணத்திற்குத் தயாராக்கப்பட்டனர். ஆனால் அன்னா மணி இதை ஏற்க மறுத்தார். அவரது குழந்தைப் பருவம் புத்தகங்களில் முழுமையாக மூழ்கியவாறு கழிந்தது. தனது எட்டாவது பிறந்தநாளில், குடும்பத்தின் வழக்கமான வைர காது குண்டலங்களைப் பெற மறுத்து, அதற்குப் பதிலாக "என்சைக்கிளோபீடியா பிரிட்டானிக்கா" தொகுப்பைத் தேர்ந்தெடுத்தார். புத்தகங்களின் உலகம் அவருக்குப் புதிய சிந்தனைகளைத் திறந்ததுடன், சமூக

நீதி பற்றிய ஆழமான உணர்வையும் அளித்தது. அவரது வாசிப்புப் பழக்கமே அவரது வாழ்க்கைப் பயணத்தை வடிவமைத்தது.

வைக்கம் சத்தியாகிரகம் ஏற்படுத்திய தாக்கம்

1925ஆம் ஆண்டில், வைக்கம் சத்தியாகிரகத்தின் உச்சக்கட்டத்தில், திருவாங்கூரில் உள்ள மக்கள் போராட்டம் நடத்தினர். வைக்கம் நகரில் உள்ள ஒரு கோவிலை ஒட்டிய சாலையில் தாழ்த்தப்பட்டவர்கள் (தலித் மக்கள்) செல்லத் தடை செய்ததற்கு எதிராக இந்தப் போராட்டம் நடந்தது. இந்தப் போராட்டத்திற்கு ஆதரவு அளிக்க மகாத்மா காந்தி வைக்கத்திற்கு வந்தார். 'ஒரே சாதி, ஒரே மதம், ஒரே கடவுள்' என்ற சத்தியாகிரகத்தின் கோஷம், சாதி வேறுபாடின்றி அனைத்து இந்துக்களுக்கும் கோவில்களில் நுழைய அனுமதி வழங்க வேண்டும் என்று வலியுறுத்திய முன்னேற்றவாதிகளின் முழக்கமாக அமைந்தது. இந்தச் சத்தியகிரகமும், குறிப்பாகக் காந்தியின் வருகையும், இலட்சியவாதியான அன்னா மணியிடம் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தின.

பின்னர் வந்த ஆண்டுகளில், தேசிய இயக்கம் வேகமடைந்து, இந்திய தேசிய காங்கிரஸ் சுதந்திரத்தைதனதுஇலக்காகஏற்றுக்கொண்டபோது, அன்னா மணி தேசிய அரசியலின் மீது அதிக ஈர்ப்பைக் கொண்டார் . அவர் எந்த ஒரு குறிப்பிட்ட இயக்கத்திலும் இணைக்கப்படாதிருந்தாலும், தனது தேசிய உணர்வுகளை வெளிப்படுத்தும் அடையாளமாகக் காதி (கைத்தறி ஆடைகள்) மட்டுமே அணிந்தார். தேசிய உணர்வு அவருக்குத் தனிப்பட்ட சுதந்திரத்தை அடையப் போராடும் வலுவான மனநிலையையும் வழங்கியது.

கல்வியும் ஆராய்ச்சிப் பணிகளும்

தனது சகோதரிகள் இளம்வயதில் திருமணம் செய்துகொண்டதைப் போல அல்லாமல், உயர்கல்வியைத் தொடர வேண்டும் என்று அவர் வலியுறுத்தியபோது, அவரது குடும்பத்திலிருந்து வெளிப்படையான எதிர்ப்போ ஊக்கமோ எதுவும் இல்லை.

அன்னா மணி முதலில் மருத்துவம் படிக்க விரும்பினார்; அது சாத்தியமாகாதபோது, தனக்கு விருப்பமான இயற்பியலைத் தேர்ந்தெடுத்தார். அவர் மெட்ராஸ் (இப்போது சென்னை) நகரிலுள்ள பிரெசிடென்சி கல்லூரியில் இயற்பியலில் ஹானர்ஸ் பட்டப்படிப்பில் சேர்ந்தார். 1940ஆம் ஆண்டு, கல்லூரிப் படிப்பை முடித்த ஒரு ஆண்டுக்குப் பிறகு, இந்திய அறிவியல் கழகத்தில் இயற்பியல் ஆராய்ச்சி செய்ய உதவித்தொகை பெற்றார் அன்னா மணி. அவர் சி. வி.ராமன் அவர்களின் ஆய்வகத்தில் முதுநிலை மாணவியாகச் சேர்க்கப்பட்டு, வைரங்கள் மற்றும் மணிக்கற்களின் (rubies) ஸ்பெக்ட்ரோஸ்கோபி ஆய்வில் ஈடுபட்டார். அந்தக் காலத்தில்,

ராமனின் ஆய்வகம் முழுவதும் வைரங்களின் ஆய்வில் மூழ்கியிருந்தது. இதற்குக் காரணம், படிக இயக்கவியலில் மேக்ஸ் போர்ன் என்ற ஆராய்ச்சியாளரிடமும் வைரத்தின் கட்டமைப்பில் கேத்லீன் லான்ஸ்டேல் என்ற ஆராய்ச்சியாளரிடமும் ராமனுக்கு ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள். சி.வி.ராமனிடம் இந்தியா மற்றும் ஆப்பிரிக்காவிலிருந்து சேகரிக்கப்பட்ட 300 வைரங்கள் இருந்தன. அவரது மாணவர்கள் பெரும்பாலும் வைரங்களின் பல்வேறு அம்சங்களைப் பற்றிய ஆய்வுகளில் ஈடுபட்டிருந்தனர்.

அன்னா மணி 32 வைரங்களின் பிரகாசம் (fluorescence), உறிஞ்சல் (absorption), மற்றும் ராமன் ஸ்பெக்ட்ரா ஆகியவற்றைப் பதிவு செய்து பகுப்பாய்வு செய்தார். இவ்வாய்வுகளில் வெப்பநிலை சார்பு மற்றும் துருவ விளைவுகளையும் ஆய்வு செய்தார். இந்த ஆய்வுகள் மிகவும் நீண்டதாகவும், கடினமானதாகவும் இருந்தன. அன்னா மணி சில சமயங்களில் முழு இரவும் வேலை செய்ய வேண்டியிருந்தது.

1942 முதல் 1945 வரை, வைரங்கள் மற்றும் மணிக்கற்களின் ஒளிர்வைப் பற்றிய ஐந்து தனிப்பட்ட ஆய்வுக் கட்டுரைகளை வெளியிட்டார். 1945 ஆகஸ்ட் மாதத்தில், அவர் தனது முனைவர் பட்ட ஆய்வுக் கட்டுரையை மதராஸ் பல்கலைக்கழகத்திற்குச் சமர்ப்பித்தார் . மேலும், இங்கிலாந்தில் பயிற்சி பெற அரசு உதவித்தொகை பெற்றார்.

ஆனால், அன்னா மணிக்கு முனைவர் பட்டம் (PhD) வழங்கப்படவில்லை. அந்தக் காலத்தில் இந்திய அறிவியல் கழகத்தில் செய்யப்பட்ட ஆராய்ச்சிகளுக்கான பட்டங்களை வழங்கிய மதராஸ் பல்கலைக்கழகம், அன்னா மணிக்கு முதுகலைப் (MSc) பட்டம் இல்லை என்பதால் அவருக்கு முனைவர் பட்டம் வழங்க முடியாது என்று கூறியது. அவர் இயற்பியலிலும் இரசாயனவியலிலும் ஹானர்ஸ் பட்டம் பெற்றிருந்ததும், தனது பட்டப்படிப்பு அடிப்படையில் இந்திய அறிவியல் கழகத்தில் மேல்படிப்புக்கான உதவித்தொகை பெற்றிருந்ததும் அவர்கள் கவனிக்கவில்லை.

இந்த அநியாயத்திற்காக அன்னா மணி எந்த விதத்திலும் மனக்கசப்போ வருத்தமோ கொள்ளவில்லை. முனைவர் பட்டம் இல்லாதது தனது வாழ்க்கையில் பெரிதாக வேறுபாடு ஏற்படுத்தவில்லை என்று அவர் கருதினார்.

ராமன் ஆய்வகத்தில் தனது ஆராய்ச்சியை முடித்தவுடன் அவர் இங்கிலாந்திற்குப் புறப்பட்டார். இயற்பியலில் ஆராய்ச்சி மேற்கொள்ளவே அவர் விரும்பியிருந்தாலும், அப்போது கிடைத்த உதவித்தொகை காரணமாக வானிலை கருவி உருவாக்கத்தில் (meteorological instrumentation) நிபுணத்துவம் பெற்றார்.

1948ஆம் ஆண்டு, சுதந்திர இந்தியாவிற்குத் திரும்பிய அன்னா மணி, புனேயில் உள்ள இந்திய வானிலை ஆய்வு துறையில் பணியில் சேர்ந்தார்.

இந்திய வானிலை ஆய்வு துறையில் ஆற்றிய பங்களிப்புகள்

அந்தத் துறையில், கதிர்வீச்சு அளவீட்டு கருவிகளை உருவாக்கும் பொறுப்பில் இருந்தார். கருவிகள் பிரிவுக்கு எஸ்.பி. வெங்கிடேஷ்வரன் தலைமையேற்றிருந்தார். இந்தியா வானிலை

ஆய்வு கருவிகளில் தன்னிறைவு பெற வேண்டும் என்ற உறுதியும் நோக்கமும் கொண்டவர் அவர்.

அந்தக் காலத்தில் நாட்டில் தொழில்பயிற்சி நிலையங்கள் மிகச் சிலவே இருந்தன. அன்னா மணி தனக்கு முன் மிகப் பெரிய சவால்கள் இருப்பதை விரைவில் உணர்ந்தார். இருந்தாலும் வெற்றி பெற வேண்டும் என்ற உறுதியுடன் செயல்பட்டார். அவர் முதலில் பதிவு செய்யும் மழைமானியை *(Rain gauge)* உருவாக்கினார். அதனைத் தொடர்ந்து ஈரப்பதம் பதிவு செய்யும் கருவி(ஹைக்ரோகிராப்), வெப்பநிலை பதிவு செய்யும் கருவி (தெர்மோகிராப்), காற்றழுத்தத்தைப் பதிவு செய்யும் கருவி (பாரோகிராப்), காற்றின் வேகத்தைப் பதிவு செய்யும் கருவி(அனீமோகிராப்) போன்ற கருவிகள் உருவாக்கப்பட்டன; மொத்தத்தில் சுமார் நூறு வகைக் கருவிகள் தயாரிக்கப்பட்டன.

அனைத்து விதமான கருவிகளுக்கும் தேவையான விரிவான பொறியியல் குறிப்புகள், வரைபடங்கள் மற்றும் தொழில்நுட்ப கையேடுகளை அவர் தயாரித்தார். ஐந்து ஆண்டுகளுக்குள் வானிலை கருவிகளின் இறக்குமதி முற்றிலும் நிறுத்தப்பட்டது.

அதன்பின், அழுத்தம், வெப்பநிலை , காற்றின் அளவீட்டிற்கான முதன்மை தரநிலை கருவிகளையும் நுட்பங்களையும் நிறுவுவதில் அவர் தனது கவனத்தைத் திருப்பினார். துல்லியமான காற்றழுத்த அளவீடு அனைத்து வானிலை சேவைகளுக்கும் அடிப்படைத் தேவையாக இருந்தது. அந்தப் பொறுப்பை அவர் நேரடியாக ஏற்றுக்கொண்டு, நாடு முழுவதும் பயணம் செய்து, புனே மற்றும் கொல்கத்தாவில் வைக்கப்பட்டிருந்த முதன்மை தரநிலைகளுடன் ஒப்பிட்டு ஆய்வு செய்யக்கூடிய பிராந்திய தரநிலை பாரோமீட்டர் நிலையங்களை நிறுவினார்.

சர்வதேச புவியியல் ஆண்டு *(IGY)*

1957–58 ஆம் ஆண்டில் நடைபெற்ற சர்வதேச புவியியல் ஆண்டு *(IGY)* திட்டத்தில் இந்தியா பங்கேற்றது. சர்வதேச வானிலை மற்றும் வளிமண்டல இயற்பியல் சங்கத்தின் *(IAMAP)* தலைவராக இருந்த கே. ஆர். ராமநாதன், அன்னா மணியை இந்தியா முழுவதும் சூரிய கதிர்வீச்சு அளவீட்டு நிலையங்கள் அமைக்க ஊக்குவித்தார்.

அதே சமயம், புனே ஆய்வகத்தில் முழுமையான கதிர்வீச்சு கருவிகளின் வடிவமைப்பு மற்றும் மேம்பாட்டு பணியையும் அன்னா மணி தொடங்கினார். இந்தக் கருவிகளில் பைர்ஹீலியோமீட்டர்கள் *(pyrheliometers)*, பைரானோமீட்டர்கள் *(pyranometers)*, மற்றும் நெட் பைர்ஜியோமீட்டர்கள் *(net pyrgeometers)* அடங்கும். இவ்வளவு துல்லியமான கருவிகள் அந்நாளில் மேற்கு நாடுகளின் தனியுரிமையாக இருந்தன; அவற்றின் வடிவமைப்பு விவரங்களும் பெரும்பாலும் ரகசியமாக வைக்கப்பட்டிருந்தன. ஆகவே அடிப்படைக் கோட்பாடுகளிலிருந்தே தொடங்கி முழுத் தொழில்நுட்பத்தையும் தாங்களே உருவாக்க வேண்டியிருந்தது. கருவிகள் வெற்றிகரமாகத் தயாரிக்கப்பட்ட பிறகு, இந்தியா தனது கதிர்வீச்சு நிலையங்களை விரிவுபடுத்தியது.

1959–60-ல் அன்னா மணி 7 மாதங்கள் அமெரிக்காவில் பயிற்சி பெற்று புதிய உற்பத்தி நுட்பங்களைக் கற்றார்; பின்னர் அவை இந்திய வானிலை ஆய்வுத் துறை (India Meteorological Department) பணிமனைகளில் பயன்படுத்தப்பட்டன. திரு.வெங்கிடேஸ்வரன் அவர்களின் ஓய்விற்குப் பிறகு, அன்னா மணி வானிலை ஆய்வு கருவிகள் பணியைத் திறமையாக முன்னெடுத்தார்.

கருவிகளின் தரம், நம்பகத்தன்மை, சோதனை மற்றும் அளவுத்திருத்தத்தில் கடுமையான கட்டுப்பாடுகளை ஏற்படுத்தினார். ஒவ்வொரு கருவிக்கும் வழிமுறை கையேடுகள் மற்றும் பொறியியல் குறிப்புகளைத் தயாரித்தார். களப்பணியாளர்களுக்குப் பயிற்சி அளித்து, தரமான தரவுகளைச் சேகரித்தனர். புனே மையம் உலக வானிலை அமைப்பால் (World Meteorological Organization)ஆசியப் பிராந்திய கதிர்வீச்சு மையமாக அங்கீகரிக்கப்பட்டது.

1962ஆம் ஆண்டு, உலக வானிலை அமைப்பின் கருவிகள் மற்றும் கண்காணிப்பு முறைகள் ஆணையத்தின் (Commission for Instruments and Methods of Observations) மூன்றாவது கூட்டம் புதுத் தில்லியில் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தின் போது, அன்னா மணி கதிர்வீச்சுக் கருவிகள் மற்றும் கண்காணிப்புகள் தொடர்பான பணிக்குழுவின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். மேலும், சிறப்புக் கதிர்வீச்சுக் கருவிகள் மற்றும் கண்காணிப்புகள் தொடர்பான பணிக்குழுவிலும் உறுப்பினராக நியமிக்கப்பட்டார். இதற்கிடையில், ஆசியப் பிராந்திய சங்கம்–IIக்கான கதிர்வீச்சு பணிக்குழுவின் தலைவராகவும் அவர் நியமிக்கப்பட்டார்.

ஒப்பீட்டு ஆய்வுகள்

அன்னா மணி கதிர்வீச்சு கருவிகளின் துல்லியத்தை மேம்படுத்த உலகளாவிய ஒப்பீட்டு ஆய்வுகளை நடத்தினார். 58 நாடுகளின் ஒத்துழைப்புடன் 1964–1968 காலத்தில் சூரியஒளி பதிவுக் கருவி ஆய்வுகள் நடைபெற்றன. பைரானோமீட்டர் (சூரியக்கதிர்வீச்சுச் செறிவுஅளவி) ஆய்வுகள் லெனின்கிராட், வியன்னா, புனே ஆகிய இடங்களில் நடத்தப்பட்டன. நெட் பைர்ரேடியோமீட்டர் (இருபக்கக் கதிர்வீச்சு அளவி) ஆய்வுகள் ஆஸ்பென்டேல், பூனே, ஹாம்பர்க், செயின்ட பீட்டர்ஸ்பர்க் ஆகிய மையங்களில் நடைபெற்றன. கருவிகளின் துல்லியத்தை உறுதி செய்ய மாதாந்திர அளவுத்திருத்தங்கள் செய்யப்பட்டன.

சர்வதேச பைரோஹீலியோமீட்டர் (கதிர் வெப்பமானி) ஸ்கேல் (International Pyrheliometer Scale 1957) என்ற சர்வதேச தரநிலையை நிலைநிறுத்தும் பணிகளில் அன்னா மணி முக்கியப் பங்கு வகித்தார்.

1964 மற்றும் 1969ஆம் ஆண்டுகளில் சுவிட்சர்லாந்தின் டாவோஸ் நகரில் நடைபெற்ற சர்வதேச பைர்ஹீலியோமீட்டர் ஒப்பீடுகள் நிகழ்ச்சிகளில் (International Pyrheliometer Comparisons) தொழில்நுட்ப இயக்குநராகப் பணியாற்றினார்.

அன்னா மணி, உலக வானிலை அமைப்பு (World Meteorological Organization) மூலம் டாவோஸ்,சுவிட்சர்லாந்தில் உள்ள இயற்பியல் வானிலை ஆய்வு நிலையத்தை (Physikalisches Meteorologisches Observatorium) உலகக் கதிர்வீச்சு மையமாகவும், ரஷ்யாவின் செயின்ட்

பீட்டர்ஸ்பர்க் (St. Petersburg) நகரத்தை உலகக் கதிர்வீச்சுத் தரவு மையமாகவும் அறிவிக்கச் செய்தார்.

கதிர்வீச்சு ஆய்வுகள்

வட இந்திய வளிமண்டலத்தில் தூசி அடர்த்திக் குறித்து ஆய்வு செய்ய, அமெரிக்காவைச் சேர்ந்த பேராசிரியர் பைரன் மற்றும் பீட்டர் குஹ்ன் ஆகியோருடன் இணைந்து 1963ல் பூனே, புதுதில்லி, ஸ்ரீநகர் ஆகிய இடங்களில் பலூன் மூலம் கதிர்வீச்சு ஆய்வுகள் நடத்தினார்.

அவர்களின் வடிவமைப்பை அடிப்படையாகக் கொண்டு இந்தியாவில் கதிர்வீச்சுக் கருவிகள் உருவாக்கப்பட்டன; இருவாரத்திற்கு ஒருமுறை கதிர்வீச்சு அளவீடு திட்டம் தொடங்கப்பட்டது. ஜப்பான் வானிலை ஆய்வு மையம் (Japan Meteorological Agency) கருவிகளுடன் ஒப்பீட்டு ஆய்வும் நடத்தப்பட்டது.

1969க்குள் இந்தியாவில் 24 கதிர்வீச்சு நிலையங்கள் உருவாக்கப்பட்டன. பூனே, ஆசியா மற்றும் ஆப்பிரிக்க நாடுகளுக்கான கதிர்வீச்சியல் பயிற்சி மையமாக வளர்ந்தது. அவர் சர்வதேச புவிப்பரப்பியல் மற்றும் புவி இயற்பியல் ஒன்றியம் (International Union of Geodesy and Geophysics) கதிர்வீச்சு ஆணையத்தின் நீண்டகால உறுப்பினராக இருந்தார். இந்திய சூரியசக்தி சங்கம் (Indian Solar Energy Society) உருவாக்கத்திலும் முக்கியப் பங்கு வகித்தார்.

இந்தியத் தர நிர்ணய அமைவனம் (Bureau of Indian Standards) அமைப்பில் இருந்து, இந்தியாவில் வானிலை கருவிகள் உற்பத்திக்கான தொழில்நுட்ப வரைபடங்கள், விவரக்குறிப்புகள் ஆகியவற்றைத் தயாரித்தார். இந்தியா மெட்ரிக் முறைக்கு மாறியபோது, அனைத்து வானிலை கருவிகள், கையேடுகள், தொழில்நுட்ப அமைப்புகள் போன்றவற்றை மாற்றும் கடினமான பணியை வெற்றிகரமாக நிறைவேற்றினார்.

சர்வதேச வானிலை அமைப்பு (WMO) மற்றும் உலக வானிலை அமைப்பின் கருவிகள் மற்றும் கண்காணிப்பு முறைகள் ஆணையம் (CIMO) போன்ற உலகளாவிய அமைப்புகளில் முக்கியப் பணிக்குழுக்களில் செயல்பட்டு, மழை அளவீட்டுக் கருவிகள், கதிர்வீச்சு அளவீட்டு முறைகள், வளிமண்டல மின்சாரம் போன்றவற்றின் தரநிலைகளை உருவாக்குவதில் முக்கியப் பங்கு வகித்தார். உலகளவில் பயன்படுத்தப்படும் வானிலை கருவிகளின் வழிகாட்டி நூல்களைத் திருத்தி மேம்படுத்தும் பொறுப்பையும் அவர் திறம்பட மேற்கொண்டார்.

வானத்தில் பறக்கும் விமானங்கள் முதல் உயரமான மலைப்பகுதிகள் வரை, கடல் கப்பல்கள் வரை—பல சூழல்களில் சூரிய கதிர்வீச்சு மற்றும் வளிமண்டல பண்புகளை நேரடியாக அளந்து ஆய்வு செய்தார். அவரது ஆய்வுகள் மேகங்களின் தாக்கம், வளிமண்டல அடுக்குகள் மற்றும் பூமியின் கதிர்வீச்சு சமநிலை பற்றிய புரிதலை உலகளவில் விரிவாக்கின.

ஓசோன் ஆராய்ச்சி

இந்தியாவின் ஓசோன் ஆராய்ச்சியில் அவர் செய்த பங்களிப்பு மிக முக்கியமானது. இந்தியாவில் ஓசோன் அளவீட்டுக்கான "ஓசோன்-சோண்ட்" கருவியை உருவாக்கி, 1964-ல் முதல் வெற்றிகரமான அளவீட்டை பதிவு செய்தார். இதன் மூலம் இந்தியா வெப்பமண்டல ஓசோன் ஆய்வில் முன்னணி நாடாக உயர்ந்தது. பின்னர் அண்டார்டிகா உள்ளிட்ட பகுதிகளில் ஓசோன் துளை கண்டறியப்பட்டபோது, இந்தியாவின் முன்கூட்டிய தரவுகள் உலக அறிவியலுக்கு உறுதிப்படுத்தலாக அமைந்தன.

ஓய்வுக்குப் பிறகு ஆற்றிய பணிகள்

ஓய்வுக்குப் பிறகும் அவரது அறிவியல் பயணம் நிற்கவில்லை. பெங்களூரில் உள்ள ராமன் ஆராய்ச்சி மையத்தில் (Raman Research Institute) பணியாற்றி, வளிமண்டல ஈரப்பதம் மற்றும் வானியல் அளவீடுகளில் முக்கிய ஆய்வுகளை மேற்கொண்டார்.

அதனைத் தொடர்ந்து, இந்தியாவின் சூரிய கதிர்வீச்சு மற்றும் காற்றாலை ஆற்றல் வளங்களை மதிப்பிடும் பெரும் தேசிய திட்டங்களை வழிநடத்தினார். அவரது முயற்சியால் இந்தியாவில் காற்றாலை ஆற்றல் தரவுகள் முறையாகச் சேகரிக்கப்பட்டு, நவீன புதுப்பிக்கத்தக்க ஆற்றல் வளர்ச்சிக்கு அடித்தளம் அமைக்கப்பட்டது.

1980 ஆம் ஆண்டு "தி ஹாண்ட்புக் ஃபார் சோலார் ரேடியேஷன் டேட்டா ஃபார் இந்தியா" (The Handbook for Solar Radiation Data for India) மற்றும் 1981 ஆம் ஆண்டு "சோலார் ரேடியேஷன் ஓவர் இந்தியா" (Solar Radiation over India) என்ற இரண்டு புத்தகங்களை வெளியிட்டார். மேலும், இந்தியாவில் காற்றாலை ஆற்றலை பயன்படுத்துவதற்கான பல திட்டங்களிலும் ஈடுபட்டார்.

பின்னர், பெங்களூரின் தொழிற்புறப் பகுதியில், காற்றின் வேகத்தையும் சூரிய ஆற்றலையும் அளவிடும் கருவிகளைத் தயாரிக்கும் ஒரு சிறிய நிறுவனத்தை அன்னா மணி தொடங்கினார். இந்தியாவில் காற்றாலை மற்றும் சூரிய ஆற்றல் மேம்பட, நாட்டின் பல பகுதிகளில் சூரிய கதிர்வீச்சு, காற்றின் இயங்குமுறைகளைப் பற்றிய விரிவான அறிவு அவசியம் என அவர் நம்பினார். தன் நிறுவனத்தில் தயாரிக்கப்பட்ட கருவிகள் இந்தத் தகவல்களைச் சேகரிப்பதில் பரவலாகப் பயன்படும் என்ற நம்பிக்கையையும் அவர் கொண்டிருந்தார்.

1984 இல் இந்தியாவில் காற்றாலை ஆற்றல் வளங்களை மதிப்பிடும் திட்டத்தையும் அவர் வழிநடத்தினார். தமிழ்நாடு மற்றும் குஜராத் உள்ளிட்ட பல மாநிலங்களில் காற்றின் வேக அளவீட்டு நிலையங்கள் நிறுவப்பட்டன. 1996 இல் உடல்நலக்குறைவால் ஓய்வு பெறும் வரை, சுமார் 150 நிலையங்களிலிருந்து மதிப்புமிக்கக் காற்றாலை தரவுகளைச் சேகரித்தார்.

"விண்ட் எனர்ஜி ரிசோர்ஸ் சர்வே இன் இந்தியா" (Wind Energy Resource Survey in India) என்ற நான்கு தொகுதிகள் கொண்ட நூலில் அவர் இந்தத் தரவுகளை வெளியிட்டார். இந்நூல்கள் இன்றும் இந்திய காற்றாலை ஆற்றல் ஆய்வாளர்கள் மற்றும் பொறியாளர்களுக்கான முக்கிய ஆதார நூல்களாக விளங்குகின்றன.

விருதுகள் மற்றும் கௌரவங்கள்

அன்னா மணி "கரன்ட் சயின்ஸ் அஸோசியேஷன் "(Current Science Association) (1989–94) அமைப்பின் தலைவராகப் பணியாற்றினார். அவர் இந்திய அறிவியல் அகாடமியின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு (1971–79) அதன் கவுன்சிலிலும் பணியாற்றினார். மேலும் மூன்று ஆண்டுகள் அதன் செயலாளர்களில் ஒருவராக இருந்தார். 1980 முதல் 1995 வரை அதன் செய்திமடல் 'Patrika'-வைத் தொகுத்து வெளியிட்டார். 1977ஆம் ஆண்டு இந்திய தேசிய அறிவியல் அகாடமிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு 1982–84 காலகட்டத்தில் அதன் கவுன்சிலிலும் பணியாற்றினார்.

இந்திய வானிலை அறிவியல் சங்கம், அமெரிக்க வானிலை அறிவியல் சங்கம், அமெரிக்கப் புவியியல் ஒன்றியம், ராயல் வானிலை அறிவியல் சங்கம், இன்ஸ்டிடியூஷன் ஆஃப் இன்ஸ்ட்ரூமென்டேஷன் அண்ட் டெலிகம்யூனிகேஷன் என்ஜினியர்ஸ், இந்திய சோலார் எனர்ஜி சங்கம் , சர்வதேச சோலார் எனர்ஜி சங்கம் ஆகியவற்றின் உறுப்பினராகவும் இருந்தார். அவர் கே.ஆர். ராமநாதன் பதக்கத்தை (1987) பெற்றார். நாட்டின் பல பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள காற்றாலை மின் நிலையங்கள், அவற்றின் பெரிய இறக்கைகள் காற்றில் ஒத்திசைவாகச் சுழன்று 1000 மெகாவாட்டுக்கும் அதிகமான மின்சாரத்தை உற்பத்தி செய்வது, அன்னா மணியின் மகத்தான நம்பிக்கைக்கும் அவருடைய பங்களிப்புக்கும் கிடைத்த மிகப்பெரிய வெற்றியாகும்.

இயற்கையை நேசித்தவர்

அவர் பழமையான கிறிஸ்தவத் திருச்சபையைச் சேர்ந்தவராக இருந்தாலும், மதநம்பிக்கையற்ற (அக்னாஸ்டிக்) நபராக இருந்தார். அவர் தனது குழந்தைப் பருவத்தில் உருவான இயற்கை மீது கொண்ட ஆர்வத்தை வாழ்நாள் முழுவதும் தொடர்ந்தார். வாசிப்பில் மிகுந்த ஆர்வம் கொண்டவர், இசை கேட்பதையும் விரும்பினார். அவர் நாய்களை மிகவும் நேசித்தார் எனவே செல்லப்பிராணகளாக நாய்களை வளர்த்தார். உலகம் முழுவதும் அவருக்கு நண்பர்களும், ரசிகர்களும் இருந்தனர். அன்னா மணி திருமணம் செய்துகொள்ளவில்லை.

மறைவு

1994ஆம் ஆண்டு அவருக்கு ஸ்ட்ரோக் ஏற்பட்டது. தனது வாழ்க்கையின் கடைசி ஆண்டுகளை அவர் தனது மூத்த சகோதரி செல்லம்மா சாண்டியுடன் கழித்தார். அன்னா மணி 2001 ஆகஸ்ட் 16 ஆம் தேதியன்று திருவனந்தபுரத்தில் காலமானார்.

அன்னா மணி செய்த ஆய்வுகள், இந்தியாவின் வானிலை அறிவியல் வளர்ச்சிக்கு முக்கிய அடித்தளமாக அமைந்தது. ஒரு சிறந்த விஞ்ஞானியாக மட்டுமல்லாது, உறுதியான உழைப்பு, தன்னம்பிக்கை, அறிவியல் ஆர்வத்தின் சின்னமாகவும் திகழ்கிறார் இவர். பெண்களால் மிகப்பெரிய அறிவியல் சாதனைகளைப் படைக்க முடியும் என்பதை நிரூபித்த அறிவியல் ஆளுமை அன்னா மணி என்றால் அது மிகையாகாது. அவரின் வாழ்க்கை மாணவர்களுக்கும் ஆராய்ச்சியாளர்களுக்கும் தொடர்ந்து ஊக்கமளித்து வருகிறது.

நூலாய்வு

"முகம் தெரியாத அறவிகள்"

நெல்லை.க .சோமசுந்தரி
(கவிஞர், எழுத்தாளர் ,தொல்லியல் ஆர்வலர்)

"அறவி" என்கிற புத்தகத்தின் தலைப்பை வாசிக்கும் போதே மணிமேகலையும், சிலப்பதிகாரமும் நம் முன்னே வந்து போவது தவிர்க்க முடியாதாகிவிடுகிறது. அதில் "அறவி" என்கிற சொல் பாடல்களில் ஒலிக்கும். அறவி என்கிற சொல்லிற்குத் துறவி என்பதாக முன்னுரையில் இந்நூலின் ஆசிரியர் அகிலா அவர்கள் பொருளைக் குறிப்பிடும் போது, அக நிலை சார்ந்த இப்புத்தகம் எதை நோக்கிப் பயணப்பட இருக்கிறது என்பதாக இதன் பக்கங்களைத் திருப்பினேன்.

ஒரு மூன்று தலைமுறைகளுக்குள் பெண்ணை சுற்றி நடைபெறும் வாழ்வியல் சார்ந்த நிகழ்வுகளை சமூகத்தின் நெருக்கடிகளில் அவள் பெறுகின்ற அனுபவங்களை இருபதாம் நூற்றாண்டின் தொடக்கம், அதன் பிற்காலம் பின் இருபத்தோராம் நூற்றாண்டு வரை பெண்ணிடம் நிகழ்ந்த பரிமாண மாற்றங்களையும், வாழ்வியல் போக்குகளையும் மிக அழகாக "தேவகி" எனும் கதாபாத்திரத்தின் வழியே எழுத்தாளர் நம்மிடம் எடுத்துக் கூறுகிறார்.

எந்த காலமாக இருந்தாலும், பெண் என்பவளின் மையப்புள்ளி என்பது எத்தனை வலைப்பின்னல் நிறைந்த கட்டமைப்புகளைக் கொண்ட ரகசியங்களையும், அதிசயங்களையும் உள்வாங்கிய பெட்டகமாய் நிறைந்திருக்கிறது. பெண்ணின் சமூகம், அதைச் சார்ந்த அவளின் உலகம், அதன் அடிப்படையில் அவளிடம் வெவ்வேறு கால கட்டங்களில் மாறும் உளவியல் போக்கு, ஆகியவற்றை இப்புதினத்தின் வழியே நம்மால் உணர்ந்து கொள்ள முடிகிறது.

தேவகி என்கிற பெண்ணின் வாழ்வில் செல்லம்மாள் என்கிற ஆச்சியின் ஆளுமையும், வசுமதி என்கிற மனதிற்கு நெருக்கமான தோழியின் அன்பும், யமுனா என்கிற மகளின் உயிரோட்டமான வாழ்வும் எனக் கதைக்களம் முழுவதும் தேவகியை நோக்கியே அனைத்து கதாபாத்திரங்களும் சூழப்பட்டுள்ளது.

தேவகி - ஓநாய் என்கிற தலைப்பில் ஒரு பயங்கரமான கனவுடன் தொடங்கும் முதல் பகுதி உளவியல் சார்ந்த ஒரு உணர்வோடு எதையோ நம்மோடு பேசப்போகிறது என்பதை நுட்ப குறியீடாக ஆசிரியர் தெரிவிப்பது அழகான தொடக்கம். இங்கிலாந்தில் ஆரம்பிக்கும் ஒரு கதை தெற்கத்தி பக்கம் திருச்செந்தூரில் பேசப்படும் நெல்லை தமிழை மிக யதார்த்தமாக இதில் இடம்பெறும் கதை மாந்தர்களின் வழியே அக்காலகட்டத்தில்

வாழ்ந்த ஒரு வாழ்வியலை மிக நுட்பமாகப் பதிவு செய்திருப்பது மட்டுமன்றி இறுதியில் தொடங்கிய இடத்திலேயே அதன் பயணம் இங்கிலாந்தில் முடிவடைவது நாமும் அக்கதையின் ஊடாக நகர்வது போன்ற ஒரு உணர்வை வரவழைக்கிறது.

இங்கிலாந்தில் தன் பெண் யமுனாவுடன் வாழும் தேவகியின் கடந்த கால வாழ்வு எத்தனை ரகசியங்களையும், வலிகளையும் சுமந்து கிளை நதியாக நம்முடன் பயணிக்கிறது என்பதைக் கதாசிரியர் நமக்கு மிக அருகிலிருந்து பேசுகிறார். ஒவ்வொரு பகுதியிலும் தலைப்புடன் விரியும் கதையின் போக்கைப் படிமச் சரடு போலக் குறியீடாக நாவலில் இணைத்துக் கொண்டு வருவது அவரின் உத்தியாக வெளிப்படுகிறது.

திருநெல்வேலி பக்கம் இருக்கும் ஆச்சிமார்களின் வாழ்வியல் என்பது நமக்கு ஆச்சரியத்தைத் தரக்கூடியதாகவும் ஆளுமை மிகுந்ததாகவும் இருக்கும். குடும்ப கவுரவத்திற்காகவும், நன்மைக்காகவும் ஆச்சிமார்கள் முக்கியமான முடிவுகளை எடுக்கும் போது எதற்கும் அஞ்சாதவர்களாக, நிர்வாகங்களில் நிரூபிக்கக் கூடிய மனப்பாங்கு அவர்களிடம் இருப்பதை நம்மால் உணர முடியும் அப்படியாகத் தான் செல்லம்மா ஆச்சியின் கணவருடைய திருமணப் பந்தத்திற்குப் பிறகு ஆச்சியின் வாழ்வில் நடைபெறும் சில விஷயங்களை மிக அழகாக அக்கால கட்டத்தில் பெண்களுக்கான உலகம் எப்படி இருக்கும் என்பதை ஆசிரியர் தெரிவித்திருக்கிறார்.

"ஒரு பெண்ணுக்கு உறவே இல்லாத தனிமை பெரும் சுமை" என்பதைவிடச் சிறுவயதில் தேவகியின் மீது தாய்க்கு நிகரான சொந்த பெரிய தாய் மாமனே, இரண்டாவது படிக்கும் குழந்தையின் மீது அத்துமீறி உடலை வன்முறையாக்கியது தனக்கும் ஆச்சிக்கும் தெரிந்த ரகசியத்தை அது உளவியல் ரீதியாக எவ்வளவு பாதிப்பைத் தந்து அவளது இறுதிக் காலங்களில் யாரிடமும் சொல்ல முடியாமலேயே எவ்வாறு மனதை அழுத்துகிறது என்பதை நரக வேதனையாகப் பெண்ணின் உளவியல் போக்கை எழுத்தாளர் நுட்பமாகப் பதிவு செய்துள்ளார். இதன் பொருட்டு யாருக்கும் தெரியாமல் இருக்க, சமூகத்திற்குப் பயந்து மனநிலை சரியில்லாத இன்னொரு மாமனை, ஆச்சி தனக்குத் திருமணம் செய்து வைக்கும் போதும், அவனுடன் வாழும் காலங்களிலும் அதை மனதளவில் ஏற்றுக்கொண்டு தேவகி அறவியாகவே வாழ்கிறாள்.

நூலாசிரியர்
அகிலா, கோவை

"வசுமதி என்னும் பெண்ணுக்கு வீடு முழுதும் உறவுகள்" இருந்தும் அதுவும் சுமையாக அத்தனையும் இயந்திரகதியாக அவளைச் சமையல் செய்வதிலும், குழந்தை வளர்ப்பிலும்,

வீட்டைக் கவனிப்பதிலும், கணவன், மகன், மகள், மருமகள் பேரன், பேத்தி என இருக்கும் கூட்டுக் குடும்பத்தில் பாசம் எனும் போர்வையில் ஒரு உணர்ச்சிகரமான தொடர்பாக அவளைச் சுயநலம் கலந்து பயன்படுத்துவதை அப்பட்டமாக வீடுகளில் நடக்கும் நிகழ்வை மிக அழகாகக் கதைக் களத்தில் ஆசிரியர் கையாண்டாரிருப்பது அருமையாக உள்ளது.

பெண் என்பவள் மணிமேகலை போன்று துறவியாக வாழ வேண்டும் என்பது அல்ல அவள் வாழும் வாழ்வில் பல நேரங்களில் ஆசாபாசங்களைத் துறந்து ,தன்னிலை மறந்து எல்லாவற்றையும் இழந்து, தான் வேலை செய்யும் இடத்திலும், குடும்பத்திலும், தன்னை துறவியாக நிறுத்தி கொள்கிறாள். எல்லா காலங்களிலும் பெண்ணாக இருந்தாலும், பெண் குழந்தையாக இருந்தாலும் அவர்களில் மீது ஏற்படும் பாலியல் துஷ்பிரயோகம், ஒரு குடும்ப அமைப்பில் மட்டுமின்றி , ஒரு நாட்டின் போர் சூழலிலும் கூட பெண்கள் தான் கொடுமைப்படுத்தப்பட்டு வன்முறையாக்கப்படுகிறார்கள் என்பதையும் ஆணித்தரமாக ஆசிரியர் துறவியில் போக்கில் பதிவு செய்துள்ளார்.

இதையெல்லாம் தாண்டி பெண்ணை சுற்றிய உலகில் ஆண்களாகப் பிரவேசிப்பவர்கள் எல்லோரும் கெட்டவர்கள் அல்ல என்பதாக ,வேலய்யா, ராய்ஸ், சரவணன் ஆகியோரின் பாத்திரப்படைப்புகள் நேர்மறையாகக் கொஞ்ச நேரம் வந்தாலும் அழுத்தமான கதை மாந்தர்களாக ஆசிரியர் அமைத்திருப்பது வரவேற்கத்தக்கது .

வாழ்நாளில் எத்தனை துயரங்கள் இழப்புகள் வலிகள் வந்தாலும், நம்மை நேசிக்கவும் புரிந்து கொள்ளவும் செல்லமாகச் சண்டையிடவும் மனதைத் திறந்து பேசவும் ஒரே ஒரு உறவு இருந்தால், இந்த வாழ்வு அனைத்தும் பாலையாக இருந்தாலும் கடந்து விடும் மனம் பலம் பெற்றிடும் என்பதாகத் தேவகிக்கு அமைந்த அழகான நட்பாக வசுமதி பாத்திரம் அமைந்துள்ளது.

வெளிநாட்டில் வாழும் மனிதர்கள் எல்லாம் சந்தோஷமாகத் தான் இருக்கிறார்கள் என்பதாக நினைத்துக் கொண்டிருக்கும் சில மனிதர்களுக்கு அவர்களின் நினைவு முழுவதும் சொந்த மண்ணையும் உறவுகளையும் நட்புகளையும் வாழ்நாள் முழுவதும் நினைத்துக் கொண்டே தஞ்சம் சென்ற இடத்தில் தம்மைப் பொருத்திக் கொள்கிறார்கள் என்பதாக மிக அழகாகக் கதையின் ஊடே நினைவுகளாகக் குறிப்பிட்டிருக்கிறார் .

ஒரு கடிதம் எழுதுவது என்பது எத்தகைய மன நிறைவு. நேரில் பேச இயலாத ஓர் மனம் கடிதத்தின் வழியே கடத்தும் இரு மனங்களுக்கான மிகப்பெரிய உறவுக்கான பாலமாகக் கடிதத்தை ஒரு கதாபாத்திரமாக எழுத்தாளர் வடிவமைத்திருப்பது சிறப்பாக உள்ளது. எத்தனை தொழில்நுட்பங்கள், உடனுக்குடன் செய்தி பரிமாற்றம் செய்யும் வசதிகள் இப்போது இருந்தாலும் வசுமதியும், தேவகியும் எத்தனை வருடங்கள் கடித போக்குவரத்து மூலம் தங்களின் நட்பினை நிலை நிறுத்திருக்கிறார்கள் என்பது எவ்வளவு பெரிய விஷயம். தங்கள் வாழ்வில் உடைந்து நொறுங்காமல் இருப்பதற்கு இக்கடிதத்தின் வழியாகத் தான் அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பது எப்பேர்ப்பட்ட மன

உளவியலின் அரவணைப்பு . கடிதங்கள் என்னும் உளவியல் மருந்து இத்தலைமுறை காணாத பேர அதிசயம் என்றால் மிகையாகாது .

பெண் சுதந்திரம் என்பது படித்த மட்டுமல்ல பண்பட்ட சமுதாயத்தில் ஓரளவு அவர்களுடைய மன உணர்வுகளுடன் இயங்க முடிந்தாலும், முழுவதுமாக சுதந்திர மன உணர்வு என்பது இங்கே பெண்களுக்குக் கானல் நீராகத் தான் உள்ளது என்பதை நிதர்சனத்தின் மையப் புள்ளியாக அறவிகள் உருவாக்கப்படவில்லை சூழலை ஏற்றுக்கொண்டு அவர்கள் உருமாற்றம் பெறுகிறார்கள் அதுவே இக்கதையின் சாரம்சமாக உள்வாங்க முடிகிறது. இவர்களைப் போன்று முகம் தெரியாத பல தேவகிகளும், வசுமதிகளும், செல்லமாக்களும் சமூகத்தில் இன்னும் யாருக்கும் தெரியாமல் நம்முடன் அறவிகளாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதே உண்மை .

நாவலில் அளவுக்கு அதிகமான பெயர்களைத் தாங்கிய கதாபாத்திரங்கள் ஆங்காங்கே வருவதால் வாசிக்கும்போது பெயரினை நினைவில் வைப்பதற்குச் சிரமம் ஏற்படுத்துவதைத் தவிர்க்க முடிவதில்லை.

இப்புதினத்தைக் காலச்சுவடு பதிப்பகம் 2023இல் பதிப்பித்து வெளியிட்டுள்ளது. ஆசிரியர் அகிலா அவர்கள் பெண் உணர்வுகளின் பாத்திரங்களை,யும் மூன்று தலைமுறை வாழ்வியலையும் மிகக் கச்சிதமாக வடிவமைத்துள்ளார் இதனைப் படிக்கும் போது நம்மால் கதையின் பாத்திரங்களுடன் உலாவுவதைப் போல அல்லது எங்கோ எவர் வாழ்விலோ கேட்ட அனுபவ பகிர்வாக வழி நெடுக சொற்களால் ஆசிரியர் செப்பனிட்டு உள்ளார் . பட்டாம்பூச்சிகள் எத்தனை சுதந்திரம் ஆனவை? என நூலின் முதல் அத்தியாயத்தில் வரும் இந்த கேள்விக்குப் பதிலாக நிறைவு அத்தியாயத்தில் அத்தனை போராட்டங்களுக்கும் பிறகும் தேவகியின் மனம் லேசாகி பட்டாம்பூச்சியாய் பறந்து சுதந்திரம் அடைந்ததா? என்பதற்குப் புத்தகத்தை வாங்கி வாசித்துப் பாருங்கள்.

அம்மன் கோயில்களில் பௌத்தத் தடயங்கள்

முனைவர் திருமதி செ. ராஜேஸ்வரி
மொழிபெயர்ப்பாளர், பதிப்பாளர், மதுரை

தமிழ்நாடு குமரிக்கண்டமாக இருந்த காலத்திலிருந்து பெண் தெய்வ வழிபாடு இருந்து வருகின்றது. ஆதியில் பெண்ணை மூத்தவளாகவும் தலைவியாகவும் கருதி அக்கா வழிபாடு இருந்தது. பின்பு அவளுடைய பிள்ளைப்பேற்று சக்தியைக் கண்டு வியந்ததால் தாய்த் தெய்வ வழிபாடு தோன்றியது. அதன் பின்பு ஆண் தெய்வ வழிபாடாக குமரன் வழிபாடு தோன்றியது.

கொடுங்கொள்ளூர் பகவதி பரணி தொழல்

அம்மன் வழிபாட்டு வரலாறு

தாய்/ அம்மன் வழிபாடு படைத்தல், காத்தல், அழித்தல் என்ற மூன்று தொழில்களைச் செய்பவளாக வளர்ந்தது. நாகர்கள் இனமாக பழங்காலத்து மக்கள் வாழ்ந்த காலத்தில் நாகத்தை ஆட்டி வைக்கும் பிடாரி நாகர் குலத்தின் பெண் தெய்வமாகப் போற்றப்பட்டாள். அக்காலகட்டத்தில் 'ஊருக்கு ஒரு பிடாரி' இருப்பது மரபாயிற்று. அதன் பின்பு கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் தமிழகம் வந்த பௌத்த சமயம் பெண் தெய்வ வழிபாட்டை முறைப்படுத்தியது. பெண் புத்தர் என்ற நிலையில் தாரா தேவிக்கு தங்கள் மடாலயங்களில் வழிபடு தகுதியை வழங்கியது. இவள் பிள்ளை வரம் தருபவள் ஆகவும் நோயிலிருந்து மக்களைக் காக்கின்றவளாகவும் வேளாண்கடவுளாகவும் பல வகையில் பல உருவங்களில் போற்றப்பட்டாள். பௌத்த சமயம் பெண் தெய்வ வழிபாட்டை வகைப்படு விரிவாக்கியது இருந்தது. சைவ, வைணவ சமயங்கள் தவ்வை, பிடாரி, தாரா, பின்னரே பெண்தெய்வங்களின்பெயர்மற்றும்கதைகளைசம்ஸ்கிருதமயமாக்கி தன்வயப்படுத்தின. *(Sanskritised and Synchronised)*

பௌத்தத்தில் பெண் தெய்வ வழிபாடு

பௌத்த சமயத்தில் இருந்த அம்மன் வழிபாடு இந்து சமயத்தில் இரண்டு வகையாக மாறியது. ஒன்று லலிதாசனத்தில் அமர்ந்திருக்கும் மாரியம்மன் மற்றொன்று வீராசனத்தில் அமர்ந்து தலையை ஒருபுறம் சாய்த்தபடி காணப்படும் காளியம்மன்.

பெண் மருத்துவ புத்தர் பர்னஷ்வரி

பௌத்த சமயத்தில் பர்னஷ்வரி என்ற பெண் புத்தர் தொற்று நோய்களைத் தீர்க்கும் தேவதையாக நீல நிறத்தில் /கருப்பு நிறத்தில் வணங்கப்பட்டார். மருத்துவ புத்தர் சிம்மாசனத்தில் எழுந்தருளி இருந்தார். பௌத்த சமயத்தில் மருத்துவ சேவை மடாலயங்களில் முக்கியப் பணியாக நடைபெற்றது. ஒவ்வொரு நோய்க்கும் தனித்தனியாக அவர்கள் ஒரு புத்தரை வைத்து வழிபட்டனர்.

விஷக்கடி சுகமாக்கும் தாரா

தாராவைப் பெண் புத்தராகக் கருதி அவளைப் பல நிறங்களில் சிவப்பு, வெள்ளை, மஞ்சள் பச்சை என்று பல பயன்களுக்காக வழிபட்டனர். பச்சை தாராவை (ஜங்குலி தாரா)

ஷியாம் தாரா என்ற பெயரில் பச்சை, நீலம், கருப்பு நிறம் கொண்டவளாக வணங்கினர். இவள் பாம்பு, தேள் போன்ற விஷக்கடியின் தீமைகளைப் போக்குவாள். இந்தத் தாராவுக்கு ஆறு கரங்கள் அல்லது எட்டுக் கரங்கள் உண்டு. ஜங்குலி தாரா இலைகளாலான (இங்கு வேம்பு) அரையாடை உடுத்தி இருந்தாள். வலது பக்கக் கரங்களில் வஜ்ராயுதம், மழு, அம்பு, ஆகியவற்றையும் இடது பக்கக் கரங்களில் வில், மலர், கிளை ஆகியவற்றையும் கொண்டிருந்தாள். இவள் காலப்போக்கில் தென் மாவட்டங்களில் மாரியம்மன் எனப்பட்டாள். வட மாவட்டங்களில் ரேணுகா தேவி ஆனாள்.

பிடாரியை பௌத்த சமயம் தனது விஷக்கடி போக்கும் பச்சை தாரா அல்லது ஜாங்குலி தாராவுடன் இணைத்தது. ஆனால் சைவ சமயப் பேரெழுச்சிக்குப் பின்பு பௌத்தர்களின் சாமி பெயர்கள் நீக்கப்பட்டன. பச்சை தாரா பல இடங்களில் சிவன் கோயில்களில் அம்மன், மாரியம்மன், திரவுபதியம்மன், ரேணுகா பரமேஸ்வரி, என்று பெயர் மாற்றம் பெற்றாள். பழந்தமிழர்களான நாகர்களின் பூர்விக தெய்வமான பிடாரிக்கு காளியம்மன் என்ற பெயர் நிலைத்தது. .சில ஊர்களில் துர்கா பரமேஸ்வரி, உஜ்ஜினி மாகாளி, பேச்சியம்மன், பெரியாச்சி அம்மன் என்று பெயர் பெற்றாள்.

தனி அம்மன்

பௌத்த மருத்துவத் தெய்வமான பரனஷ்வரி உருவத்தில் சமயபுரம் மாரியம்மன், சிறுவாச்சூர் மதுர காளியம்மன் போல் லலிதாசனத்தில் அமர்ந்திருப்பாள். ஒரு காலை மடித்து ஒரு காலைத் தொங்கவிட்டு இருக்கும் இவர்களுக்கு ஆறு கைகள் அல்லது எட்டுக் கைகள் இருக்கும். காலடியில் அசுரன் சிலை இருக்கும். ஆதியில் இவர்களுக்கு கண்வன் (சிவன்) கிடையாது. ஆதி சங்கரர் காலத்தில் சில கோயில்களில் அருகில் ஒரு சிவனையும் பிரதிஷ்டை செயத்தனர். இப்பெண் தெய்வங்களின் வீரியத்தைக் குறைக்க மேருமலை ஸ்ரீ சக்கரம் தாடங்கம் போன்றவற்றைச் சேர்த்தனர்

நோய் தீர்க்கும் அமிர்தம்

மாரியம்மன் என்று பெயர் சூட்டப்பட்ட பௌத்த மருத்துவப் பெண் தெய்வங்களின் வலது கையில் ஒரு மருந்து கிண்ணம் இருக்கும். இவர்களின் நோய் தீர்க்கும் சக்தியை இக்கிண்ணம் புலப்படுத்தும். இதனை நோய் தீர்க்கும் அமிர்தம் என்றே பௌத்தர்கள் அழைத்தனர். ஆனால் வைதீக மரபினர் இதனை கபாலம் என்றனர்.

பச்சை தாரா - மாரியம்மன்

தாரா பௌத்த சமயத்தில் அமோக சித்தி எனப்படும் சுயம்பு புத்தரின் பெண் இணை ஆவாள். தாராவை வேறு பல நிறங்களில் நேபாளத்தில் இளவரசியாகக் கருதி வணங்குகின்றனர். காலம் செல்ல செல்ல தாரா வழிபாடு விரிவடைந்து பல உயரங்களைத் தொட்டது.

பௌத்தர் காலத்தில் இருந்த தாரா வழிபாடு இந்து சமயத்தில் இரண்டு வகையாக மாறியது. பச்சைதாரா வழிபாடு லலிதாசனத்தில் அமர்ந்திருக்கும் மாரியம்மன் வழிபாடாக மாறிற்று. இவள் வேளாண் தெய்வம்.. மக்களை நோய்களில் இருந்து காக்கும் காவல் தெய்வம். நோய் தீர்ப்பாள். குழந்தை வரம் தருவாள். இவள் கோயில்களில் தோல் நோய் தீர, மறு, பரு கரைய மிளகு, உப்பு, வெல்லம் காணிக்கையாக செலுத்துவர்

ருத்ர தாரா + பிடாரி= காளியம்மன்

இரண்டாவது வகையான ருத்ர தாரா வழிபாடு வீராசனத்தில் அமர்ந்து தலையை ஒருபுறம் சாய்த்தபடி சூலாயுதத்தைக் கொண்டிருக்கும் காளியம்மன் வழிபாடாக மாறியது.

சபெரிய சூலாயுதங்கள் பிற்காலத்தில் அம்மன் அருகில் வைக்கப்பட்டன. இவர்களின் காலடியில் ஒரு ஆண் (அசுரன் அல்லது சிவன்) இப்பெண் தெய்வகளிடம் வதை பட்டுக் கிடப்பான். இவ் வழிபாட்டில் வரலாற்றுக் காலத்துக்கு முன்பிருந்த முன்பிருந்த பிடாரி வழிபாடும் இணைந்தது. மயானத்தின் அருகே கோவில் கொண்டுள்ள வக்ரகாளி, கோலவிழி அம்மன் ஆகியோர் இவ்வகை காளியம்மன் ஆவர். இவர்கள் கொலைத் தெய்வங்கள். தவறு செய்தவரைக் கருவறுப்பர். கொடூரமாகக் கொலை செய்வர். பெண்களையும் கொல்வர். வயிற்றைக் கிழித்துக் குடலை உருவிக் கொல்வர்.

மீனாட்சி மாதங்கி

ருத்ரம் என்றால் கோபம் மற்றும் ஆங்காரம். காளியம்மன் தவறு செய்தவர்களைத் தண்டிக்கும் நீதி தேவதை. காளியம்மனிடம் கருணையை எதிர்பார்க்க இயலாது. வெட்டுடையார் காளி, மடப்புரத்துக் காளி, வெக்காளி போன்றோர் தண்டனை வழங்கும் தெய்வங்கள். நீதிமன்றங்களில் சாட்சியின்றி தப்பித்த குற்றவாளிகள் கூட காளியம்மனிடம் இருந்து தப்பிக்க முடியாது.

மருத்துவ புத்தர் - பாய்சாஜ்யா குரு

மகாயான பௌத்தத்தில் பாய்சாஜ்யா குரு *(Bhaisajyagiru)* என்பவர் மருந்துக்குரிய புத்தர் ஆவார். *(Medicine Buddha)* என்பவர் யாக்குஷி நியோரா என்பவர் சுகமாக்கும் புத்தர் *(Healing Buddha)*. ஆவார்.பௌத்தர்கள் மருத்துவத்துக்கு அதிக முக்கியத்துவம் வழங்கினர். தங்கள் மடாலயங்களில் மக்களுக்கும் கால்நடை மற்றும் பறவைகளுக்கும் இலவச மருத்துவ சேவை செய்தனர். காத்து, கருப்பு, கண் திருஷ்டி, ஏவல், பில்லி, சூன்யங்களையும் சரி செய்தனர். இதனால் மக்கள் இவர்களின் தெய்வங்களை தொடர்ந்து வேறு பெயர்களில் இன்று வரை வழிபட்டு வருகின்றனர். மாரியம்மன், காளியம்மன் கோயில்களில் மக்களின் இக்குறைகள் பல்வேறு நேர்த்திக்கடன்களால் தீர்க்கப்படுகின்றன.

மேச்சேரி பத்ரகாளி அம்மன்

உலக அமைதிகாத்து வாழ்க!

முனைவர். இல.ஜெயந்தி
சென்னை

இன்பமாகவும், நிறைவாகவும் வாழவேண்டும் என்பதே ஒவ்வொருவரின் நோக்கமாக இருக்கிறது.

தான், இயற்கை, சமுதாயம் மூன்றின் இணைப்பே வாழ்க்கையாகும்.

தன்னளவில் உடல் நலம், உயிர் வளம், மனவளம், நட்பு நலம் பெற்றுத் திகழ்வது அமைதி அளிக்கும்.

தனிமனித அமைதி மூலம் குடும்பம், சுற்றம், ஊர், உலகு என அமைதி பரவுகிறது.

'தனி மனிதன் நிலை உயர்த்தப்பட்டால், தேசமும் அதன் நிறுவனங்களும் உயர்வடைந்தே தீரும்' என்பார் சுவாமி விவேகானந்தர்.

தனிமனித அமைதி கெடக் காரணங்கள்

மக்கள் துன்பமின்றி வாழ அடிப்படைத் தேவைகள் நிறைவேற வேண்டும்.

1. 1. பசி, தாகம் ஆகியவற்றால் ஏற்படும் தேவைகள்
2. 2. வெப்ப, தட்ப மாறுதல்களால் ஏற்படும் தேவைகள்
3. 3. உடல் கழிவுப் பொருள் உந்து வேகத் தேவைகள்

இந்த அடிப்படைத் தேவைகள் ஒவ்வொரு மனிதருக்கும் கிடைப்பதில் காலம் தாழ்த்தினாலோ, அலட்சியம் செய்தாலோ, மனித உடலுக்குத் துன்பம், நோய் உண்டாகும் என்றுரைப்பார் வேதாத்திரி மகரிசி.

சமுதாய அமைதி கெடக் காரணங்கள்:

சமுதாயம் என்பது பல குடும்பங்கள் சேர்ந்த அமைப்பாகும்.

ஒழுக்கம், கடமை, ஈகை இணைந்த வாழ்க்கையால் சமுதாய நட்புணர்வு ஓங்கும்.

‘சமுதாயம் நல்ல வகையில் அமைந்துவிட்டால் எந்த இடையூறுகளும், இன்னல்களும் இல்லாமல் பலர் நல்வாழ்வு வாழ முடியும். ஆகவே சமுதாயம் சீர்படுதல் தனி மனிதர்க்கு எவ்வளவோ நன்மை ஆகும். அதனால் நல்வாழ்வை நாடும் ஒவ்வொரு நெஞ்சமும் சமுதாய நல்லமைப்பையும் நாடுவது கடமையாகும்’ என்பார் மு. வரதராசனார்.

உடல் நலம், கல்வியறிவு, பொருளாதாரம், காலத்தால் ஏற்படும் தேவைகள் யாவும் நிறைவேறினால் ஒவ்வொருவரும் பாதுகாப்பும், பராமரிப்பும் அமைதியும் பெறுவர்.

யாருக்கும் துன்பம் தராது துன்பப்படுபவர்களுக்கு உதவி வழ்வது அறநெறியாகும். ‘ஒவ்வொருவரும் பிறக்க வளர, வாழ மனிதனுக்கு இடமளிக்கும் அறநிலையம் சமுதாயம்’ தனி மனித அமைதி, தன்னிலை விளக்கத்தாலும், சமுதாய அமைதி அறநெறி வாழ்க்கையாலும், உலக அமைதி ஒருலக ஆட்சியாலும்’ அமையும் என்பார் வேதாத்திரி மகரிசி.

இம்மூன்றின் குறையால் உலக மக்கள் அமைதியின்றி அல்லல்படும் நிலை உள்ளது.

உலக அமைதி கெடக் காரணங்கள்

மனிதரிடம் உள்ள விலங்கினப் பண்பே போட்டி, பகையாக வெளிப்படுகிறது. பொருளையும், மக்களையும் பாதுகாக்க தடியாட்சி, முடியாட்சி, குடியாட்சி என வளர்ச்சி பெற்றாலும் உலகில் அமைதி இன்றி, போர்கள் நடந்து கொண்டுதான் இருக்கிறது.

உலக சரித்திரம் பற்றி, விஞ்ஞானிகள் கேட்டபோது,

'The Collection of all the Ruination by Greedy Industrialists, Barbarous Politicians and Superstitious Religious Heads. That is our world History' என்பார் வேதாத்திரி மகரிசி.

பழங்காலத்தில் மனிதனுக்கு உலோகங்கள், நெருப்பு, இரசாயனங்கள் இவற்றைப் பயன்படுத்தத் தெரியவில்லை. அவற்றின் பயன்பாடு தெரிந்தபின், உலோகங்களைக் கொண்டு போர்க் கருவிகளாகச் செய்து போரிட்டான். அந்தப் பயன்பாடு மேலும் மேலும் நுட்பமான ஆராய்ச்சி மூலம் பலவகையான போர்க் கருவிகளாகப் பெருகி, இன்று அணுகுண்டு வரை வளர்ந்து விட்டது.

நவீன கருவிகள், செயற்கை நுண்ணறிவு *(AI)* மூலம் டிரோன்கள் மூலம் துல்லியமான தாக்குதல், நீர்வழி தாக்குதல், ஏவுகணை தாக்குதல் என கொலை கருவிகள் பெருகி விட்டன.

போருக்குக் காரணங்கள்

1. நாடு பிடிக்கும் ஆசை, பிறநாட்டு வளத்தை சுரண்டுதல்
2. பொருளாதார ஏற்றத்தாழ்வுகள்
3. வேலையில்லாத் திண்டாட்டம்
4. வறுமை
5. சமத்துவமின்மை
6. எல்லைப் பிரச்சினைகள்
7. சுரண்டல்
8. மதவெறி
9. போர்க் கருவிகள் உற்பத்தி
10. மனிதன் பல குழுக்களாக பிரிந்திருத்தல் (சாதி, மத, சமய, இன, தேச வேற்றுமைகள்)
11. போர்ப் பொருளாதாரம் (அறுபது விழுக்காடு இராணுவ செலவினங்களுக்காக நாட்டில் வருமானம் ஒதுக்கப்படுகிறது.)
12. அரசியல் தலைவர்களின் சுயநலம் (குறுகிய போக்கு)
13. பழைய போரின் தொடர்ச்சி (பழிவாங்குதல், தொடர் வன்முறை)
14. செல்வந்தர்களும் அரசியல்வாதிகளும் உள்நாட்டுக் கலகம் உண்டாக்கி தீவிரவாதத்தை ஊக்குவித்தல்.

இவைகள் போருக்கான அடிப்படைக் காரணங்களாக அறியப்படுகிறது.

போரின் விளைவுகள்

முப்பத்து மூன்று நாடுகள் கலந்துகொண்ட முதல் உலகப்போர் *(1914 - 1918)* நான்கு ஆண்டுகள் நீடித்தது.

1. விலை மதிக்க முடியாத பொருட் சேதம், ஈடு செய்ய முடியாத உயிர்ச்சேதம் ஏற்பட்டன.
2. உலகப் பொருளாதாரம் சீர் குலைவது.
3. பொருளாதாரச்சரிவால் மன்னர் ஆட்சி மதிப்பிழந்து புரட்சியால் பொதுவுடைமைக் கொள்கை பரவியது.
4. பல நாடுகளில் மக்களாட்சி வன்முறையால் உருவானது.
5. இரண்டாம் உலகப் போர் ஏற்பட ஜெர்மன் நாட்டின் சர்வாதிகாரி ஹிட்லர் காரணமானார்.

பாசிச, நாசிச கட்சிகள், இரஷ்யாவில் ஸ்டாலின், இத்தாலியில் முசோலினி, ஜப்பானின் எழுச்சி என போருக்குக் காரணங்களாயின.

போரின் விளைவுகள்

இரண்டு கோடி இரஷ்ய மக்கள் இறந்தனர் இரண்டரை கோடி மக்கள் வீடிழந்தனர். 70,000 கிராமங்கள், அழிந்தன.

1710 நகரங்கள், நகர்ப்புற குடியிருப்புகள் அழிந்தன. 32,000 தொழில் நிறுவனங்கள், 78,000 கூட்டுப் பண்ணைகள் 5000 அரசு பண்ணைகள் முதலியன. ஹிட்லரின் நாசிக் படையால் அழிந்தன. அறுபது லட்சம் யூதரை பெண்கள், குழந்தைகள், முதியோர் உட்பட விஷவாயுக் கிடங்கில் அடைத்துக் கொன்றார்.

'மேற்கிலுள்ள மக்கள் தங்களுடைய இனத்தாரைக் கொன்று குவிப்பதற்காக கிழக்கு நோக்கி வந்தார்கள். ஒரே சமயத்தில் ஒன்று சேரும் விதிப்படி ஆயிரக்கணக்கான சிறிய காரணங்கள் பொருந்தி அமைந்து, அந்தத் துருப்புகளின் கீழ்த்திசைப் பிரயாணத்தையும், யுத்தத்தையும் ஏற்படுத்தும்படி ஒத்துழைத்தன' என்று பத்தொன்பதாம் நூற்றாண்டு போரைப் பற்றி (நெப்போலியன், அலெக்சாண்டர் தலைமையிலான போர்) எழுதினார் லியோ டால்ஸ்டாய்.

'மனிதர்களுக்கு உணவோ, குதிரைகளுக்குத் தீனியோ கிடைக்கவில்லை, சிப்பாய்கள் பசியினால் உடல் வீங்கி மாண்டார்கள். ஆஸ்பத்திரிகள் மிக மோசமான நிலையில் இருந்தன' என்று 1806 - 1807 போர்கள் பற்றி எழுத்தாளர் மிக்காய்லாவ்ஸ்கி எழுதினார்.

1932-1933இல் சோவியத் இரஷ்யாவிலிருந்து பிரிய விரும்பிய உக்ரைனைத் தடுக்க, செயற்கை பஞ்சத்தை அந்நாட்டிற்கு உண்டாக்கி 12 மிலியன் உக்ரேனிய மக்கள் இறக்க இரஷ்யா காரணமானது இரஷ்யா, உக்ரைன் போர் இன்றும் தொடர்கிறது.

1945இல் வியட்நாம் புரட்சியில் தொடங்கி, 1956 - 1975 வரை அமெரிக்காவுடன் போரில் ஈடுபட்டு பல நாடுகளை இணைத்துக் கொண்டு போரிட்டு கோடிக்கணக்கான மக்கள் இறப்புக்கு காரணமானது. காயமடைந்தோர் பலர் வியட்நாம் அமெரிக்க போர் மனிதவளம், பொருள்வளம் அழியக் காரணமானது.

இலங்கையில், நடந்த உரிமைப்போரில் மக்கள் லட்சக்கணக்கில் உயிரிழந்தனர். காயமடைந்தும், வீடிழந்தும் நாடிழந்தும் அகதிகளாக அலையும் நிலைக்குத் தள்ளப்பட்டனர். அப்பாவி மக்கள் பலர் உயிர் இழந்தனர். மனிதவள இழப்பு, பொருளாதாரச் சீர்கேடு என அமைதியின்றி அல்லல்பட்டனர்.

அணு ஆயுதப் போர்:

ஜப்பான் அமெரிக்கத் துறைமுகத்தைத் (பெர்ல்) தாக்கியதற்காக அமெரிக்கா, ஜப்பானின் ஹிரோஷிமா நகரின் மீதும் (ஆகஸ்டும், 1945 இல் யூரேனியம் குண்டு, லிட்டில்பாய்) மற்றும் நாகசாகி மீதும் (ஆகஸ்ட் 9, 1945 புளுடோனியம் குண்டு, ஸ்பேட்மேன்) அணு குண்டுகளை வீசியதால் 2,10,000 முதல் 3,00,000க்கு மேல் பலியானார்கள். கதிர்வீச்சு பாதிப்பால் புற்றுநோய், பிறநோய்களால் மக்கள் அவதிப்பட்டனர். இடம் வாழத் தகுதியற்றதானது.

அழிவைத் தரும் அணு ஆயுதம்

இன்று, இம்மாதிரியான அணுகுண்டுகள் அமெரிக்கா, ரஷ்யா, சைனா, பிரான்ஸ், இங்கிலாந்து, உக்ரைன், இந்தியா, பாகிஸ்தான் நாடுகளிடம் உள்ளன. பிற நாடுகளும் தயாரிக்கத் தொடங்கி விட்டன. உலகில் அணு ஆயுதங்களின் எண்ணிக்கை பெருகிவிட்டது. புளுடோனியம் மிக அதிகமான நச்சுத் தன்மை உடையது. ஒரு சிறிய துகள் சுவாசத்திற்குள் சென்றாலும் நுரையீரல் புற்றுநோய் உண்டாகும்.

'அணு ஆயுதங்கள் மனித இனத்தை அடியோடு அழிக்கும் அபாய சக்தி படைத்தவை. அணு ஆயுதப் போர் மூண்டால் நொடியில் உலகம் கருகிவிடும். நமது உலகத்தைப் போல 200 உலகங்களை அழிக்கும் அளவுக்கு அணு ஆயுதங்கள் தயார் நிலையில் உள்ளன.

வல்லரசு நாடுகளான அமெரிக்கா, ரஷ்யா ஒரு பட்டனை அழுத்தினாலே போதும் என்ற அளவில் ஆயத்த நிலையில் வைத்துள்ளனர் என்பதை அறிஞர்கள் தெரிவிக்கின்றனர்.

கோடிக்கணக்கான பணம் ஆயுத உற்பத்திக்காகச் செலவிடப்படுகிறது.

யுத்தமென்பது மனித சமூகத்துக்கு முற்றிலும் கேடானது என்பது லியோ டால்ஸ்டாயின் கருத்தாகும்.

'போர் என்பது சோம்பேறிகளுக்கும், அற்பர்களுக்கும் ஒரு பிரியமான பொழுது போக்காக, இப்பொழுது இருந்து வருகிறது. போரின் நோக்கம் கொலை செய்வதாகும். இராணுவத்திற்கு வேண்டிய உணவுப் பொருள்களைத் திருடுவதற்கும், பித்தலாட்டம் செய்வது, பொய் பேசுவதற்கும் அவர்களுக்கு ஆதரவு கொடுப்பதாகும். அவற்றை இராணுவ தந்திரங்கள் என்று சொல்லுகிறார்கள்.

'அந்த கணக்கற்ற நட்சத்திரங்கள் நிறைந்த வானத்தின் அடியில் உள்ள இந்த அழகான உலகத்தில் எல்லா மனிதர்களுக்கும் இடம் இல்லாமலா போயிற்று? இந்த மனங்கவரும் இயற்கையின் மத்தியில் துவேஷமும், பழிவாங்கும் நோக்கமும், தமது சகோதரர்களைப் படுகொலை செய்யும் நோக்கமும், மனிதர்கள் உள்ளத்தில் இருக்கத்தான் முடியுமா?' என்றே வினவுகிறார் லியோ டால்ஸ்டாய்.

'உலகினிலே யுத்தபயம் இருக்கு மட்டும்
ஓராட்சிப் படைகளை ஏற்றாளு மட்டும்
பல பிரிவாய் நாடுகள் வெவ்வேறாய் ஆண்டால்
பாழாகும் வாழ்வன்றோ சண்டை யாலே!
ஆரும்பாடு மக்கட்கே படுவோர் எல்லாம்
ஆராய வேண்டுமதை ஆழ்ந்து ஆழ்ந்து
விரும்பா இக்கொடும் செயலால் உலகமெங்கும்
வெளிநாட்டில் வாழ் தமிழர்கதி என்னவாகும்?
திரும்பாது நல்வாழ்வு சீக்கிரத்தில்

சிதறுண்டுபோம் அன்றோ நமது வாழ்வு

என வருத்தி உரைப்பார் வேதாத்திரி மகரிசி.

உலக அமைதிக்காக பல அமைப்புகள் உலகம் முழுவதும் அரும்பாடு பட்டுக் கொண்டிருந்தாலும் அமைதி நிலைக்காமைக்குக் காரணம் ஆதிக்க வெறி கொண்ட அரசியல் தலைவர்களின் அகந்தைப் போக்காகும்.

கடிந்து அறிவுரை கூறும் பெரியாரின் துணை இல்லாத காவலற்ற அரசன், தன்னைக் கெடுக்கும் பகைவன் எவரும் இல்லாவிட்டாலும் கெடுவான் என்பார் திருவள்ளுவர்.

'இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பார் இலானுங் கெடும்' (திரு. 448)

எத்தகைய வெற்றிகள் பெற்றாலும், சரித்திரத்தில் அவர்கள் நல்ல பெயர் பெறுவதில்லை.

ஹிரோஷிமாவில் நடந்த குண்டு வெடிப்பு பற்றி மகாத்மா காந்தியடிகள் கூறுகையில்,

'இனிமேல் மனித சமுதாயத்தின் முன் இருக்கும் ஒரே பாதை அகிம்சை வழிதான், ஒன்று அகிம்சைவழி அல்லது சர்வ நாசம்' என்றார்.

'an atomic bomb cannot be challenged by another atomic bomb, it can be effectively challenged only by humanisam and wisdom'

என்றார் முதல் இந்தியப் பிரதமர் ஜவஹர்லால் நேரு.

'அணுகுண்டு பயம் தொலைந்து உலக சமாதானம் நிலைபெற வேண்டுமானால் அதற்கான ஒரே வழி ஆன்ம நேய ஒருமைப்பாட்டுரிமை நெறிதான்' என்பார் ம.பொ.சி.

ஒருலக ஆட்சியால் உலக அமைதி

'மனம் எதை விரும்புகிறதோ அதை அடைகிறது. ஏன் நிறைவும் நிம்மதியும் வேண்டுமென்று, பிரார்த்திக்கக் கூடாது? மனம் நாம் கேட்டவற்றை நமக்குத் தருகிறது. ஏன் நாம் கேட்கக் கூடாது? என்றுரைப்பார் டாக்டர் எம்.எஸ். உதயமூர்த்தி

'உலகத்தில் அமைதியது உருவாகி நிலைக்க
உயிரறிவு இறையுணர்வு கடமையறம் எங்கும்
பலநாட்டு மக்களது வாழ்வினிலே பரவி
பண்பாடாய் ஊடுருவி நிலைக்கும் முறை வேண்டும்

'ஓர் உலக ஆட்சியினால் யுத்தபயம் ஒழிந்துவிடும்
போர் ஒழிந்தால் வீரர்களும் பொருட்களும் நற்சேவைகளும்
பார் முழுதும் ஏழ்மைபோம் பண்பாடு சிறந்தோங்கும்

சீர்திருத்த வாழ்வு அப்போ சித்திக்கும் சிந்திப்பீர்!

என்று உலக அமைதிக்கான திட்டங்களை எடுத்துரைப்பார் வேதாத்திரி மகரிசி.

வாடிகன் கத்தோலிக்க திருச்சபைத் தலைவர் போப் லியோ-14, 'போர்களை நடத்துபவர்கள் தங்களை சர்வ வல்லமை படைத்தவர்களாக நினைக்கும் மாயையில் வாழ்கிறார்கள். ஆயுதங்களைவிட அமைதிக்கு வலிமை அதிகம்' என்று இக்காலத்தில் நடைபெறும் இஸ்ரேல், அமெரிக்காவின் ஈரான் உடனான போர் குறித்து, வல்லரசு அதிபருக்கு அறிவுறுத்துதல் காணலாம்.

அரசாங்கங்கள், நிறுவனங்கள், இயக்கங்கள், கட்சிகள், தனி நபர்கள் என ஆயுத கலைப்புக்கான முயற்சிகள் நடந்துள்ளன. பல மாநாடுகள், பேச்சு வார்த்தைகள், சிறப்புக் கூட்டங்கள் நடக்கின்றன. ஐ.நா. சபை கட்டுப்பாடுகளை விதித்தாலும் அதை நாடுகள் மீறுகின்றன.

ஆயுதங்களின் தீமைகள் பற்றி விளக்க நூல்கள், இலக்கியங்கள், கண்காட்சிகள், கருத்தரங்குகள், சொற்பொழிவுகள், உரையாடல்கள், கலை நிகழ்ச்சிகள், பேரணிகள் என பல வழிகளில் முயற்சிகள் நடைபெறுகின்றன. சர்வதேச அனுசக்தி கமிஷன், தனிப்பட்ட அமைப்புகள் மற்றும் (Red Cross) செஞ்சிலுவைச் சங்கம், வாடிகனின் கத்தோலிக்க கிறிஸ்டியன் சபை இதில் 100 கோடி கிறித்துவர்கள் இணைந்து பல கிளைகளுடன் செயல்படுகிறது.

முஸ்லீம் நாட்டில் ரெட் கிரசண்ட் (Red Cresent) என பெயரிட்டு பணிபுரிகிறார்கள்.

1949இல் ஐ.நா.வின் அங்கமான பாதுகாப்புச் சபை முயற்சிகளை எடுத்து வருகிறது.

1975ஆம் ஆண்டு சனவரி 9ஆம், நாள் ஐ.நா.சபையில் 'உலக அமைதிக்கு ஆன்மிக வளர்ச்சி,' என்ற தலைப்பில் வேதாத்திரி மகரிசி உரை நிகழ்த்தினார்.

25000 அமைப்புகள் அமைதிக்காகவும், தொண்டாற்றவும் செயல்படுகின்றன என ஆராய்ச்சிகள் தெரிவிக்கிறது.

அனைத்து நாடுகளும் ஐ.நாவில் இணையவும், உரிமை மீறும் நாடுகளைக் கட்டுப்படுத்தும் அதிகாரமும் ஐ.நா.வுக்கு பலமாக வேண்டும்.

பிரார்த்தனை பலன் தரும்

முன்னாள் குடியரசுத் தலைவர், அ.ப.ஜெ. அப்துல் கலாம் அவர்களின் பிரார்த்தனை ஜூனியர் விகடனில் வெளிவந்தது.

'இறைவா நல்வாழ்வு ஈந்த இறைவா! உன் அருளை எண்ணி எண்ணித் தொழுகின்றேன். இறைவா! உன் அருளை எண்ணி எண்ணித் தொழுகின்றேன், இறைவா!

என் பெற்றோர்களுக்கும், என்னுடைய ஆசிரியர்களுக்கும், என்றென்றைக்கும் பெருவாழ்வு கொடுத்து ஆசீர்வதிப்பாயாக!

இறைவா! என் நாட்டு மக்கள் ஒன்றுபட்டு வாழ நல்ல எண்ணங்களை உற்பத்தி செய்வாயாக!

இறைவா! மதங்கள் மக்களைப் பிரவுபடுத்தாமல் மக்களை இணைக்க மதத்தலைவர்களக்கு நல்லருள் புரிவாயாக.

இறைவா! நம் நாட்டின் தலைவர்கள் அவர்களைவிட நாட்டை முக்கியமாக எண்ண, அவர்களின் எண்ணங்களில் மலர்ச்சித் தீபம் ஏற்றுவாயாக!

இறைவா! என் நாட்டு மக்களுக்கு உள்ள உறுதியைக் கொடுத்து கல்வியிலும், தொழிலிலும் விவசாயத்திலும், கணிப்பொறியிலும் உயர்ந்த நாடாக வளர்ந்த நாடாக உழைத்து முன்னேற அருள் கொடையைக் கொடுப்பாயாக!

மக்களும், ஒவ்வொரு தலைவரும் இவ்வாறு எண்ணமிட்டால் உலக அமைதி விரைவில் கிட்டும்.

'சுயநலமின்மையைப் போன்ற ஓர் உயர்ந்த உண்மையை சமுதாயத்தில் பின்பற்ற முடியவில்லையானால் மனிதன் சமுதாயத்தை விட்டு விலகி காட்டுக்குப் போய் விடுவதே நல்லது' என்பார் சுவாமி விவேகானந்தர்.

அறியாமையும், தன் முனைப்பும் மக்களை அழிவுப் பாதைக்குக் கொண்டு சேர்க்கும். அன்பும் கருணையுமே வளர்ச்சிப் பாதைக்கு வழி காட்டும்.

'பரிவின்மைக்குக் காரணம் அகந்தையாகும். பரிவிற்குக் காரணம் அன்பாகும். அகந்தை அறியாமையுடன் இணைந்தது. அன்போ அறிவோடு பிணைந்தது. மற்றவர்களை விட்டுத் தான் தனித்தவர், என்னும் இயல்பு, மனிதர்க்குப் பொதுவானதுதான். பரிவு இதனின்றும் மாறுபட்டதாகும்.' என்பார் வளவாழ்விற்கு வழி கூறும் ஜேம்ஸ் அல்லன்.

மக்கள் மனதில் உலக அமைதிக்கான சிந்தனைகள் மலர வேண்டும்.

உலகைக் காக்க எண்ணும் உயர்ந்த தலைவர்கள் வழியில், உலக அமைதிகாத்து வாழ்க

விடியலின் விதை!

காலத்தின் சிதைவுக்குள் மனித மனச்சாட்சியின் உருக்கம்

“இருள் பெருகும் வேளையில் ஒளி பற்றிய ஏக்கம் தான் மனிதனை மனிதனாக வைத்திருக்கிறது.”

ஒரு காலம் இருந்தது.
வாழ்க்கை அப்போது
நம் காலடியில் வாலாட்டும் நாய்க்குட்டியைப் போல நெருக்கமாக இருந்தது.

அமுதமொழி

அது நம்மைக் கண்டு அஞ்சவில்லை;
நாமும் அதனைக் கண்டு அஞ்சவில்லை.

காலம் நம்மைத் துரத்தவில்லை;
அது நம்மோடு நடந்து வந்தது.

ஒவ்வொரு காலையும் ஒரு புதிய வாய்ப்பு,
ஒவ்வொரு மாலையும் உழைப்பின் புனித சோர்வு.

அந்த நாட்களில் வாழ்வு ஒரு கனிந்த பழம்.
அதைப் பகிர்ந்துகொள்ள உறவுகள் இருந்தன.

துயரங்கள் இருந்தாலும் அவை மழைபோல வந்து நிலத்தைப் பசுமையாக்கிச் சென்றன.

மனிதன் தன் உள்ளத்தோடு பகை கொண்டிருக்காத காலம் அது.

ஆனால் இன்று —

அந்த இனிமை எங்கே?
அந்த நெருக்கம் எங்கே?
அந்த வாலாட்டும் நம்பிக்கை எங்கே?

போரின் புகை,
அரசியலின் கரி
இன்று உலகம் புகைமூட்டத்தால் மூடப்பட்டிருக்கிறது.

போர் என்பது இனி எல்லைக் கோடுகளின் மோதல் அல்ல;
அது மனித மனசாட்சியின் தோல்வி.

வெடிக்கும் குண்டுகள் நகரங்களை மட்டுமல்ல,
குழந்தைகளின் எதிர்காலத்தையும் சிதைக்கின்றன.

ஒவ்வொரு வெடிப்பும்
ஒரு தாயின் நெஞ்சில் உடையும் மௌன அலறல்.

அரசியல், ஒருகாலத்தில் சேவையின் மொழியாக இருந்தது.

இன்று அது அதிகார வேட்கையின் நாடக அரங்கம்.

மக்களின் கண்ணீர், சிலரின் வெற்றிக் கணக்குகளாக மாறுகிறது.

அதிகாரத்தின் ஆசனம்,
மரத்தால் செய்யப்படவில்லை;
அது நம்பிக்கைகளின் எலும்புகளால் கட்டப்பட்டுள்ளது.

அது அனைவரது பாதுகாப்புக்கும் உத்தரவாதம்
அளிக்கும்
ஒரு புதிய விடியலின் விதை.

மாலை பூக்கும் நாள்

சசிகலா விஸ்வநாதன்
பெங்களூரு

மகளிர் நீதிமன்ற வளாகத்தின் உள்ளே வட்டமடித்து நின்ற ஆட்டோவிலிருந்து மகிழ்மதி இறங்கி புங்க மரத்தின் நிழலில் வந்து நின்றாள். கண்ணீரும் கம்பலையுமாக நிற்கும் பெற்றோர்களையும் மாலை மாலையாய் கண்ணீர் விடும், இளவயது பெண்களையும் பார்க்க அவளுக்கு எரிச்சலாய் வந்தது. முள்ளாகக் குத்தும் உறவை முறித்துக் கொள்வதில் எதற்கு இப்படி அழுது புரள வேண்டும்?காலுக்கு உதவாத செருப்பை கழட்டி வீசிவிட்டு போக வேண்டியது தானே!

ஆம்! மணமுறிவுக்காக இப்படி நீதிமன்றம் வருவது சற்று மகிழ்மதிக்கும் அசௌகரியத்தையும் வருத்தத்தையும் அளித்தது. எப்போதும் நினைவில் நின்றாடும் உன்னதமான பொழுதுகளின் இன்பத்தில் மட்டும் ஒருத்தி வாழ முடியுமானால்; இப்போது அவள் இங்கு வந்து நின்றிருப்பாளா? அவள் மனதில் ஒரு தன்முனை கவிதை வந்து போயிற்று.

"போட்ட கணக்கின்
விடை தவறானதா
போட்ட கணக்கின்
வழி தவறானதா"

❦ ❦ ❦ ❦ ❦

அவள் நந்தனை கல்லூரிகளுக்கு இடையேயான கவிதை மன்றத்தில்தான் முன்முதலாக சந்தித்தாள். ஒளிரும் கண்களில் மின்னிய அறிவின் கூர்மையும், தன்னம்பிக்கையுடன் கூடிய உடல் மொழியும், சைகைகளும், கண் அசைவுகளும், அவனுடைய முதல் பரிசுக்கு கட்டியம் கூறின. அவள் மனத்தையும் கட்டிப் போட்டது. அவனுக்கு முதல் பரிசு என்று அறிவித்த கணத்தில் அவன் பெரிதாக மகிழ்வடையவில்லையோ; என்று மகிழ்மதிக்குத் தோன்றியது. மேடையிலிருந்து பரிசுடன் வந்தவனை மகிழ்மதி வழிமறித்து, "வாழ்த்துகள்: நந்தன்" என்று கூற மென்புன்னகையுடன், தோள் குலுக்கலை மட்டுமே பதிலாகத் தந்து, அங்கிருந்து அகன்றான்; நந்தன். லயோலா கல்லூரியில் பொருளாதாரத்தில் முதுகலை மாணவன் என்றும்,கல்லூரியில் பொருளாதாரம் பயின்று கொண்டே பட்டி கணக்காளர் தேர்வுக்கும் தயாராகிக் கொண்டிருக்கிறான்; என்பது ; அவளுக்கு நிறைவைத் தந்தது.

அடுத்தடுத்து அமைந்த வழக்காடு மன்றங்கள், கவிதை அரங்கங்கள், பட்டிமன்றங்கள் அவர்களை சந்திக்க வைக்க; அவர்களுக்குள் புரிதலுடன் கூடிய ஈர்ப்பு ஏற்பட்டது. "குடும்ப வாழ்வின் வெற்றியை தீர்மானிப்பது,"வாழ்வின் வளமையா? வாழ்வின் புரிதலா?" என்னும் தலைப்பில் பட்டிமன்றத்தில், இருவரும், எதிர், எதிர் அணியில் வாதாட; ' 'வாழ்வின் புரிதலே, என்று பேசிய, மகிழ்மதியின் அணியே வென்றது ; அன்று. பட்டிமன்றம் முடித்து இருவரும் தேநீர் அருந்தும் வேளையில், நந்தன்,' வாழ்வை இவ்வளவு தூரம் புரிதலுடன் அணுகும் உன்னை நான் ஏன் திருமணம் செய்யலாகாது; என்று யோசிக்கிறேன்;" என்று கேட்க; மகிழ்மதி ஒரு கணம் யோசித்தாள். "இல்லை! நந்தன்!.வாழ்வின் புரிதலுடன் வாழ்வு சிறப்பதற்கு வளமையும் மிக முக்கியமான காரணி; இல்லையா? பட்டிமன்றத்தில் பேசுவதெல்லாம் வாழ்க்கைக்கு உதவாது.படிப்பை முடித்து நல்ல பணியில் அமர்ந்த பின்னரே நாம் திருமணம் பற்றிய முடிவை எடுக்க வேண்டும்" என்று பதில் அளிக்க; நந்தன் மௌனமானான்.

மகிழ்மதி தனது உயிர்வேதியியல் படிப்பு முடிந்ததும்; முனைவர் பட்டத்திற்கான ஆராய்ச்சி செய்வதாக இருந்தாள். நாளடைவில் அவர்களுக்குள் இருந்த புரிதல் காதலாக கனிந்தும், மகிழ்மதியின் ஆராய்ச்சி படிப்பும் அவனது பட்டய கணக்காளர் படிப்பும் தடையாக நின்றன. இருவரின் படிப்பும்; இப்போதுதான் முடியும்; என்று அறுதியிட்டு சொல்ல முடியாத சூழலில், ஒரு குழப்பமான நிலையிலிருந்து வெளியே வர மகிழ்மதியே இந்த யோசனையை முன்வைத்தாள். "நந்தன்,!நான் தற்போது ஆராய்ச்சி உதவியாளராக பணியில் சேர்ந்து கொள்கிறேன். நீ உனது படிப்பை தொடர்ந்து மேலே எடுத்துக் கொண்டு போ. உன் படிப்பு முடியும் வேளையில் நான் எனது முனைவர் பட்டத்திற்கு பதிவு செய்து கொள்கிறேன்.நாம் சிறுக கட்டி பெருக வாழலாம்."என்று சொன்னாள்.

அவளுடைய பேராசிரியரின் உதவியில் தரமணியில் அவளுக்கு ஆராய்ச்சி உதவியாளராக பணி கிடைத்தது. நந்தன் தனது பட்டயக் கணக்காளர் படிப்பிற்கான ஆயத்த வேலைகளில் இறங்கினான். நந்தன் வீட்டில் பெரிய எதிர்ப்பு ஒன்றும் இல்லை வேற்று சாதியில் மகிழ்மதியை திருமணம் செய்து கொடுக்க அவள் பெற்றோர் இசையவில்லை.

மேலும் அவள் தனது முனைவர் ஆராய்ச்சியை விட்டுத்தர முடிவெடுத்தது அவர்களுக்கு சிறிதும் சம்மதம் இல்லை நந்தனை தன் முன்னேற்றத்தை மட்டும் சிந்திக்கும் சுயநலவாதி என்று கணித்தனர். "பின் வரும் நாட்களில் அவன் உன்னைப் படிக்க வைப்பான்; என்று எப்படி நீ நினைக்கிறாய்? அவன் அதற்கு ஒத்துழைப்பான் என்பது என்ன நிச்சயம்? ‘‘என்று வாதாடினர். "அப்பா! என் வாழ்வையே அவனிடத்தில் ஒப்புக் கொடுக்க இருக்கையில்; அவன் என்னை ஏமாற்றுவான்; என்று நினைப்பது, ஒரு எதிர் மறையான வினையல்லவா? எந்த ஒரு ஐயத்திற்கும் இடம் கொடாமல், ஒருவரை ஒருவர் நம்பியே வாழ்வைத் துவங்க வேண்டும்; இல்லையா?" என்ற பதில் அவர்களை மௌனமாக்கியது. கொப்புடை அம்மன் சந்நிதியில் அவர்கள் திருமணம் எளிய முறையில் நடந்தேறியது,

‘‘தளிர் கரம்
இணைந்தது இனிமை
வளைக் கரம்
துணையானது கனிமை"

என்று நந்தன், அன்றைய நாட்குறிப்பில் எழுதியதைப் பார்த்து ,மகிழ்மதி புன்னகைத்தாள்

ூ ூ ூ ூ ூ

அவர்கள் சென்னையில் வாழ்வைத் தொடங்கினர். சொல்பவரும்படியில் வாழ்க்கையை நடத்திக்கொண்டு போவது சவாலாக இருந்தாலும்; சமாளித்து இனிமையாக வாழக் கற்றார்கள். நந்தன் படிப்பு நேரம் போக பகுதி நேர வேலைகளுக்குப் போக வேண்டிய கட்டாயம் வந்தது. அவனால் முன் போல் பட்டிமன்றங்களுக்கோ, கவிதை அரங்குகளுக்கோ நேரம் ஒதுக்க இயலவில்லை. மகிழ்மதி தன் பணியோடு, தன்னுடைய ஆராய்ச்சிக்குத் தேவையான அடிப்படை சோதனைகளையும் செய்து கொண்டு, அறிவியல் இதழ்களில் கட்டுரைகளை வெளியிட்டுக் கொண்டு அறிவியல் உலகில் தடம் பதிக்க ஆரம்பித்தாள். அவ்வப்போது கவிதை அரங்குகளிலும் பட்டி மன்றங்களுக்கும் வழக்காடு மன்றங்களுக்கும் சென்று வர; மெல்லனே புகழ் வெளிச்சம் அவள் மீது பரவ; தமிழ் இலக்கிய உலகிலும் தனக்கென ஒரு இடம் பிடித்தாள். எப்போதும் படிப்பிலும் வேலையிலும் இருந்த நந்தனுக்கு வாழ்க்கை சலிப்பு தட்டியது. ஏற்கனவே பட்டய கணக்காளர் படிப்பில் முதனிலைத் தேர்வில் தேர்ச்சி பெற்றிருந்ததால். இடைநிலைத் தேர்வில் வெற்றி பெறுவது கடினமாக இல்லை. நகரத்தின் மிகவும் அறியப்பட்ட பட்டய கணக்காளரின் கீழ் பயிற்சி பெற வாய்ப்பும் வந்தது. இது தவிர சில சிறிய நிறுவனங்களுக்கு பணிகள் செய்து தரும் வாய்ப்புகளும் அவனைத் தேடி வர ஆரம்பிக்க அவர்கள் வாழ்க்கைத் தரம் சிறிது உயர்ந்தது. மகிழ்மதி முனைவர் பட்டத்துக்கு பதிவு செய்து கொள்ளும் நேரத்திற்கு காத்திருந்தாள்.

நந்தன் அது பற்றி ஒன்றும் பேசாதது, மகிழ்மதியை சங்கடத்துக்கு உள்ளாக்கியது. நந்தன் மனதில் ஒரு நிறைவின்மையுடனே இருந்தான். எப்போதும் இனம் புரியா சினத்திலும்; கழிவிரக்கத்திலும் இருந்ததை மகிழ்மதி மிகவும் அசௌகரியமாக உணர ஆரம்பித்தாள். அடிக்கடி அவர்களுக்கிடையே காரணமின்றி வாக்குவாதம் ஏற்படலாயிற்று. இதை தவிர்க்க அவள் பரிசோதனை சாலையில் அதிக நேரம் செலவழிக்க ஆரம்பித்ததில்

நிலைமை இன்னும் மோசமாயிற்று. நந்தன் இன்னும் தாமதமாக வரத் துவங்கினான். ஒரு நாள்; மகிழ்மதி வேலையிலிருந்து வந்து, பிறகு, இரவு உணவு தயார் செய்ய தாமதமாக; நந்தன் கோபமடைந்து, ‘‘எளிதா! நீ சற்று முன்னதாக வந்து உணவு தயார் செய்யக்கூடாதா? ‘‘என்று கேட்க; ‘‘ ஏன் நீதான் சற்று விரைவாக வந்து சமையல் செய்யும் பொறுப்பை ஏற்றுக் கொள்ளலாகாது? இன்று பேராசிரியரின் வகுப்பு இருந்ததால் நேரத்திற்கு வர இயலாது; என்று குறுஞ்செய்தி அனுப்பியிருந்தேனே! எனக்கும் வீட்டு வேலைகளுடன் கவிதை அரங்க வேலைகளும், பட்டிமன்ற வேலைகளும் இருக்கிறதல்லவா?" என்று எதிர்சொல் எடுக்க; நந்தன் கடுப்பாகி, ‘‘அந்த வேலைகள் அவ்வளவு அவசியமா?" என்று கேட்டு விட்டான். "ஆம்! அதுவும் அவசியம் தான்;எனக்கு," என்று மகிழ்மதி பதிலளித்தாள்.

‘‘ஆயாசம் தரும்
முன்னேற்ற முயற்சிகள்
ஓயாமல் இயங்கும்
எதிர்மறை எண்ணங்கள்"

என்று மகிழ்மதி மனதில் நினைத்துக் கொண்டாள்

‘‘ஆகா! உனக்கு அகம்பாவம் கூடிவிட்டது. புகழ் வெளிச்சத்தில் கண்கள் கூசி, உன்னால் எதையும் பார்க்க இயலவில்லை. நான் பங்கெடுத்த நிகழ்வுகளில், ஒரு நாளும் நீ வெற்றி பெற்றதில்லை. என்பதை நினைவில் கொண்டால் இத்தனை ஆட மாட்டாய்." என்று. கோபத்தில் கத்தினான்.

‘‘ஆக,இதுதான் உன் பிரச்சனை, என்றால்; வரும் ஞாயிறு அன்று நிகழப்போகும் கவிதை அரங்கத்தில் இருவரும் கவிதை அரங்கேற்றுவோம். தலைப்பு."ஆணவம் அகற்றி தூணாய் நில்" வெற்றிக் கனி எவர் கையில்; என்பதை பொறுத்திருந்து பார்ப்போம். அவர்களுக்கு இடையே இருந்த நூல் இடைவெளி; இப்போது நான்கு விரலிடை ஆயிற்று. அந்த ஞாயிற்றுக்கிழமை இருவரும் கவிதை அரங்கத்திற்கு சேர்ந்தே சென்றனர். மகிழ்மதியை பலருக்கும்நன்குதெரிந்திருந்தையும்அவளுக்குமரியாதையுடன்வணக்கம்சொன்னதையும் கவனித்த நந்தன் மனம் புழுங்கினான். தான் கடந்த மூன்று வருடங்களாக இலக்கிய கூட்டங்களுக்கு செல்லாததால்; அவன் முகத்தை அனைவரும் மறந்து விட்டாற் போலிருந்தது. முதலில் மகிழ்மதியின் கவிதை அரங்கேற;கைதட்டலில் அரங்கம் அதிர்ந்தது. நந்தன் மௌனமாக அரங்கத்தை விட்டு வெளியேறினதைப்பார்த்து , மகிழ்மதியும்அவனுடன் சேர்ந்து கொண்டாள்.

‘‘வாழ்வில் புரிதல்
தாழ்வில் இருக்குமா
வாழ்வின் வளமையை
தேடி நிற்குமா"

என்ற யோசனையில் இருவரும் இருந்தார்கள்

நந்தன் விட்டேற்றியாக, வாளா இருக்க, மகிழ்மதி தானே முடிவெடுத்து முனைவர் பட்டத்திற்கு பதிவு செய்து கொண்டு அதற்கான வேலைகளில் ஈடுபட்டாள். மகிழ்மதி எத்தனை முயன்றும் நந்தனால் எளிதாக இயலவில்லை. இதற்கிடையில் அவனது இறுதி தேர்வுக்கு தயாராகும் நேரம் நெருங்க இருவருமே தம்முடைய வேலைகளில் மும்முரமாக; அவர்களது மணவாழ்க்கை ஒரு பிடிப்பில்லாமல், ;விட்டும் தொட்டுமாக போய்க் கொண்டிருந்தது. அவனுடைய தேர்வு முடிந்த மறுநாள் மகிழ்மதி அவனிடம் பேசினாள். "நந்தன்! நாம் நண்பர்களாகவே இருந்திருக்கலாம். திருமணத்திற்கு நாம் தகுதியானவர்கள் இல்லை. உன் தேர்வு முடியும் நாளுக்காகத்தான் காத்திருந்தேன். நாம் ஏன் விவாகரத்து செய்யக்கூடாது?" என்று கேட்க; நந்தனால் அவளுக்கு பதில் அளிக்க இயலவில்லை. வழக்கம் போல் மகிழ்மதியே விவாகரத்துக்கான ஏற்பாடுகளில் இறங்கினாள். ஒரு வருடத்தில் நீதிமன்றத்தில் பரஸ்பர விவாகரத்து தீர்மானமான நிலையில்; இன்று மகிழ்மதி புங்க மரத்தடியில் நந்தனுக்காக காத்திருக்கிறாள்.



“சினத்தின் சின்னம்
மனப் புழுக்கம்
ஆணவம் அறுத்து
தவிர்க்கலாம் அழுத்தம்"

என்று அலை பேசியில் எழுதி நிமிர்ந்தாள்.

நந்தனுடைய ஸ்கூட்டர் சத்தம் அவள் செவியில் விழ, திரும்பிப் பார்த்து , கையசைத்து புன்னகைத்தாள். “ஐந்து வருடத்தில் நந்தன் மிகவும் மாறிவிட்டான்.அவன் விரும்பிய பட்டய கணக்காளராக இருந்தும்.கண்ணில் அந்த துள்ளலுடன் கூடிய மகிழ்ச்சி எங்கே போயிற்று? எவர் அவன் மகிழ்ச்சியை கவர்ந்து போனார்கள்;” என்று சிந்திக்கத் துவங்கினாள்.

நந்தன் மகிழ்மதியைப் பார்த்தான் எப்போதும் மனதை கட்டுப்பாட்டுக்குள் வைத்து மலர்ச்சியுடன் இருப்பவள்; இந்த ஐந்து வருடத்தில்,சோக சித்திரமாய் ஆனதிற்கு, என்ன காரணம்; என்று யோசிக்க ஆரம்பித்தான். இருவரும் நீதிமன்றத்தின் உள்ளே சென்று ,முறைப்படி விவாகரத்து ஆனதற்கான ஆவணங்களுடன் வெளியே வந்தனர். கல்லாகி கிடந்த மனங்களை எப்படி ஆற்றுப்படுத்துவது; என்று புரியாமல் இருந்தனர்."மகிழ்! லெட் அஸ் டாக் ஓவர் எ கப் ஆஃப் காஃபி" என்று கூப்பிட; மகிழ்மதி சற்று தயங்கினாள்.

அவள் கையைப் பற்றி,"கம் ஆன்! ஆஃப்டர் ஆல் வி வேர் மேரிட் ஃபார் ஃபைவ் இயர்ஸ். யு ஸ்டுட் வித் மி இன் மை மோஸ்ட் டிஃபிகல்ட் டைம் ஆஃப் மை லைஃப். ப்ளீஸ் கம்" என்றதும்; மகிழ்மதி அவனுடன் சேர்ந்து நடந்தாள்.

இரண்டு காஃபிக்கு ஆர்டர் செய்தவன், கண்ணில் நீருடன் பேச ஆரம்பித்தான். “மகிழ்! யு மே பி ரைட். வி வேர் நாட் ரெடி ஃபார் எ மேரிட் லைஃப் சரியாக சொல்வதாய் இருந்தால்; நான்தான் திருமணத்திற்கு தயாராக இல்லை. நீ எதையும் எதிர்கொண்டு சமாளிக்கத் தயாராகத்தான் இருந்தாய். வாழ்வை ஒரு புரிதலுடன் அணுகினாய். என் பக்கமாக நின்று நிறைய யோசித்தாய். முனைவர் பட்டத்திற்கான ஆராய்ச்சியைக்கூட என் பொருட்டு தள்ளி வைத்தாய்.உன் தந்தை சொன்னது சரி. நான் சுயநலவாதியாக இருந்து, உன் உழைப்பிலும் ஆதரவிலும் இன்று நல்ல இடத்திற்கு வந்துவிட்டேன். நீ பின்தங்கி நிற்கிறாய். இலக்கிய உலகில் உனக்குக் கிடைத்த அந்த சிறு அங்கீகாரத்தில் என் மனம் புழுங்கி விழுந்தது. அது உனக்கு மன சோர்வை அளித்தும், எனக்கு; எந்த விதத்திலும் நீ அழுத்தம் கொடுக்காமல்; எனது தேர்வு வரை காத்திருந்த பின்பே. பிரிந்து செல்லும் யோசனையை முன்வைத்தாய். எந்த விதத்திலும் உனக்கு அனுசரணையில்லாத இந்த திருமணத்திலிருந்து நீ விடுபட்டுப் போவது,உனக்கு நல்லதுதான். ஆனால்; நினைவுகளில் இருந்து விடுதலை பெற முடியுமா; நம்மால்?" என்று கேட்டவுடன் மகிழ்மதியின் கண்களிலும் நீர் தளும்பியது. “நந்தன்! வாழ்க்கையில் கடினமான முடிவுகளை எடுத்தால்தான் முன்னேற முடியும். சமயத்தில் நாம் போடும் கணக்குகளின் விடை; எதிர்பாராத ஒன்றாய் இருந்தாலும், ஏற்றுக் கொண்டுதான் ஆக வேண்டும். முனைவர்

படிப்பை நானே பார்த்துக் கொள்ளும் நம்பிக்கை எனக்கு உள்ளது. வீ வில் ஸ்டே ஆஸ் ஃப்ரண்ட்ஸ். "தீதும் நன்றும் பிறர் தர வாரா" என்று சொல்லிக்கொண்டே காஃபியை அருந்தாமலேயே எழுந்தாள்.

''பின்னே பார்க்காமல்
எடுக்கும் முடிவுகள்
முன்னேறும் முயற்சியில்
கடின முடிவுகள்"

என்று ஒரு துண்டு காகிதத்தில் எழுதி காஃபி கோப்பையின் கீழ் வைத்திருந்ததை சற்று நேரம் கழித்தே நந்தன் பார்த்தான்.

மகிழ்மதி முனைவர் பட்டத்தைப் பெற மேலும் மூன்றாண்டு காலம் ஆயிற்று. நந்தன் அவன் வாழ்க்கையின் உச்சத்தை நோக்கிப் போய் கொண்டிருந்தான். அவ்வப்போது இருவரும் இலக்கிய மேடைகளில் சந்தித்துக் கொண்டும் அளவளாவிக் கொண்டும் வார இறுதியில் சேர்ந்து உணவு அருந்திக் கொண்டும் இருந்தனர். முனைவருக்கான பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்ட நந்தனிடம் தனக்கு அயல்நாட்டில் ஆராய்ச்சியாளராக பணி கிடைத்துள்ளதைச் சொன்னாள்

நந்தன்,"மகிழ்! இப்போது நான் திருமணத்திற்கு முற்றிலும் தயாராக இருக்கிறேன். நாம் ஏன் மீண்டும் திருமணம் செய்து கொள்ளக் கூடாது? உன்னைத் தவிர வேறு எவர் என் வாழ்க்கை இணையாக இருக்க முடியும்? எனக்காக நீ செய்த தியாகங்கள் எல்லாம் போதும். நீ பணிபுரியப்போகும் நகரில் எனக்கான வேலைவாய்ப்புகள் காத்திருக்கிறன. என்னை மன்னித்து முழுவதுமாக ஏற்றுக்கொள்வாயா?" என்று கேட்க; மகிழ்மதி ஒரு குறுஞ் சிரிப்புடன், கண சிமிட்டலுடன், ''என் முடிவை எடுக்கும் உரிமை எனக்கு உள்ளதல்லவா," என்று வினவினாள். நந்தன் தனது வழக்கமான தோள் குலுக்கலுடன்" கண்டிப்பாக" என்று புன்னகையுடன் தன் கரத்தை அவள் கரத்தோடு இணைத்துக் கொண்டதற்கு, மகிழ்மதி மறுப்பேதும் சொல்லவில்லை.

'' தன் பலம் கொண்டு
அம்பலம் ஏறினாள்
தன் குறை விட்டு
சரணம் அடைந்தான்"

மதுரை, சந்திரோதயம் பதிப்பகத்தின்
நூல் விலைப்பட்டியல்

Mob.: 7010997639

வ. எண்	நூல்கள்	விலை (Rs.)
1.	திருவிளையாடல் புராணக் கதைகள் எளிய உரைநடையில்	200
	கவிஞர் முத்தமிழ் விரும்பியின் கவிதை நூல்கள்	
2.	உன்னோடு உரையாடுதல்	100
3.	காதல் மொழி	80
4.	பார்வையில் பூத்த நிலா	100
5.	தேனடையும் வரலாறு	100
6.	நுண்கலை மருத்துவன்	200
7.	தொடரும் புழுதிக்கால்கள்	100
	முனைவர் செ. இராஜேஸ்வரியின் எம்.ஜி.ஆர். பற்றிய நூல்கள்	
1.	வெற்றித்திருமகன் எம்.ஜி.ஆர்.	200
2.	எம்.ஜி.ஆர். நிழல் நிஜம் நிரந்தரம்	200
3.	சிக்கு மங்கு சிக்கு மங்கு சச்ச பப்பா (எம்.ஜி.ஆர். கற்பிக்கும் குழந்தை வளர்ப்பு முறைகள்)	200
4.	வீரமகன் போராட வெற்றி மகள் பூச்சூட	200
5.	மகளிர் போற்றும் மக்கள் தலைவர் எம்.ஜி.ஆர்.	200
6.	எம்.ஜி.ஆர். ஒரு ஜீவ நதி	200
7.	எம்.ஜி.ஆர். ஒரு கலியுகப்போராளி	200
8.	ஒளி விளக்கு எம்.ஜி.ஆர்.	200
9.	வெற்றிப் படிக்கட்டில் நாடோடி மன்னன் – I	200
10.	நீங்க நல்லா இருக்கணும் [எம்.ஜி.ஆரின் திரைப்படப் பாடல்கள் -I]	200
11.	பாட்டுடைத் தலைவன் எம்.ஜி.ஆர். [எம்.ஜி.ஆரின் திரைப்படப் பாடல்கள் - II]	200
12.	இரசிகர்களின் இதய தெய்வம் எம்.ஜி.ஆர்.	200
13.	முத்தமிழ்க் காவியம் மதுரை வீரன்	200
14.	இரட்டை வேடத்தில் ஜொலிக்கும் எம்.ஜி.ஆர்.	200
15.	எம்.ஜி.ஆர். படங்களில் அறிவியல் புனைவு	200
16.	படகோட்டி, மீனவ நண்பன் ஓர் ஒப்பீடு	200
17.	Unique Fandom of MGR	200
18.	எம்.ஜி.ஆர். படங்களில் தொழில் தர்மம்	200
19.	எம்.ஜி.ஆர். படத்தில் சண்டைக் காட்சிகளின் சுவாரஸ்யங்கள் – I	200
20.	எங்க வீட்டுப்பிள்ளை	200
21.	எம்.ஜி.ஆர். வீடும் விருந்தும்	200

முனைவர் சந்திரிகா சுப்பிரமணியன் நூல்கள்

1.	*தலைமை பொறுப்பேற்கலாம்*	*120*
2.	*இணையத் தமிழ்*	*150*
3.	*ஊடகச் சட்டங்கள்*	*250*
4.	*ஆஸ்திரேலியாவில் அருந்தமிழ்*	*200*
5.	*கொசு வீட்டில் பாயாசம் (சிறுவர் நூல்)*	*100*
6.	*மாயோன் வீட்டுத் தோட்டத்தில் (சிறுவர் நூல்)*	*50*

சமூகப்பண்பாட்டு ஆய்வு நூல்கள்

1	*பண்பாட்டு நகர்வுகள் (தமிழ் நாட்டில் இருந்து ஜப்பானுக்கு)*	*200*
2.	*பெண் தெய்வ வழிபாடு*	*200*
3.	*தேவேந்திரன்*	*200*
4.	*மருதநிலப் பெண் தெய்வங்கள் (வராகி, பிடாரி, தவ்வை)*	*200*
5.	*இரு நிலத்தில் திருமுருகன்*	*200*
6.	*முன்னோர் வழிபாடு (கதிரவன், காலதேவன், நாகர் வழிபாடும்)*	*200*
7.	*வேளாண்மரபில் விதைப்பும் பூப்பும்*	*200*
8.	*யானைக்கடவுள்*	*200*
9.	*பெண் பூப்பின் புனித வழிபாடு*	*200*
10.	*பெண் தெய்வ வழிபாடு தோற்றமும் வரலாறும்*	*300*
11	*வழிபாட்டின் வேர்களைத் தேடி*	*300*

சமய விளக்க நூல்கள்

1	*சாமிகளின் சரித்திரம் (வரலாறும். வழிபாடும்)*	*300*
2	*விரதங்களின் விளக்கம்*	*200*

முனைவர் செ. இராஜேஸ்வரியின் கவிதைத் திறனாய்வு நூல்கள்

1.	*பாடுபொருளும் பாசப்பொருளும்*	*250*
2.	*"பூ மர நிழலி"ன் களமும் காலமும்*	*200*
3.	*"2020 தைமாதத்தில் இன்று" கவிதையில் அடிக்கருத்தியல் ஆய்வு*	*100*
4.	*கவிஞர் முத்தமிழ் விரும்பியின் கவிதையில் காதல்*	*100*
5.	*பயணக் கவிதைகள்*	*100*

ஆங்கிலக் கவிதைகளின் தமிழ் மொழி பெயர்ப்பு முனைவர் செ. இராஜேஸ்வரி

1.	*எட்டுத்திக் கும் செல்வீர்*	*200*
2.	*அவன் கடவுளுக்கு நிகரானவன்*	*200*
3.	*செக்கச் சிவந்த ரோஜா*	*200*
4.	*கலீல் ஜிப்ரா னின் "மணலும் நுரையும்"*	*200*
5.	*கலீல் ஜிப்ரானின் "பாடல்கள் 14"*	*200*
6.	*மொழிபெயர்ப்பியல் ஆய்வு (ஆய்வு நூல்)*	*200*
7.	*கவிதை மொழிபெயர்ப்பு*	*200*
8.	*நவீன மொழிபெயர்ப்பு உத்திகள் (Co-author)*	*300*
9.	*மொழிபெயர்ப்பில் பெயரும் பொருளும்*	*200*

10.	*Translating Tamil poetry*	*300*

சிறு கதை நூல்

1.	*அமராவதியின் காதல் - சத்யப்பிரபா*	*120*
2.	*ரோஜா மொட்டு (கவிதை சித்திரங்கள்)*	*100*
3.	*மகிழ் பேரின்பம் (poems)*	*200*
4.	*பொன் வேலி (poems) நூல்கள்*	*200*
5.	*திருக்குறள் கதைகள் - பகை மாட்சி*	*100*

தே.ஞானசேகரனின் நூல்கள் ஆங்கிலத்தில் – முனைவர் செ. இராஜேஸ்வரி

1.	*Emerging Mallarism*	*100*
2.	*Festival of lord Indra*	*250*
3.	*Role of Devendirar's in Indian war of Independence (Sundaralingam Kudumbanar)*	*200*
4.	*Re reading of Pallu literature (in print)*	*300*
5.	*Mallariyan Literature (in print)*	*200*
7.	*Frontyard without My Dad (Poem)*	*200*
2.	*Emerging Mallarism*	*100*

English Novel Part

1.	*Aranyani – Vijeni*	*300*
2.	*Genetic traits of Vengai anchor by Tamilmagan*	*250*
1.	*Love Thamizh (online multilingual monthly about Tamilnadu History Language and Culture)*	*500*

Tamil Classics in English (Selected Poems)

1.	*Ainkurunuuru*	*200*
2.	*Kurunthokai*	*200*
3.	*Puranaanuuru*	*200*
4.	*Pastoral Literature of Classic Tamil (Mullai Pattu & Mullai Kali)*	*300*
5.	*A Classic Portrait of Madurai City (Madurai – Kanchi (Tamil) – the earliest heroic poetry)*	*300*
6.	*Songs of Classic Tamil Poetess Avvai*	*300*

Didactic Literature

1.	*Naaladiyaar*	*200*
2.	*Aacharak Kovai*	*200*

Medievel Literature

1	*A peasant with two wives (Mukoodal Pallu)*	*300*
2	*A Predictress from the Hill (Thiru Kutrala Kuravanji)*	*300*
3	*One line guidelines in Tamil*	*200*

திருக்குறள் ஆய்வுநூல் வரிசை

1	உலகத் தமிழர்களின் ஒரே நூல் - திருக்குறள்	*200*
2	வாழ்வியல் வழிகாட்டி திருக்குறள்	*200*

Sangam Classics in Modern Tamil

1.	குறுந்தொகைக் கவிதைகள் (தற்காலத் தமிழில்)	*200*

Studies on Tamil Grammar

1.	தமிழ் இலக்கணத்தில் வேற்றுமை உருபுகள்	*300*

ஜோதிட நூல்கள்

1.	மேஷ ராசி சூட்சும ரகசியம்
2	ரிஷப ராசியின் சூட்சம ரகசியம்
3	நவரத்தினமும் உபரத்தினமும்
4	மிதுன ராசியின் சூட்சம ரகசியம்

வாங்கிப் பயன் பெறவீர்!!! தொடர்புக்கு:

சம்சுல் ஹுதா பானு

99403 35306

“இந்திய மாநிலங்களவையின் முதல் பெண் துணைத் தலைவர்: வயோலெட் ஆல்வா – ஓர் வரலாற்றுப் பயணம்!”

லயன் MJF. ச.வெங்கடேசன்
நோபல் ஹாட்ஸ் அரிமா சங்கம்

இந்திய அரசியல் வானில் பெண்கள் காலடி எடுத்து வைப்பதே பெரும் சவாலாக இருந்த காலகட்டத்தில், மாநிலங்களவையின் துணைத் தலைவர் இருக்கையில் அமர்ந்து, இந்திய ஜனநாயகத்தின் மாண்பைக் காத்த ஒரு பெண்மணி இருந்தார். அவர்தான் வயோலெட் ஆல்வா. (Violet Hari Alva). 1962-ல் அவர் அந்தப் பொறுப்பை ஏற்றபோது, அது வெறும் பதவி உயர்வு மட்டுமல்ல; இந்தியப் பெண்களின் அரசியல் அதிகாரத்திற்கான திறவுகோலாக அமைந்தது.

மைசூர் மண்ணிலிருந்து நாடாளுமன்றம் வரை...

ஏப்ரல் 24, 1908-ல் இன்றைய கர்நாடகாவின் மைசூர் மாகாணத்தில் ஒரு கத்தோலிக்கக் குடும்பத்தில் பிறந்தார் வயோலெட். கல்வியே பெண்களுக்கு மறுக்கப்பட்ட காலத்தில், சென்னை மற்றும் மும்பையில் St. Xavier's College மற்றும் சட்டக் கல்வி நிறுவனங்களில் பயின்றார்.

சட்டம் என்பது குற்றவாளிகளைத் தண்டிக்க மட்டுமல்ல, ஒடுக்கப்பட்ட பெண்களின் உரிமைகளை மீட்கும் கருவி என்பதையும் அவர் ஆழமாக நம்பினார்.

காந்தியப் பாதையில் ஓர் இளம் வீராங்கனை

விடுதலைப் போராட்டத் தீ நாடு முழுவதும் பரவியபோது, காந்தியச் சிந்தனைகளால் ஈர்க்கப்பட்ட வயோலெட் காங்கிரஸ் இயக்கத்தில் இணைந்தார்.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு எதிராகத் துணிச்சலாகப் போராட்டக் களங்களில் நின்றார்.விடுதலைப் போராட்டத்தில் அவர் வெறும் ஆதரவாளராக மட்டுமல்ல: க்விட் இந்தியா இயக்கத்தில் பங்கேற்றார். அதற்காக பிரிட்டிஷ் ஆட்சியால் கைது செய்யப்பட்டு சிறையிலும் அடைக்கப்பட்டார்.

"பெண்கள் அடுப்படியைத் தாண்டி அரசியல் களத்திற்கு வர வேண்டும்" என்ற அவரது முழக்கம் அக்காலத்துப் பெண்களிடையே பெரும் விழிப்புணர்வை ஏற்படுத்தியது.

பெட்டிச் செய்தி: சாதனையின் மைல்கல்!

1962ஆம்ஆண்டு,இந்தியநாடாளுமன்றத்தின் மாநிலங்களவை (Rajya Sabha) துணைத் தலைவராகப் பதவியேற்ற முதல் பெண்மணி வயோலெட் ஆல்வா ஆவார். அவரது நாடாளுமன்ற மேலாண்மைத் திறன் இன்றும் ஒரு பாடமாகப் போற்றப்படுகிறது.

இந்தியாவின் முக்கிய கிறிஸ்தவப் பெண் அரசியல் தலைவர்களில் ஒருவராகவும், தேசிய அளவில் உயர்ந்த பதவியை அடைந்த முதல் கத்தோலிக்கப் பெண்களில் ஒருவராகவும் குறிப்பிடுகின்றன.

பேனாவும் ஒரு போர்க்கருவியே!

அரசியல் மற்றும் சட்டப் பணிகளுக்கு இடையே இதழியலிலும் தனது முத்திரையைப் பதித்தார். அவர் தனது கணவர் Joachim Alva உடன் சேர்ந்து "Forum" என்ற இதழை நடத்தினார். அது வெறும் பெண்கள் இதழாக மட்டும் இல்லாமல்: தேசியவாதம்,சமூக நீதி,அரசியல், விமர்சனம், பெண்கள் உரிமை போன்ற கருத்துகளை வலியுறுத்திய ஒரு முக்கியஅறிவுசார்இதழாகஇருந்தது.. இவரதுகூர்மையானஎழுத்துக்கள்பலபெண்களைச் சிந்திக்கத் தூண்டின.

கண்ணியமான தலைமை

மாநிலங்களவையின் துணைத் தலைவராக அவர் பணியாற்றிய காலம் 'பொற்காலம்' என்றே சொல்லலாம். சபையில் காரசாரமான விவாதங்கள் நடக்கும்போது, மிக அமைதியாகவும் அதே சமயம் கண்டிப்புடனும் சபையை வழிநடத்துவதில் அவர் வல்லவர்.அவர் சபை நடைமுறைகளை மிகவும் ஒழுங்காக கையாள்ந்தவர்.

கட்சி வேறுபாடுகளை மீறி மரியாதை பெற்றவர்.

பெண்களும் உயர்ந்த அரசியல் நிர்வாகத் திறன் கொண்டவர்கள் என்பதை நிரூபித்தவர். சட்ட நுணுக்கங்களை அவர் கையாண்ட விதம் சக அரசியல் தலைவர்களிடையே அவருக்குப் பெரும் மரியாதையைப் பெற்றுத்தந்தது.

விழுமியங்களின் சங்கமம்

வயோலெட் ஆல்வாவின் தனிப்பட்ட வாழ்க்கையும் ஒரு முன்மாதிரியே. தனது கணவர் ஜோஆகிம் ஆல்வாவுடன் இணைந்து சமூக சீர்திருத்தப் பணிகளில் ஈடுபட்டார். அவரது செயல்பாடுகளில் பிரதிபலித்த மனித நேயம் மற்றும் சேவை மனப்பான்மை, அவர் வளர்ந்த பண்பாட்டுப் பின்னணியின் அடையாளமாகத் திகழ்ந்தது.

சவால்களைத் தகர்த்த சாதனைப் பெண்

ஆண் ஆதிக்க அரசியல் சூழல், சமூகக் கட்டுப்பாடுகள் எனப் பல தடைகளைத் தனது அறிவாற்றலால் கடந்தார். நவம்பர் 20, 1969-ல் அவர் மறைந்தாலும், இந்திய ஜனநாயகம் இருக்கும் வரை அவர் உருவாக்கிய பாதையும், அவரது பெயரும் நிலைத்திருக்கும்.

""இந்திய ஜனநாயகத்தின் உயர்ந்த அரங்குகளில் பெண்களின் குரல் ஒலிக்க வேண்டும் என்ற கனவை, தனது வாழ்க்கையால் நனவாக்கியவர் வயோலெட் ஆல்வா."

கவிதை

எல்லாக் கடன்களையும்
சீக்கிரமே
அடைக்க வேண்டும்
எல்லாக் கடமைகளையும்
அவசரமாய் முடிக்க வேண்டும்
எல்லாப் பொறுப்புகளிலிருந்தும்
வேகமாய் விடுபட
வேண்டும்

பின்
யாரும் அறியாமல்
யாரிடமும் சொல்லாமல்
யாரெனும் அடையாளங்கள்
துறந்து
எங்கேனும்
கொஞ்ச காலம்
தொலைந்து போக
வேண்டும்
நான்

இப்போதைக்கு
அதுவொன்றே
ஆகப்பெரும்
பிரார்த்தனையும்
விருப்பமும்

ரீஸ்கா முக்தார்-

நட்பின் விளக்கம்

அசீபா பாத்திமா

ஒரு முறைதான், ஒரே ஒரு முறைதான், உங்கள் உலகத்தை மாற்றக் கூடிய ஒருவரைச் சந்திப்பீர்கள். வேறு ஒருவரோடும் பகிர்ந்து கொள்ளாத விஷயங்களை அவர்களிடம் சொல்வீர்கள்.

நீங்கள் சொல்வது போலவே அவர்களால் உள்வாங்கவும் முடியும். உங்களை முழுதாகக் கேட்க விரும்புவார்கள். உங்கள் எதிர்காலம், நிறைவேறாத கனவுகள், எட்ட முடியாத சிகரங்கள், வாழ்க்கை உங்கள் மீது வீசிய கொடும் கற்கள் என அனைத்தையும் அவர்களிடம் கொட்டித் தீர்ப்பீர்கள். உங்கள் வாழ்வில் எது நடந்தாலும், அவர்களிடம் சொல்வதற்காகக் காத்துக் கொண்டிருப்பீர்கள். உங்கள் பரவசத்தில் அவர்களும் பங்கு கொள்வார்கள். உங்களோடு அழவோ, உங்கள் லூசுத்தனத்தைப் பார்த்து சிரிக்கவோ தயங்க மாட்டார்கள்.

உங்கள் உணர்ச்சிகளை அவர்களால் காயப்படுத்த முடியாது. உங்களை மதிப்பிட மாட்டார்கள். உங்களை வளர்த்தெடுக்க அனைத்தையும் செய்வார்கள்.

உங்களுக்கே தெரியாத உங்களை காண்பித்து, உங்களை அழகாக்குவார்கள். அவர்களின் அருகாமையில் ஒரு வித மன அழுத்தமோ பொறாமையோ இருக்காது.

காற்றில் அமைதியை தூவி இருப்பார்கள். அவர்கள் உங்களை உங்களாக நேசிப்பதால், நீங்கள் நீங்களாகவே இருக்கலாம்; எதைப் பற்றியும் கவலை கொள்ள தேவையில்லை. ஒரு வார்த்தை, ஒரு பாடல், கை கோர்த்து நடந்த நொடிகள் மிகவும் முக்கியமானதை உங்கள் இதயத்தில் வாழும். உங்கள் சிறு வயது ஞாபகங்கள் தெளிவாக மனதில் அலையடிக்கும். நீங்கள் குழந்தையாக மாறுவீர்கள்.

வண்ணங்கள் அழகாகவும் பிரகாசமாகவும் தெரியும். அதுவரை எப்போதாவது இருந்த சிரிப்பு, உங்கள் வாழ்வில் தினசரி வாழ்வில் மறுக்க முடியாத மறக்க முடியாத ஒரு நிகழ்வாக மாறிவிடும். ஒரு நீண்ட நாளில், களைத்துப் போகும் நேரத்தில், அவர்களது ஒரு குறுஞ்செய்தி, ஒரு அழைப்பு உங்கள் முகத்தில் சிரிப்பை வர வைக்கும். அவர்களுடைய இருப்பு அழகான திருப்தியைத் தரும். அவர்களோடு பேச வேண்டும் என்ற அவசியமே இல்லை. உங்களுக்கு ஆர்வமில்லாத விஷயங்கள் கூட அவர்களுக்குப் பிடிக்கும் என்ற ஒரு காரணத்தால் உங்களை பரவசமாக்கும்.

உங்கள் நாளின் ஒவ்வொரு நொடியிலும், உங்களின் ஒவ்வொரு செயலிலும் இவரின் நினைவு இருக்கும். நீல வானம், தென்றல், புயல் போன்றவற்றில் அவரைக் காண்பீர்கள். உங்கள் இதயம் என்றேனும் ஒரு நாள் உடைக்கப்படலாம் எனத் தெரிந்தும் அதை அவருக்குக் கொடுப்பீர்கள். அப்படி கொடுப்பதில் எல்லையற்ற ஆனந்தத்தைக் கண்டடைவீர்கள். உடைந்து போகலாம் எனத் தெரிந்து பின்புதான் உண்மையான மகிழ்ச்சியை அடைய முடியும். உண்மையான மகிழ்ச்சி உங்களை பயம் கொள்ளச் செய்யும்.

ஒரு உண்மையான நட்பு, உங்களுக்கு உண்மையாக இருக்கும் ஒரு பாதியாக அவர் இருக்கிறார் என்ற எண்ணம் உங்களுக்குத் துணையாக இருக்கும். வாழ்க்கை வித்தியாசமானதாக மாறி விடுகிறது. பரவசமாக. மகிழ்வாக. மதிப்புள்ளதாக. உங்களின் ஒரே நம்பிக்கை அவர்கள் உங்கள் வாழ்க்கையின் பிரிக்க முடியாத ஒரு பகுதி என்பதுதான்..

-பாப் மார்லே

(தமிழில்: அசீபா பாத்திமா

The woman sitting between Tim Cook and Elon Musk wasn't a politician or celebrity.

She used to work factory shifts after dropping out of school at 15.

At a high-profile state banquet hosted by Chinese President Xi Jinping for US President Donald Trump, cameras caught seated directly between two of the biggest names in tech. Most people outside China had never heard of her before that moment.

But the companies those men run have depended heavily on hers for years.

WS
WORTH SHARING
MEET ZHOU QUNFEI – THE WOMAN SEATED BETWEEN TIM COOK AND ELON MUSK AT CHINA'S STATE BANQUET
(READ DESCRIPTION FOR DETAILS)

Zhou came from a poor village in Hunan and moved to Shenzhen as a teenager looking for factory work. In the early 1990s, she reportedly started a tiny glass-printing business with relatives inside a residential apartment building. Years later, that small operation became Lens Technology, the company known for making smartphone cover glass and other tech components.

Then came Apple.

When the first iPhone era exploded globally, Lens became part of Apple's supply chain at exactly the right time. That partnership changed everything. The company grew into a manufacturing giant worth over 180 billion yuan, and Zhou became one of the richest self-made women in China.

That banquet photo hit differently for a lot of people online.

Not because of luxury or politics, but because the woman in the middle once stood on factory floors herself. Now she's seated between two of the most powerful businessmen on earth while world leaders watch nearby.

A lot of people spend years chasing "networking opportunities." She built something so massive the world's biggest CEOs ended up coming to her table.

முகநூல் பதிவு

இயற்கை இனி செயற்கை!

மு.செந்தாமரை

அன்புள்ள மானிடர்களே!

நான் இயற்கை எழுதுகிறேன்.
நீங்கள் நலமாயிருக்க நான் துணை புரிகிறேன்.

நான் நலமாயிருக்க நீங்கள் உதவி செய்கிறீர்களா?

அல்லது உதவி செய்வது போல் நடிக்கிறீர்களா?

இயற்கை என்றால் என்னவென்று மேடை தோறும் சமூக ஊடகங்கள் தோறும் முழங்குகிறீர்களே!

உண்மையாய்ப் பேசுகிறீர்களா?

"மழை பொழியும் போது மகிழ்கிறீர்கள்"

பெருவெள்ளமெனப் பெய்திடும் போது வசைபாடுகிறீர்களே!

அக்னிநட்சத்திரமும் சித்திரை வெயிலும் சுள்ளென அடிக்கும் போது நிழல் தேடும் உள்ளங்களே!

அந்நிழல் தரும் தருவை நட்டீர்களா?
இல்லை நீர்தான் விட்டீர்களா?

சோலைகளை அழித்துச் சாலைகள் விரிவாக்கம்
மலைகளை அழித்து ஆலைகள் பெருக்கம்
மிருகங்கள் உறைவிடத்திலே மனிதர்கள் இருப்பிடம்.

வரும் காலங்களில் உங்கள் சந்ததிகளுக்கு என்ன வளம் வைத்துவிட்டுப் போகிறீர்கள்?

அசையாச்சொத்துகளும், நகை,பணங்களுமா?

மானிடனே
சமுதாயமே இயற்கை
வளத்தை விட்டுச்செல்லுங்கள் உங்கள் தலைமுறை செழிக்க, துளிர்க்க.

பூமித்தாயவளைப் புனிதமாய் போற்றுகிறீர்களே அவளை மாசற்றுக் காக்க முயல்கிறீர்களா?
எங்கும் நெகிழிகள்,குப்பை கூளங்கள்.

கூவம் என்பது கழிவுகளின் கூடமாகிவிட்டது.

இங்கே
நாடெங்கும் கூவம் நதிகளே அல்லவா ஓடுகிறது.

தொழில் நுட்பம் வளர வளர
இயற்கை நாங்கள் அழிவது உங்கள் கண்களுக்குத் தெரிகிறதா?

அலைபேசிக் கோபுரங்கள் வந்தது
உங்கள் உறவுகள் சிரித்தது.
என் சிட்டுக்குருவிகள் உறவுகள் அழிகிறதே!
அழுகிறதே!

சாலை விரிவாக்கம் என்று நூறு வயதான மரங்களையும்
வெட்டிச்சாய்க்கிறீர்களே?
பதர்களே
ஒரு வார்த்தை தட்டிக்கேட்க யாரேனும் வருகிறீர்களா?

எங்கோ சில பூங்காக்கள் மரங்கள்
அங்கே அணில்களும் மயில்களும்
குயில்களும்
குருவிகளும் கூத்தாடுகிறது.
ஆனால் அவை கொறித்துத் தின்ன
ஒரு பழ மரங்கள் உண்டா?

வீடுகளின் முன்னே அழகிற்காய் செடிகள் வளர்க்கும் நீங்கள் நிழல் தரும்
மரங்களை வளர்க்கலாம் அல்லவா?
காட்டை அழித்து வீட்டைக் கட்டி
குளிர்சாதன வசதியில் மிதக்கும் சுயநலம் மிக்க மனிதர்களே

இயற்கையான காடுகளில் செயற்கையான தடங்களை
விட்டுச்செல்லாதீர்கள்.

எங்களுக்கென்று ஒரு ஒலியும்
சப்தமும்
இசையும் உள்ளது.

ரசிக்க வருகிறோம் என்று எங்களை வியாபாரம் செய்கிறீர்கள்!

இருக்க ஒரு வீடு போதாதா
ஏன் வளங்களை அழித்துப் பலவீடுகள்
அடுக்கு மாடிக் குடியிருப்புகள்
பேராசை பெருநஷ்டம்

காற்றில் மாசு
ஒலியில் மாசு
நீரில் மாசு
உணவில் மாசு
எங்கும் மாசு

உங்களுக்குத்
தண்ணீருக்குப் பஞ்சம்
மழைக்குப் பஞ்சம்
உணவிற்குப் பஞ்சம்

எங்கள் மிருகங்களுக்கு உறைவிடமே பஞ்சமாக
உள்ளதே!

பூமியையும் மனிதர்களையும் காக்கும் வானில் மிதக்கும் கேடயம்
ஓசோனையும் மாசெனும் கம்பியில் துளையிட்டு விட்டாயிற்று...

இரசாயன ஆலைகளும்
அதன் கழிவுகளும் சாயப்பட்டறைகளும் யார் தடுப்பது.

மானுடங்களே ஒன்றை வேண்டுகோளாக விடுத்து எனது கவிதையை
நிறைவு செய்கிறேன்.

இயற்கையைத் தொலைத்து விட்டு
தேடிக்கொண்டு அலையும் காலம் இதோ வந்து விட்டது.

நிரந்தரமாக எங்கள் குழந்தைகளை
அழிக்கத் துவங்கி பல வருடங்கள் ஆகிவிட்டது.

இப்போது நினைத்தாலும் உங்களால்
காக்க முடியும் வளங்களை,
முயற்சி செய்யுங்கள், ஒன்று கூடுங்கள் கைகோருங்கள்
எங்கள் வளங்களை வாழ வழி செய்யுங்கள்...
படங்களிலும் பாடங்களிலும்
கணிப்பொறியிலும் காட்டாது

உங்கள் வாரிசுகளுக்கு இயற்கையாக எங்களை அறிமுகப்படுத்துங்கள்.

மகிழ்ச்சியாய் வாழ வழி செய்யுங்கள்.
நெகிழ்ச்சியாய் நான் நன்றி கூறுகிறேன்.

மு.செந்தாமரை

நோய் தீர்க்கும் காவல் தெய்வம் சமயபுரம் மாரியம்மன்

பிரபா எஸ். ராஜேஷ்

திருச்சிக்கு வடக்கே 15 கிலோ மீட்டர் தொலைவில் சமயபுரத்தில் எழுந்தருளியிருக்கும் மாரியம்மன் சர்வ வல்லமை படைத்தவளாக நோய் தீர்க்கும் தாயாக காவல் காக்கும் கடவுளாக கோடிக்கணக்கான பக்தர்களால் வணங்கப்பட்டு வருகின்றாள்.. சமயபுரம் கொள்ளிடம் நதிக்கு வடக்கே பதினோரு கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. கண்ணனூர், கண்ணபுரம், விக்ரமபுரம், மாகாளிபுரம் என்ற பல பெயர்கள் இவ்வூருக்கு உண்டு. கண்ணனூர் ஹொய்சள மன்னன் வீர சோமேஸ்வரன் ஆட்சியில் தலைநகரமாக விளங்கிற்று. இவ்வூரில் செல்லாயி அம்மன் கோவில், உஜ்ஜயினி மாகாளியம்மன் கோவில், போஜிஸ்வரன் கோவில் ஆகியவை உள்ளன. இவை எல்லாவற்றையும் விட மாரியம்மன் கோவில் மிகுந்த சிறப்பும் செல்வாக்கும் பெற்றுள்ளது.

பிறந்த வீட்டுச் சீர்

மாரியம்மன் ஆண்டுதோறும் தை பூசத்தன்று காவிரி நதிக்கரைக்குப் சென்று தன் தமையனைச் சந்திப்பாள். ஸ்ரீரங்கத்தில் இருந்து ரங்கநாதர் தங்கைக்கு அலங்காரச்சீர் கொண்டு வந்து கொடுப்பார். அன்றைக்கு ஸ்ரீரங்கம் ஊரில் இருக்கும் குடும்பங்கள் திருமணம் செய்து கொடுத்த தங்கள் மகள்களுக்கு சீர் கொண்டு போய் கொடுப்பார்கள். தைப்பூசத்திற்கு முன்பு பத்து நாள் திருவிழா நடக்கும் தைப்பூசம் அன்று கண்ணாடி பல்லக்கில் அம்மன் புறப்பட்டு வட காவிரிக்கு வந்து திருவரங்கத்தின் ரங்கநாதரிடம் சீர் பெற்று இரவு முழுக்க அங்கேயே ஆற்றங்கரையில் தங்கியிருந்து பின்பு அதிகாலையில் தன் கோவிலுக்கு வருவாள். விடிய விடிய அன்று மக்கள் கூட்டம் காவிரி நதிக்கரையில் அம்மனைப் பார்க்க வரும். பக்தர்கள் கட்டுச் சோறு கட்டிக் கொண்டு வந்து குடும்பத்தோடு தை மாத முழு நிலா அன்று நிலவின் ஒளியை ரசித்து பக்தி மார்க்கத்தில் மூழ்கித் திளைத்து வீடு திரும்புவார்கள்

புலம்பெயர்ந்த அம்மன்

ஆதியில் மாரியம்மன் வைஷ்ணவி தேவியாக ஸ்ரீரெங்கத்தில் இருந்தாள். அதன் உக்கிரம் தாங்க இயலாமல் அவளை அங்கிருந்து அகற்ற முடிவு செயதனர். இப்போது இனாம் மாரியம்மன் என்று அழைக்கும் இடத்தில் கொண்டு வந்து வைத்து இளைப்பாறினர்.

பின்பு அங்கிருந்து தற்போது கோயில் கொண்டுள்ள இடத்தில் கொண்டு வந்து பிரதிஷ்டை செய்துள்ளனர்.

கோயில் வரலாறு

விஜயநகர மன்னன் இங்கு படையெடுத்து வரும்போது கண்ணனூரில் எழுந்தருளியிருக்கும் மாரியம்மன் வணங்கி இப்போரில் வெற்றி பெற்றால் அம்மையே உனக்கு பெரிய கோவில் கட்டுவேன் என்று வேண்டிக் கொண்டான். அவன் வெற்றி பெற்றதும் அவனது பிரதிநிதியாக திருச்சியை ஆட்சி செய்து வந்த விஜய் ரங்க சொக்கநாதனால் 1706 இல் அம்மனுக்குப் பெரிய கோவிலைக் கட்டினார். கண்ணனூர் மாரியம்மன் காலப்போக்கில் சமயபுரம் மாரியம்மன் ஆகிவிட்டாள்.

அம்மனின் தோற்றம்

மாரியம்மன் சிலை சுதையினாலும் மூலிகையினாலும் ஆனது. எனவே இதற்கு அபிஷேகம் கிடையாது. இங்கு மாரியம்மன் எட்டு கைகளும் சர்ப்பக் குடையும் காலில் அசுரர்களை மிதித்த படியும் காட்சியளிக்கின்றாள். அம்மன் கோபமாக இல்லாமல் அமைதி தவழும் முகத்துடன் விளங்குகின்றாள். ஒரு காலை மடித்து ஒரு காலைத் தொங்கவிட்டு லலிதாசனத்தில் அரசியாக வீற்றிருக்கின்றாள். தலைக்கு மேலே ஐந்து தலை நாகம் குடை விரித்து இருக்கின்றது. எட்டு கைகளிலும் கத்தி உடுக்கை தாமரை மலர்

திரிசூலம் கபாலம் பாசம் காண்டீபம் காண்டாமணி ஆகியவற்றை ஏந்தி இருக்கின்றாள். இச்சிலை கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. உற்சவ மூர்த்திக்கு அபிஷேகங்கள் உண்டு. 1991 ஆம் ஆண்டு உற்சவர் சிலையை ஜி பாலமுருகன் ஜி முரளி குமார் என்ற சகோதரர்கள் தானமாக வழங்கினர்

நேர்த்திக்கடன்

சமயபுரத்தில் மாவிளக்கு எடுத்தல், தீச்சட்டி எடுத்தல் போன்ற அம்மனுக்குரிய நேர்த்திக்கடன்கள் அதிக எண்ணிக்கையில் நிறைவேற்றப்படுகின்றன

சிலர் பச்சை மூங்கிலில் மஞ்சள் துணியில் தூளி கட்டி அதில் குழந்தையைப் படுக்க வைத்து கோவிலை மூன்று சுற்று சுற்றி வருகின்றனர். குழந்தைக்கு நோய் சுகமாக வேண்டும் என்று வேண்டிக் கொண்டவர்கள் இத்தகைய நேர்ச்சையை செய்கின்றனர். சமயபுரம் அம்மனை வேண்டிக் கொண்டால் அறுவை சிகிச்சைகள் தவிர்க்கப்பட்டு விடும். நோய் குணமாகும் என்று நம்பிக்கை நெடுங்காலமாக நிலவுகின்றது.

தலைமுடி காணிக்கை அளிப்பவர்கள் இங்கு அதிகம். ஆண், பெண் வேறுபாடின்றி அம்மனுக்குத் தங்கள் தலை முடியைக் காணிக்கை ஆக்குகின்றனர். குறிப்பிட்ட சில குடும்பத்தினர் தொடர்ந்து முடி நீக்கும் இத்திருப்பணியில் ஈடுபட்டுள்ளனர்.

வேம்பின் சிறப்பு

சமயபுரத்தில் தலவிருட்சமாக வேப்பமரம் இருக்கின்றது. இவ்வேப்ப மரத்தில் பெண்கள் தங்கள் முந்தானையைக் கிழித்து ஒரு கல்லை வைத்து குழந்தை தொட்டில் போல கட்டி விடுகின்றனர். குழந்தை பேறு இல்லாதவர்கள் இதை ஒரு நேர்ச்சையாக செய்து அம்மனை வேண்டிக் கொள்கின்றனர் குழந்தை பிறந்ததும் இதை நீக்கிவிடும் மரத்திலிருந்து நீக்கி விடுகின்றனர். மாங்கல்ய பெரு வேண்டுவோர் மஞ்சள் கயிறு காட்டுகின்றனர்.

தீர்த்தமாக மாரி தீர்த்தம் இருக்கின்றது. ஆடி வெள்ளிகளில் இங்கு நிறைய பக்தர்கள் வந்து இறைவியை வணங்கிச் செல்கின்றனர்.

சித்திரைத் தேர்

சித்திரையில் தேர்த் திருவிழா நடைபெறுகின்றது. சித்திரை மாசம் தேர் திருவிழா விழாவின்போது திருவானைக்காவல் அகிலாண்டேஸ்வரி கோவிலில் இருந்து அம்மனுக்கு பிரசாதம் கொண்டு வரப்படுகின்றது

பச்சை பட்டினி விரதம்

சமயபுரத்தில் முக்கியமான நிகழ்வு அம்மன் உலக நன்மைக்காக பட்டினி கிடந்து விரட்ஜ்ம் இருக்கும் நிகழ்வாகும். மாசி கடைசி ஞாயிறு அன்று தொடங்கி பங்குனி கடைசி

ஞாயிறு வரை அம்மன் விரதம் இருக்கும் நாட்களாகும். அந்தக் காலங்களில் அம்மனுக்கு நைவேத்தியம் கிடையாது. அவள் உலக நன்மைக்காக விரதம் இருப்பதால் அவளுக்கு இளநீர், பால் போன்றவை நைவேத்தியமாக படைக்கப்படுகின்றது.

பூச் சொரிதல் விழா

மாசி மாதத்தின் கடைசி ஞாயிறு அன்று பூச்சொரிதல் விழா நடைபெறும். அன்று முதல் அம்மன் பச்சை பட்டினி விரதம் மேற்கொள்வாள். அன்று பக்தர்கள் மேளதாளத்துடன் கூடை கூடையாகப் பூக்களைக் கொண்டு வந்து அம்மனுக்குப் படைக்கின்றனர் கருவறையில் அம்மன் கழுத்து வரை பூக்கள் குவிந்து விடும்.

கோயில் திறப்பு

.இக்கோயில் காலை அதிகாலையில் திறக்கப்பட்டால் இரவு ஒன்பதரை மணிக்குத்தான் அடைக்கப் படுகின்றது. தினமும் நான்கு வேளை பூஜை நடைபெறுகின்றது. தொடர்ந்து

பக்தர்களின் வருகை இருந்து கொண்டே இருப்பதால் கோயிலை இடையில் பூட்டி வைப்பது கிடையாது.

.பௌத்த கோயில்

சமயபுரம் மாரியம்மன் கோவில் ஆரம்பத்தில் பௌத்த கோவிலாக இருந்தது என்பதற்கு அங்கு முடி காணிக்கை வழங்குதல், தன்னை வருத்தும் நேர்த்திக்கடன்கள் செய்தல், சமயம் மற்றும் கண்ணனூர் என்ற பெயர்கள், நதிக்கரையில் பௌர்ணமி அன்று மக்கள் ஒன்றாக கூடி கட்டுச்சோறு உண்டு மகிழ்தல் ஆகியவை ஆதாரங்களாக உள்ளன. சமயம் என்பது பௌத்த சமயக் கலைச் சொல்லாகும். இச்சொல் பௌத்த துறவிகள் தங்களுடைய மத நெறிகளைப் பின்பற்ற வேண்டும் என்பதைக் குறிக்கிறது.பௌத்த சமயம் செல்வாக்குப் பெற்றுள்ள ஜப்பானில் சொன்மையா என்றும் சீனாவில் சான் மேயே என்றும் இச்சொல் இன்றும் பொருள் மாறாமல் வழங்குகின்றது

பின்னர் இச்சொல் வேறு பல மதங்களிலும் வேறு பல பொருள்களில் வழங்கியது.

பல ஊர்களில் புத்தர் கோயில்கள்

திருச்சி தஞ்சாவூர் பகுதிகளில் பௌத்த சமயம் மிகுந்த செல்வாக்கு பெற்று விளங்கியது. இந்திரனுக்கு கோவில் இருந்த ஊர்கள் கண்ணனூர், கண்ணபுரம், என்று தற்போது வழங்கப்படுகின்றன. சங்கமங்கலம், புத்தமங்கலம், போதிமங்கலம் ,கும்பகோணம், திருவலஞ்சுழி, பட்டீஸ்வரம், பொன் பற்றி, புத்தக்குடி, உறையூர் கோட்டப்பாடி, மயூரப்பட்டணம், நாகப்பட்டினம் போன்ற ஊர்களில் இருந்த புத்தருக்கு கோவில்கள் இருந்ததை மயிலை சீனி வேங்கடசாமி அவர்கள் தன் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

தாரா சிலைகள் வைத்தல்

கண்ணனூர், சங்கமங்கை, புன்னைநல்லூர், பட்டீஸ்வரம் போன்ற ஊர்களில் இருக்கும் பெண் தெய்வங்கள் ஆரம்பத்தில் பௌத்த பெண் தெய்வம் ஆகும். பௌத்த சமயத்தில் தாரா பெண் புத்தராகப் பல ஊர்களிலும் தெய்வமாக வைத்து வழிபடப்பட்டாள். தாராவில் தாரா வகைகள் உண்டு. கண்ணனூரில் எழுந்தருளி இருப்பவள் மஞ்சள் தாரா. இவள் அமைதியான தோற்றம் உடையவள். அரசி போல லலிதாசனத்தில் ஒரு காலை மடித்து ஒரு காலை தொங்கவிட்டு அமர்ந்திருக்கிறாள். பச்சை தாரா என்பவள் பச்சைக்காளி ரூபமாக உக்ர ரூபத்தில் வழிபடப்பட்டாள். வெள்ளை தாரா சரஸ்வதியாக பேர் பெற்றாள்.

தலைமுடி காணிக்கை

பௌத்தர் கோவில்கள் இருந்த இடங்களில் மட்டுமே இன்றைக்கும் தலைமுடி காணிக்கையாக கொடுக்கும் பழக்கம் இருந்து வருகின்றது . புத்த துறவிகள் தங்கள் தலையைத் தாங்களே மொட்டை அடித்துகொள்வது அவர்களின் சமய நெறியாகும். புத்த மடாலயங்களுக்கு சிகிச்சைக்காகவும் இந்திரன், தாரா போன்ற தெய்வங்களை வணங்க

வந்த பொது மக்களும் துறவிகளைப் போல முடி காணிக்கை செலுத்தி தம்மை வருத்தும் நேர்த்திக் கடன்களை மேற்கொண்டனர்.

மற்ற இந்து தெய்வக் கோவில்களில் தலைமுடி காணிக்கை கொடுக்கும் பழக்கம் கிடையாது.

கடுமையான சமயப் பயிற்சிகள்

பட்டினி கிடப்பது, அலகு குத்திக் கொள்வது, தீச்சட்டி எடுப்பது, பூக்குழி இறங்குவது போன்ற கடும் பயிற்சிகள் பௌத்த துறவிகளிடம் காணப்பட்டன. இவர்கள் ஆண்டுக்கு ஒரு முறை இவற்றைச் செய்வது அவர்களின் சமய நெறிமுறைகளில் ஒன்றாக இருந்தது. பின்னர் புத்தர் மீது பக்தி கொண்ட பொதுமக்களும் இத்தகைய சடங்குகளை நேர்ச்சையாக செய்யத் தொடங்கினர். புத்தர் வழிபாடு மறைந்த பிறகும் கூட வழிபாட்டுச் சடங்குகளை பின்பற்றி வந்த மக்கள் பிடிவாதமாக அவற்றை விட்டு விடாமல் தொடர்ந்து பற்று உறுதியோடு தொடர்ந்து செய்தனர். தெய்வங்களின் பெயர் மாறினாலும் தங்கள் வழிபாட்டுச் சடங்குகளை பொது மக்கள் மாற்றிக் கொள்ளவில்லை.

நோய் தீர்க்கும் காவல் தெய்வங்கள்

பௌத்தர்களை முதன் முதலில் பெரிய பெரிய சிலைகளைத் தங்கள் கோவில்களில் வைத்தனர் புத்தருக்கு மிகப்பெரிய சிலைகள் வைக்கப்பட்டன. தாராவுக்கும் அவலோகதீஸ்வரருக்கும் பெரிய சிலைகள் வைக்கப்பட்டன. செப்புத் திருமேனிகளும் உருவாக்கப்பட்டன. பெரிய தங்க புத்தர் சிலையை உடைத்து ஸ்ரீரங்க கோயிலின் திருமதில் கட்டியதாக குரு பரம்பரை எடுத்துரைக்கின்றது. நாகப்பட்டினத்தில் 300க்கும் அதிகமான புத்தர் சிலைகள் அகழ்ந்தெடுக்கப்பட்டன. எனவே புத்தர் கோயிலில் தெய்வச்சிலைகள் நான்கு கைகள் ஆறு கைகள் மூன்று முகம் என்று பல உருவங்களில் இருந்தன. தாரா சிலைகள் ஒரே முகத்துடன் பல கைகளுடன் தண்டனை கொடுக்கும் காவல் தெய்வங்களாக ஆயுதங்களை ஏந்தி இருந்தன. வசுதாரா சிலைகள் சில தாமரை மலர்களைப் பிடித்த படி காட்சியளித்தன. பௌத்த மடங்களில் மருத்துவ சேவை நடந்ததனால் இங்குள்ள பௌத்த ஆண், பெண் தெய்வங்கள் நோய் தீர்க்க வல்ல தெய்வங்களாகப் போற்றப்பட்டன. அவ்வாறே கண்ணனூர் என்ற சமயபுரத்தில் எழுந்தருளியிருக்கும் மாரியம்மன் மக்களை நோயில் இருந்து காக்கும் கடவுளாக காவல் தெய்வமாக இருந்து வருகிறார்.

!

ஹைக்கூ கவிதைகள்



Dr ஜலீலா முஸம்மில்
ஏறாவூர், இலங்கை

1
பழங்களுக்குள்
ஒளிந்திருக்கின்றன
மலர்ந்த பூக்கள்

2
சிறுமியின் குடை
குட்டிக்கரணம் போடும்
மழைத்துளிகள்

3
எவ்வளவு நீளமாகினும்
சாளரம் நுழைந்து விடுகிறது
வீசும் காற்று

4
சமைக்காத வீடு
எங்கும் மணக்கிறது
பசியின் வாசனை

5
கதை சொல்லும் பாட்டி
காணாமல் போனாள்
கூகுள் வந்ததும்

6
இளைப்பாறும் பறவைக்கு
விசிறிக்கொண்டிருக்கின்றன
மரத்தின் இலைகள்

7
உலகம் அலசும்
இன்றைய இளைஞர்
கணினியுடன் அறைக்குள்

8
அடக்கம் செய்யப்பட்டதோ?
நெகிழிப் பு(பெ)ட்டிக்குள்
நதியின் சடலம்

9
பிடித்த நண்பன்
சிறு மாற்றத்தில்
பெருத்த வலி

10
வருடாவருடம்
புதுசட்டைப் போடுகின்றன
மரங்கள்

ARANYANI

VIJENI

CHAPTER - 15

1440, Maarkazhi Maatham, Raudri Aandu

Arava Kingdom

Athikoodoor

Little space remained in the enormous temple once the entire inhabitants amassed together. Everyone had gathered to pour out their problems and get the blessing from their goddess. The puja preparations were being carried out by the assistants under the supervision of the queen.

Badhrakumari with her pregnant belly burgeoned into a watermelon, sat on a chair. “Senthamarai ma, after anointing the idol’s face with turmeric, smear vermilion on her forehead.”

The old woman who was draping the Amman in a green sari, nodded. The pampadam along with her large and gaping earlobes, swung with the movement.

“Mangala, tie the garland tightly, look there.” She pointed at the idol’s left shoulder. “The knot has become loose, any second it will fall.”

“But Maharani, the garland—”

“No buts! Just do what I say.” The queen sighed. This Mangala always has to say something in return.

The queen lit up the incense sticks in silver censers and handed it to Senthamarai. “Place it near Amman’s feet, Ma.”

“Maharani,” One of the assistants held a salver smeared with turmeric. Badhrakumari removed the knot in her pallu. Gleaming among her sari folds was the royal chain, she took it and placed it on the salver.

“Are the kalasams ready?”

“Not yet, Maharani. Just now Mangala brought the leaves an—”

“Okay!” The queen raised her voice over hers, cutting her short. “I do not want your reasons. The puja should be commenced before the auspicious time would pass. Now soon, do as I say.”

“Yes, yes, Maharani.” The girl rushed towards the corner of the karuvarai and brought all the necessary items.

“Now, pour the herbal water in all the three copper kalasams. No-no, not till the brim... hmm... yes, that will be fine.” She pointed at the mango leaves in a basket. “Now, place five leaves across the top of each kalasam, spread it, no–no... bring it here.” The queen fanned the leaves out, covering the mouth completely, and handed it back to the girl. “Do the same to the other two, and place a coconut on top of them.”

The girl nodded.

“Now, take that brass thambulam, that- that- the last big one... yes. Place the chain and the kalasams in it and bring it here.”

She touched the plate with both the hands and brought it to her eyes, repeating it thrice to get blessings from the holy content. “Take it to the king and place it at the foot of the idol.”

The girl left towards the entrance to the open courtyard, where the chief priest along with his assistants and the king, were adding twigs and ghee into the sacred fire. After the king had taken the blessing, the girl said, “Maharaja, the arrangements are over inside. Maharani asked me to inform you that puja can be commenced.”

Baladitya nodded. “The yajna is over too. We will be there in a minute.”

The queen slowly got up, keeping her hand over her stomach, and double-checked the arrangements. Every month she would do all the arrangements and decorations on her own. But now that she was in her last trimester, taking little steps was making her huff and puff; forget about bending or working.

Satisfied with everything, she ordered Mangala to open the curtain to reveal the yellow-hued face to the awaiting devotees. The minute the curtain was opened, the entire congregation became frenzied with enthusiasm, filling the temple with the absolute cacophony of worshipping.

"Bless us, Maa Aranyani..."

"Keep us safe Maa..."

"Be with us Amma..."

The chief priest flipped his uttariya across his left shoulder and walked into the karuvarai. He folded his hands above his head in prayer and bowed humbly in front of the idol. One of his assistants opened the wooden trunk, took out a scroll, and handed it to the king.

Standing next to the priest, the king flipped through the leaves of the manuscript and began reading the chants written on it. The manuscript was written by the former king and had chants and procedures to worship the Amman every pournami.

Badhrakumari sitting on the chair placed over the low platform, gazed at her husband. There was an evident glow in his face. She smiled. "The king seems to be so happy," she whispered at Senthamarai. "It is the ninth pournami."

Senthamarai smiled, widening the crows-feet at the corner of her eyes. "Yes, yes, Maharani. Prayers for the planet Mars, associated with power, energy, and movement." The old lady murmured a quick prayer, and said, "Maharani, our kingdom will flow like water and rise like fire with the blessing of our Amman."

As instructed by the chief priest, Baladitya along with Badhrakumari took the royal chain from the turmeric plate and clasped it around the deity's neck. How long I had waited to see this, the chain that adorned the neck of thathaiyya! It is soon going to be around my neck. The chain of ultimate contentment.

While the drums were beaten and conch shells were blown, the chief priest tipped the contents of the kalasams over the idol. The abhisheka water was channelled through a pipe, and directed towards a pond from where drinking water was supplied to the inhabitants. While, Baladitya was offering fresh flowers to the feet of the deity, praying wholeheartedly for his people's well being, the priest sprinkled the holy water, over everyone using mango leaves.

Suddenly, the bell that the queen had been jingling fell on the floor with a loud thud. Everyone paused and turned towards her. She let a loud painful groan, holding her stomach.

"Badhrani!" The king cupped her face in his hands. "Badhrakumari? What Happened?"

"Deva, I think it is the ba-baby, do som-e-thin-g." She managed to say.

"Senthamarai!"

The chief priest walked over to the king. "The puja should be continued, Maharaja. Else it will become a bad omen."

Baladitya wrung his hands, looking at his wife being carried away by her assistants.

The priest smiled. "Our Aranyani will take care, Maharaja."

Senthamarai ordered the girls, "Bring me a towel, hot water, and a blanket."

The girls fled to bring the necessary items. Meanwhile, all the women in the temple gathered around the queen, enclosing her with the sari that was kept to adorn the deity after the abhishekam.

Senthamarai knelt beside her and mopped her brow with a silk cloth. "You will be alright Maharani."

Badhrakumari nodded, biting her lip to hold back the yell of pain. The assistants rushed with the items and Senthamarai gestured all the men to leave the premises, while Baladitya and the priest continued the puja inside the karuvarai. Hours went by, the night had started to fall, and the cry of pain kept echoing throughout the temple, reaching out to the forest.

The counting of auspicious beads was over, the chants were completed, and the flowers were offered. It was time to commence the puja by the holy aarti. Baladitya raised the salver with silver lamps and started to rotate it. Just when the final round was about to be made, he heard it. Badhrakumari's shriek of cry.

His hands shivered. What happened? Why is Badhrani not making any more sound? Was it going to happen again? Like how it happened with Bahubalan? No! No! It cannot... it should not... please god... please... it cannot happen again. And the baby? Why can I not hear the baby's whines? What is wrong? What is wrong? What is—

Interrupting his thoughts, there was a lusty cry, followed by several exclaims.

“A girl...”

“A princess...”

“A goddess...”

“What a pretty face!”

“Look here, look here, Maharani. How pink she is...”

Tears of joy and anticipation rolled down the king’s cheeks. He finished the prayer by striking the bhasma over his forehead and rushed towards his wife. Inside the temporary sari tent, he could discern the silhouette of the queen lying on the floor.

Senthamarai walked up to him. “Here Maharaja, our princess...” He looked at his daughter in Senthamarai’s arms, his mouth agape.

The king carefully took the baby into his hand. Almost instantly, the baby stopped crying. He held her pink hand, and she curled her tiny fingers around his pinkie. His eyes examined her little pink toes, her faint soft hairs on her bald head, little ears, tiny nose, and rosebud lips.

He placed a kiss on the baby’s cheeks, and his moustache brushed her delicate skin. “Oon... oon...” she moaned.

“May all the good fall upon you.” The priest placed his palm over the baby’s head in a blessing. “What an auspicious day, Maharaja!” He pointed at the water clock in the corner. “Our princess is born at nine on the ninth date of the ninth month!” His eyes rounded in wonder. “Nine, the symbol of continuity, the unending energy, there is no end for our princess!”

Smiling, the king walked to the queen and knelt beside her. He reached out and smoothed the damp hair from her forehead. “I am nothing compared to you. I may be a warrior who has won many battles, but this battle with our body is impossible. I know how hard it is... and I know you had put your life in danger for delivering a life for me.”

Badhrakumari smiled, wiping the tears from her husband’s eyes and took her daughter close to her bosom.

He pressed a kiss over her forehead. “You have done it with great courage and bravery. I am proud of you and thankful for gifting me a goddess.”

***

With the arrival of the kingdom's princess, Baladitya's ruling became the golden era of Arava. Agriculture boomed as Aranyani Amman gave water from the blessed land. People were contented, everyone had a square meal every day, and there were only a few beggars in the streets.

Baladitya had announced the prosperity of the kingdom to be celebrated as a festival, accompanied by the naming ceremony of their six months old princess. On the day of the festival, the populaces of Arava were dancing with joy. Celebrations were held in all the villages of the kingdom. Sweets were distributed, lamps were lit, and firecrackers were burst. Special prayers were conducted in the temple by the priest and the older women.

"She will shine so bright, brighter than the sun! She will be the guide and the leader. She shall be the most trustable and faithful person. She will be constant. Like a star. She will be our first great Yuvarani Supakshana," the chief priest announced when the baby was placed in the decorated crib.

The baby held her right foot into her mouth and was sucking the big toe of her foot. True to the chant, her eyes gleamed and face shined brightly.

Badhrakumari watched affectionately as her daughter laughed, kicking her legs up and down in happiness. "Maharaja, I am unable to take my eyes from her."

"No one can, Badhrani. What magnetic eyes," he exclaimed.

"Highness! Highness!" Vishnu came running inside the chamber, gaining everyone's attention towards him.

"Vishnu?" Baladitya anxiously turned to him. "Any problem? Are you crying?"

"Everything is fine Highness," he said, hastily wiping the tears from his cheeks. "These are happy tears! My happiness is beyond the limit, Maharaja."

"What happened?" Badhrakumari stepped forward. "Is Kathiravan fine?"

"Yes, Maharani... my son is fine!" he squealed. "Our maruthuvar has found the cure. He will live long. My son will live long, Maharani. All the children in our kingdom will live long, Highness. All the chil—" He let out uncontrollable sobs in happiness.

"What great news!" Baladitya hugged Vishnu. "Just as how the maruthuvar had predicted, the treatment for Kathiravan to find the medicine for the illness had succeeded. He is a solution to all the affected children. What a blessed child!"

"No, Your Highness. Our yuvarani is the blessed child." He smiled as tears flowed down his cheeks. "Her birth has given my son life. A new life!"

"Maa, Aranyani Amman has started blessing us," the queen said, and people cheered along with her.

The chief priest walked up to them. "Shall we start the naming ceremony, Highness?" he asked and Baladitya nodded before proceeding towards the crib.

"Supakshana! Supakshana! Supakshana!" The king recited the name to the baby's ears. "She will guide us through all weaknesses." Baladitya removed the heavy royal chain he was wearing and put it around her neck. The large pendant entirely covered her petite chest.

"With Yuvarani's arrival, we will not have any weakness, Your Highness," Senthamarai said, offering the sweets to all the royal guests.

"Yes, Senthamarai ma, all our weakness has vanished. She will be our strength, she wi—"

"But Mother, you said, I am your strength."

The queen's eyes swivelled to Bahubalan. He was pouting, his bottom lip protruding, and was keenly listening to his mothers' conversation.

Everyone laughed, hearing to his innocent statement. The queen stooped and said, "Yes, Bahubalan kanna, you are also my strength."

He caught her heavy emerald choker and winced. "Only I should be your strength, Mother."

"Kanna... leave..." The queen prised his fingers from the choker. "You should not behave like this, Kanna. You are growing old, is it not? Hereafter you should be a good thamaiyan."

"Bahubalan pattu..." Senthamarai caressed his hair. "Now that you have a Thangai, you should start sharing everything with her."

"No!" He pushed Senthamarai's hand away. "I will never share my parents with that girl!" he yelled and ran through the corridor.

“He is still a kid, when he grows up he will understand everything,” the king said, carefully placing the baby back into her crib.

‘Yes! He will understand things that you cannot even imagine...’ It was Suriya Bhattacharya’s inner voice. Standing next to his double-horsed chariot, his lips turned into a sarcastic smile. The sage’s broad forehead was covered with streaks of bhasma, his long hair pulled up to a bun on top of his head, tons of auspicious beads around his neck and shirtless; he walked inside the palace.

Badhrakumari bowed in front of the sage and performed the tarpana. She washed his feet and smeared turmeric to it. Stepping aside, she folded her hands and said, “Greetings, greetings, Rishi.”

He took the bhasma from his saffron pouch and stroked it on her forehead. “May all the good happen for you!”

“Just as you had foretold; our kingdom has started flourishing after her birth Rishi,” the queen said, recalling the day she had travelled far, very far in her life.

“Please bless our daughter, Rishi.” The king took Supakshana from the crib and held her towards him.

The baby looked at the seer and gurgled. He placed his palm over the baby’s soft head, closed his eyes, and intoned a string of mantras under his breath.

The prophet stood alone in a room, the sparing light trickling from a single oil lamp, was the only source of light in the dark chamber. The lamp sat on a slab next to Baladitya’s statue, occasionally flickering according to the wind that blew from the window. The chamber had nothing; it was empty, dangerously empty. An eerie calm prevailed. Something was not right.

Suddenly, the unhinged window banged against the frame upstairs. At first, he assumed it to be the wind playing its part. But after a few more unusual sounds, he slowly mounted the steps and looked at the enormous iron door in front of him. His hands slowly ran over the door, scrutinising the embossed sword imagery.

On the floor, was a rusty key. He took it and unlocked the door. Slowly, the giant door creaked open, into blackness.

He whispered, “Supakshana?”

There was no answer.

He called again, louder this time, “SUPAKSHANA?”

And then suddenly, without any warning, a gush of wind sped past him. His face wrinkled into shallow crevices as he tried to look further into the blackness.

“Supakshana?” he called again, urgently.

For thirty seconds, nothing happened. There was stillness, an unpleasant stillness. Just when he placed his feet inside the dark chamber, a peal of maniacal laughter came in gusting bursts.

Following it, came a loud shriek, “I WILL COME!”

The sound kept intensifying. Unable to bear the loudness, he closed his eyes tightly and clamped his hands over his ears. A moment later, when he opened his eyes, he witnessed a dark silhouette of a woman crawling at lightning speed towards him.

“KRREEEESSSHHHHHHH!” The glass flower vase fell from the slab, exploding into million pieces and jolted everyone in the palace. Senthamarai rushed to bring the broom to clean the glass pieces before it could hurt anyone.

The prophet slowly opened his eyes. With a feeling of trepidation, he looked at the shattered glass pieces that lay on the floor. His gaze flitted back to the baby, stopping at the royal pendant over her chest. He smiled. What an imbecile act! And they think the curse had ended! This was the beginning, the beginning of everything, the beginning of the demon’s freedom!

“Supakshana,” he called, looking at the baby in the crook of the king’s arms.

“Ghaa... ghaaa,” she babbled.

“I just hope Lord Sarveshwara saves you,” he murmured under his breath.

ஜெயஸஞ்ஜீவி

வை.மு.கோதைநாயகி அம்மாள்

அதிகாரம் - 3
பொறாமை தேவதைகள் புரியும் ஆட்சி

சிந்தாமணி நல்ல அழகிய நங்கை! காண்போர் மனத்தைக் காந்தம்போல் இழுக்கும் சக்தி வாய்ந்த வனிதாமணியாய் விளங்கினாள். ஜெய ஸஞ்ஜீவி வைத்தியசாலையில் அவள் ஒர் ஏஜண்டாக நியமிக்கப்பட்டிருந்தாள். அவள் வாரம் ஒரு முறை அந்த கம்பெனிக்கு வருவதும், அங்கு மருந்துகளை வாங்கிக் கொள்வதும் வாங்கிய மருந்திற்குப் பணத்தை ஒப்புவித்து கணக்கைத் தீர்ப்பதுமாக விருந்தாள்! வாரம் ஒரு முறைக்குள் கொண்டுபோன மருந்துகள் செலவாகிவிட்டால் மத்தியில் வந்து எடுத்துச் செல்வாள். பொன்னம்மாளுக்கு இந்த பெண்மணியைக் கண்டால் நிரம்பவும் பிடித்தமாயிருந்தது. ஆதலால் அவளுக்குச் சரியான சம்பளமும், சுற்றுவதற்கான தனிச் செலவும் கொடுத்து வந்தாள்.

கடையில் விற்பனை செய்வதற்கு ஸ்திரீகளுக்கென்றே ப்ரத்தியேக இடம் வைத்து ஸ்திரீகளே அந்த வேலையைக் கவனிக்க வேண்டுமென்று ஒரு யோசனை தோன்றியதால் அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து பத்திரிகையில் பெண்கள் தேவை என்ற விளம்பரமும் செய்தார்கள். அந்த டிபார்ட்டுமெண்டிற்கு சிந்தாமணியையே மானேஜராக நியமித்தார்கள்; மொத்தம் 5 பெண்களே தமக்குத் தேவை என்று விளம்பரம் செய்திருந்தார்கள். மனுக்கள் கணக்கின்றி குவிந்துகொண்டே இருக்கின்றன.

முன்னர் தாமோதரன் மீது கறம் வைத்துக் கோபமாகப் பேசிச் சென்ற தாண்டவராயன் கூட்டத்தினர்கள் தாமோதரனைப் பற்றி விசாரித்ததில் ஜெய ஸஞ்ஜீவி முதலிய அவுடதங்கள் தயாரிக்கும் முறைகளடங்கிய காகிதம் எப்படியோ கிடைத்துவிட்டதாயும், அதை அவன் தாயாருங்கூட உடந்தையாக விருந்து திருடிவிட்டாள் என்றும் அதனால் தான் இத்தனை உயர்ந்த பதவிக்கு வந்துவிட்டான் என்றும் விஷயம் அரைகுறையாய்த் தெரிந்து கொண்டார்கள்: அது முதல் எவ்விதமாவது முயற்சி செய்து அவனிடமிருந்து அந்த முறைகளைத் தாங்கள் அபகரித்துத் தாங்களும் இவ்விதம் செய்ய வேண்டுமென்ற துர்ப்புத்தி யுண்டாகி விட்டது. அதனால் அதைப் பற்றியே சதியாலோனை செய்து கொண்டிருந்தார்கள்:

வெறும் வாயை மெல்லும் அவ்வைக்கு ஒரு பிடி அவல் கிடைத்ததுபோல இந்தக் கூட்டத்தினருக்கு தாமோதரன் செய்திருந்த விளம்பரம் வெகு ஆதாரமாகக்கிடைத்து விட்டது. அந்த விளம்பரத்தைக் கண்டதும் பெரு மகிழ்ச்சி கொண்டு அன்றிரவே ஓர் கூட்டங் கூட்ட ஏற்பாடு செய்து இரவு 10 மணிக்குக் குறிப்பிட்ட இடத்தில் கூட்டத்தையுங் கூட்டி விட்டார்கள். அக் கூட்டத்தின் தலைவனாகிய தாண்டவராயன் எழுந்து "நண்பர்களே! இக் கூட்டம் எதற்காகக் கூட்டி இருக்கிறோம் என்பது உங்கள் எல்லோருக்கும் தெரிந்த விஷயம். நம்முடனேயே சினேகமாக இருந்து, பல ஆண்டுகள் தின்று,கொழுத்துப் பின் நம்மை விரோதித்துக் கொண்டு சென்றதுமல்லாமல் நம்மை விலக்கி விட்டு அவன் நம்மிடம் கற்ற கொள்ளை யடிக்கும் வித்தையை உபயோகித்து ஜெயஸஞ்ஜீவி செய்யும் முறைக் காகிதத்தைக் கொள்ளையடித்துக் கொண்டு வந்து அதனால் பெரிய மனிதனாக விளங்கும் தாமோதரன் பணத்திமிரால் தான் முன்பு செய்து வந்த ஊழலையும்-நம் சினேகத்தையும் மறந்து அன்று எவ்வளவு உதாசீனமாகப் பேசினான் என்பது நீங்களறிவீர்கள். அந்தப் பயலைத் தலை எடுக்க வொட்டாமல் நாம் செய்துவிட வேண்டுவதுதான் நாம் அவனுக்குச் செய்யும் ப்ரதியாகும். இதற்கு இதோ இந்த விளம்பரமே நல்ல துணை யாயிற்று.

நேயர்களே ! இப்போது நாம் என்ன செய்ய வேண்டு மென்றால் நமது ஆசைக் கிழத்தி இந்திராணியை நாம் மறைமுகமாக நிறுத்தி இதற்கு ஓர் மனு போடச் செய்து எப்படியாவது அந்த ஜெய ஸஞ்ஜீவி வைத்திய சாலையில் வேலைக்கு அமர்த்திவிட வேண்டும். இந்திராணியைப் போன்ற கெட்டிக்காரியை இனி உலகில் இவளைப் படைத்த கடவுளாலேயே சிருஷ்டிக்க முடியாது என்பது நிச்சயம்..

(சபையில் கை கொட்டலும், ஆரவாரமும் பலக்கிறது) இவள் தற்காலத்திற்கேற்ப ஆங்கிலமும் படித்திருக்கிறாள்; நல்ல யூக சக்தி யுடையவள்; ஆகையினால் இக் காரியத் திற்கு இவளே சரியான ராணியாவாள். இப்போது தாமோதரன் இருக்கும் நிலைமைக்கு நாமும் வந்து விடலாம்; பிறகு போலீஸாரிடம் அகப்பட்டுச் சாகும் விதியை வென்று விடலாம்.

இந்திராணீ! விஷயந் தெரிந்தா! அங்கு உனக்குக் கட்டாயம் வேலை கிடைக்கும்படிக்குச் செய்து கொள்ள வேண்டும். அதற்குப் பிறகு உன் ஜால வித்தை முற்றும் காட்டி, நீ பெரிய குடும்பத்துப் பெண் போல நடித்து, தாமோதரனைக் கண்டு காதல் கொண்டலைதல்போல அபிநயித்து, அவனை உன் வலையில் போட்டுச் சிக்க வைத்த பின்னர் அவனிடத்திலிருந்து அந்த ப்ளானை எப்படியாவது அபகரித்துக் கொண்டு வரவேண்டும். அந்த முறைகள் அவனிடமாவது அவன் தாயாரிடமாவது தான் சதா இருக் கின்றனவென்று கேள்வி. அந்த கடிதத்தை எப்படியாவது கண்டு பிடித்து அடித்துக் கொண்டு வந்துவிட வேண்டும். அப்படி அதைக் கொண்டு வந்து விட்டால் அந்த முறையைக் கொண்டு நாம் தயார் செய்து அந்த கம்பெனியையே இந்திராணியின் பேரில் ரிஜிஸ்டர் செய்து விடலாம். (கரகோஷம்) என்ன சொல்கிறாய்! கண்ணாட்டீ ?'' என்று மழை பெய்து ஓய்ந்ததுபோலக் கூறினான்.

அடுத்த நிமிடமே ''அண்ணாத்தே! நீ சொல்றதுதான் சரி ! இதை நாங்கள் எல்லோரும் ஆமோதிக்கிறோம். அந்த தாமோதரனைச் சரியானபடி மட்டந் தட்ட வேண்டும். இல்லா விட்டால் நம்மைச் செய்த அவமானத்திற்குத் தக்க சிக்ஷை செய்ததாகாது.'' என்று மற்றவர்கள் ஆரவாரித்தார்கள். இந்திராணி எழுந்து நின்று ''என்னாசை நேசர்களே! இக் காரியத்தை நான் செய்வது ஒரு பெரியதே யல்ல. இதை ஒரு நொடியில் செய்து விடுகிறேன்; எனக்கு அந்த சாமர்த்தியங்கூட இல்லையா! இதைப் பற்றிக் கவலையே வேண்டாம். முதலில் இதற்கு ஓர் காரியம் செய்ய வேண்டும். அதாவது எனக்குச் சொந்தமாக சில வைர நகைகளும் உயர்ந்த ஆடைகளும் முதலில் வாங்கிக் கொள்ள வேண்டும். ஏனெனில் என்னைப் பார்க்கும்போதே ஓர் பெரிய சீமாட்டியின் மகள் – செல்வச் சீமாட்டியைப் போல, இளைய ஜெமீந்தாரிணியைப் போல – இருக்க வேண்டும். அப்போதுதான் என்னை அவர்கள் முற்றிலும் சந்தேகமே இன்றி நம்பக் கூடும். இல்லையேல் அல்ப மனுஷி என்று எண்ணி விட்டால் பெரிய மோசமாகி விடும்.

மேலும் நான் வேலைக்குப் போவது என்னுடைய தொழிலுக்கு என்று நான் கூறப் போவதில்லை. ''என்னுடைய பொழுது போக்கிற்காகவும், தமாஷுக்காகவும் நமது சகோதரிகளுக்கு தேக ஆரோக்கியத்தை யுண்டாக்க உதவி செய்யவும் தான் இங்கு வந்தேன்'' என்று கூறப் போகிறேன். அதற்குத் தகுந்த அந்தஸ்திலிருக்க வேண்டுமல்லவா!

ஆதலால் நாளையே இந்த ஏற்பாட்டைச் செய்யுங்கள்; மனுவும் எழுதிப் போட்டு விடுவதோடு நானே நேரிலும் பார்த்து விட்டு வருகிறேன்.'' என்றாள்.

இந்த ரஸமான யோசனையை எல்லோரும் அங்கீகாரம் செய்தார்கள். இன்னும் அனேக தீர்மானங்கள் நிறைவேறின. அதன் பிறகு மதுபானம் வழங்கப் பட்டது; கூட்டமும் கலைந்தது. மீண்டும் தாண்டவராயன் இந்திராணியைத் தட்டிக் கொடுத்து ''கண்ணே! ஜாக்ரதை. அந்தப் பயலை ஒரு அறை விட்டு நான் இதைக் கைப்பற்றி விடுவேன்; ஒரு கால் அது எக்கச் சக்கமாகிப் போலீஸாரிடம் அகப்பட்டுக் கொள்ள நேர்ந்தால் கஷ்டமாக முடியுமே! அதற்காகத்தான் நாமும் அகப்பட்டுக் கொள்ளாது, காரியமும் ஒழுங்காக முடிய வேண்டிய வழியைத் தேட வேண்டும்; அதற்காகவே இவ்வித யோசனையைச் செய்துள்ளேன்; இதில் வெற்றியைக் காட்டி விட்டால் நீதான் இந்தப் பட்டத்து இந்திராணியாகி விடுவாய்'' என்றான்.

விஷம் தலைக்கேற வாரம்பித்து விட்டால் எவ்வளவு வேகமாக ஏறுமோ அதே போல் விஷம புத்தி யுடையவர்களின் செய்கையும் பரபரப்பாக நடை பெறத் தொடங்கியது. மறு தினமே இந்திராணியின் அப்ளிகேஷன் ஒரு பாபமுமறியாத தாமோதரனுக்குக் கிடைத்தது. அன்று மாலையிலேயே நவீன நாகரிகமான அலங்காரத்துடன் இந்திராணி 'ஜில், ஜில்' என்று ஜெய ஸஞ்ஜீவி வைத்தியசாலைக்கு வந்து சேர்ந்தாள். அப்போதே வெளியில் புதிதாக வந்த பெரிய குடும்பத்துப் பெண்ணைப் போன்றும், நாணத்தில் மிகுந்த நாரீமணி போன்றும் பெருத்த நாட்டியத்துடன் வந்து தன் பெயர் அடித்த சீட்டைத் தாமோதரனின் முன்பு நீட்டினாள்.

இதை வாங்கிப் பார்த்த தாமோதரன் கபடமற்ற பார்வையுடன் ''அம்மா! வாருங்கள்; இந்த ஆசனத்தில் அமருங்கள்.'' என்று கூறி ''அம்மா! அம்மா! இதோ யாரோ வந்திருக்கிறார்கள் பாருங்கள்'' என்று தன் தாயாரைக் கூப்பிட்டான். பொன்னம்மாளும் வந்தாள். இந்திராணியினுடைய தடபுடல் அலங்காரங்களையும், சீமைக் கமலத்தின் ஜொலிப்பையும் கண்டு பொன்னம்மாள் வியப்புற்று மயங்கி விட்டாள். ''அம்மா! இந்த கடிதமனுப்பியது நீதானா! நீ எங்கே இருப்பது? இதற்கு முன் எங்கேனும் வேலை பார்த்திருக்கிறாயா!'' என்று கேட்டாள்.

இந்திராணி:- அம்மா! நான் தான் இதை யனுப்பியவள்! எனக்கு எங்கேனும் வேலை செய்துப் பிழைக்க வேண்டிய நிலைமையே கிடையாது. எங்களுக்குப் பரம்பரையாக வேண்டிய சொத்திருக்கிறது. நான் என் வீட்டிற்கு ஒரே செல்வப் புதல்வியாக விளங்குகிறேன். எனக்கு ஏராளமான பணச் செலவிட்டுப் பாட்டு, படிப்பு முதலியன சொல்லிக் கொடுத்திருக்கிறார்கள்; அதோடு எனக்கு அருமைக்கருமையாய் விளங்கிய பிதா இறந்துவிட்டார்; இரண்டு மாதங்களாகின்றன. வீட்டிலிருந்தால் அந்த விசனம் தாங்கமுடியவில்லை. அதனால் இப்படி எங்காவது வேலை பார்த்துக் கொண்டு பொழுதைக் கழிக்கலாம் என்று தோன்றியது.

மேலும் இது நல்ல கவுரமான கம்பெனி என்றும் கேள்விப்பட்டேன்! எனக்கு சம்பளத்தைப் பற்றி அவசியமில்லை. நான் கவுரவமாகவே வேலை செய்து பொழுது போக்கத் தயாராகவிருக்கிறேன். நல்ல சகவாசந்தான் எனக்கு முக்கியம். எனக்குப் பணம் ப்ரதானமில்லை.'' என்று வெகு ஒழுங்காகக் கயிறு திரித்தாள்.

இதைக் கேட்ட பொன்னம்மாளுக்கு வெகு நம்பிக்கையும், அந்த கபடியினிடத்தில் மதிப்பும் உண்டாகிவிட்ட அவளுடைய நடிப்போ உலகிலேயே அவளைப் போன்ற கற்பிற்கரசியே இல்லை என்று கூறும்படியாக இருந்தது. அழகும் அதற்குப் போட்டி போட்டது. ஆடம்பரமும் மேல் வகைகளுக்குச் சகாயம் செய்ததால் முன் பின் சற்றும் யோசிக்காமல் அவளுக்கு வேலை கொடுப்பதாக வாக்குக் கொடுத்து அதற்கான காரியங்களைச் செய்துவிட்டு, நாளை முதல் வேலைக்கு வரும்படியும் கூறிவிட்டாள். தாமோதரனும் அதற்கு இசைந்தான்.

வந்த வேலை திருப்திகரமாக முதல் நாளே முடிந்து விட்டதனால் அளப்பரிய சந்தோஷத்துடன் இந்திராணி வீட்டிற்கு வந்தாள். அவளது வரவை எதிர் நோக்கி நின்ற தாண்டவராயனும் அவனது கூட்டத்தினரும் ஆவலோடு அவளை வரவேற்று, விஷயம் ஜெயம் என்றதையறிந்ததும் அளவிலா ஆநந்தமடைந்து அவளுக்குக் கைலாக்கு கொடுத்து அன்று பெரிய விருந்து நடத்திவிட்டார்கள். அப்போதே கைக்கு அந்த ப்ளான் கிட்டிவிட்டதாக மெத்த மனம் பூரித்தார்கள்.

மறுநாள் முதல் வெகு அடக்க ஒடுக்கமாக இந்திராணி வேலைக்குச் செல்ல வாரம்பித்தாள். அவளுக்கு என்ன வேலையுண்டோ அதை வெகு ஒழுங்காகச் செய்வதும், தலைநிமிராது குனிந்தபடியே இருப்பதுமாய் எல்லோரையும் ப்ரமிக்கச் செய்ததுடன் சில தினங்களுக்குள்ளேயே தன்னை நன்றாக நம்பும்படிச் செய்துவிட்டாள்.

சிந்தாமணியே அந்த டிபார்ட்டுமெண்டைக் கவனித்து வந்தாள். அங்கு 5 பெண்கள் வேலைக்கு அமர்ந்தார்கள். சிந்தாமணி அந்த கம்பெனி ஆரம்ப முதல் வேலை செய்வதால் அவளுக்குக் கம்பெனி விஷயங்கள் சகலமும் நன்றாகத் தெரியும்; ஆதலால் மானேஜர் வேலை பார்ப்பதற்கு வெகு சுலபமாக முடிந்தது. அவள் அங்கு வேலைக்கு வந்த நாள் முதலாக மிக்க ஒழுங்காயும் வித்யாசமற்ற அன்புட னும், தன்னை யறியாத ஓர் பற்றுதலுடனும் வேலை செய்து வருகிறாள். நாளடைவில் அவளுக்கு இயற்கையான பருவத்திற்கேற்ப வனப்பும், வசீகரமான தேஜஸும், பளபளத்த மேனியும், முக காம்பீரமும் ஒன்றுகூடி அபாரமான எழிலுடன் விளங்கினாள். ஆனால் அத்தனை தேஜஸிலும் அவள் முகத்தில் சதா விசனமான களையே நிறைந்து விளங்கியது. இதற்குக் காரணம் அவ்வனிதையின் மனமறியுமே யன்றி பிறரறிய முடியவில்லை.

25 வயது வாலிபனாகிய தாமோதரனை மட்டும். இயற்கை யன்னையின் பருவ விளையாட்டு விட்டதா! விட வில்லை. அவனுடைய தோற்றம் அசல் மன்மதனைப்போல் தோன்றியது. தனலக்ஷ்மியும், ஜெயலக்ஷ்மியும் அவனிடம் பூர்ண கடாக்ஷம் செய்யத் தொடங்கிய பிறகு தனித்த ஜோதிக்குக் கேட்கவேண்டுமா! வயதிற்கேற்ற அறிவு; அதற்கேற்ற அனுபவம்; அதற்கிசைந்த ஒடுக்கம். அதற்குத் துணையான நன்னடத்தை, வாக்கு

நாணயம், மரியாதை, பணிவு, முதலிய பல குணங்களும் ஒன்று கூடி அவனை வெகு மேன்மையாக விளங்கச் செய்தன.

இந்திராணியோ தன்னுடைய காரியத்தில் ஜெயமடையும் பொருட்டு தாமோதரனைக் காணும்போதெல்லாம் குலுக்கிப் பிலுக்கி கடைக்கண்ணால் பார்த்து தன் வலையை வீசும் சாகஸங்களைச் செய்வாள்! தாமோதரன் இந்த பெண்ணிடம் அதிக நேரம் நிற்கக்கூடமாட்டான். காரியத்தைக் கவனித்துக்கொண்டு போய்விடுவான். இந்திராணி தின்பண்டங்கள், பழங்கள் இவைகளை வாங்கி வந்து தாமோதரனுக்குக் கொடுப்பான்! தாமோதரன் அவளுடைய கருத்தை யறியமாட்டானாகையினால் அவைகளில் ஒன்றிரண்டு மட்டும் எடுத்துக்கொண்டு மற்றதைத் திருப்பிவிடுவான்.

சிந்தாமணி மட்டும் இந்திராணி செய்யும் ஜால லீலைகளை எல்லாம் வெகு கவனமாகக் கவனித்து வந்தாள். அதோடு இந்திராணியைக் கண்டாலே அவளையறியாத சந்தேகம் உண்டாகியது. அதனால் இந்திராணியைப்பற்றிக் கவனித்துக்கொண்டே வரத் தொடங்கினாள். இந்த ரகசியத்தை தாமோதரனாவது, இந்திராணியாவது அறிய மாட்டார்கள்; தான் எதிலும் பட்டுக்கொள்ளாதவள் போலவே இருந்து முக்கியமாக அதைக் கவனிக்கலானாள். தாமோதரனை எவ்விதமாவது குடிப்பதற்குப் பழக்கிவிட வேண்டும் என்ற தீர்மானத்தை இந்திராணியின் கூட்டத்தார் கொண்டுள்ளதால் அதற்குப் பிரயத்தனம் செய்யத் தொடங்கினாள். இந்த சூஷ்மத்தையும் சிந்தாமணி தெரிந்து கொண்டு அவ்வழியில் மிக்க ஜாக்ரதையாக வேலை செய்ய வாரம்பித்தாள்.

இந்திராணி மோட்டார் வைத்துக்கொண்டு தானே ஓட்டவாரம்பித்தாள்! தாமோதரனிடத்தில் வெகு ப்ரியமாகப் பழகிப் பேசுவதும், அவனையும் டிப்பன் சாப்பிட ஓட்டலுக்கு அழைப்பதுமாக ஆரம்பித்தாள். தினம் தினம் இவ்விதம் அழைத்தும் எத்தனை நாளைக்குத் தடுப்பது? பொன்னம்மாளுக்கும் அவளைப்பற்றி நல்ல அபிப்ராய மிருப்பதால் அவளும் அதைத் தடுக்காதிருந்து விட்டாள். தாமோதரன் வெகுவாய் நம்பிவிட்டதால் அவளுடன் மிக்க தாராளமாகப் பேசிப் பழக வாரம்பித்ததோடு அவளுடன் டிப்பன் சாப்பிடவும் தலைப்பட்டான். மோட்டாரில் அவனை யழைத்துச் சென்று உயர்தரமான குடி வகைகளைக் கொணர்ந்து வைத்துப் பார்த்தாள். அதற்கு மட்டும் தாமோதரன் இணங்கவில்லை. அவனுக்கு குடிப் பழக்கம் அடியோடு கிடையாதாகையினால் அதை அறவே மறுத்துவிட்டான்.

இந்திராணியுடன் தாமோதரன் காரில் செல்கையில் தன்னுடைய மனத்தின் ஆசையை வெகு அன்பாகக் கூறவும் தொடங்கினாள். இந்திராணி தன் வீட்டில் டீ பார்ட்டி வைத்து அதற்கு தாமோதரனை அழைத்திருந்தாள்! அழைப்புப் பத்திரம் தாமோதரன் கைக்கு எட்டியதும், அதே நேரத்தில் அவன் மேஜைமேல் கீழ் வரும் துண்டுக் கடிதமும் இருந்தது.

"தாமோதரா! ஏமாந்து போகாதே! உஷார்! டீ பார்ட்டி என்பது உண்மையல்ல! உன்னை மோசம் செய்யும் பொருட்டே நடப்பதாகும். ஜாக்ரதை! இந்த உண்மையைப் பிறகு நீயே காணக்கூடும்."

என்று மொட்டையாக எழுதி இருந்ததைக் கண்டான். இவனுக்கு ஆச்சரியம் கூறத் திறமற்று விட்டது. "இதென்ன இது? இந்திராணியோ சாமானியப் பெண்ணல்ல; பெரிய குடும்பத்துச் சீமாட்டி ! அவள் எதற்காக என்னை மோசம் செய்ய வேண்டும்? அவள் என்னிடம் காட்டும் ப்ரியமெல்லாம் என்னை நேசிப்பதாக வன்றோ தெரிகிறது. அப்படி இருக்க என்னையே மோசம் செய்யக் காரணம் என்ன இருக்கிறது? இதென்ன வேடிக்கை!" என்று வெகு நேரம் சிந்தித்தான்; அவனுக்கு ஒன்றுமே விளங்கவில்லை.

பொன்னம்மாளுக்கும் இந்த அழைப்புப் பத்திரம் வந்திருந்ததால் அவளும் மரியாதையோடு போக வேண்டு மென்று தாமோதரனுடன் கூறிப் பிரயாணத்திற்கும் சித்தமாகி விட்டாள். தாமோதரன் 'இந்த மொட்டைக் கடிதத்தைப் பற்றித் தன் தாயாரிடம் சொல்லலாமா, வேண் டாமா!' என்று எண்ணிக் குழப்பமடைந்தான். பின்னும் சற்று நேரத்திற்கெல்லாம் எதுவாயினும் தன் தாயாரிடம் காட்டி விடுவதுதான் மேல் என்று தீர்மானித்துப் பின் கடிதத்தைக் காட்டினான். இதைக் கண்ட பொன்னம்மாள் அபாரமான வியப்பு கொண்டு "இதென்ன கடிதம் ! மொட்டையாக விருக்கிறதே ! யார் கொடுத்தார்கள்! எப்படி வந்தது?" என்று கேட்டுப் பிரமித்துப் போய் விட்டாள்.

தாண்டவராயன் கூட்டத்தினர்கள் பெரு முயற்சியுடன் டீ பார்டிக்குத் தயார் செய்து, தம்மை யன்றி புதிய ஆட்களையும் ஸ்திரீகளையும் சேகரித்து ஊருக்கு வெளியில் எடுத்து பெரிய இந்திர பவனம் போன்ற பங்களாவை அலங்கரித்துத் தடபுடல் செய்திருக்கிறார்கள். "இந்திராணீ இருவருக்கும் அழைப்புப் பத்திரமனுப்பினாயா?" என்றான் தாண்டவராயன்.

இந்திரா:- இன்னும் பத்திரமனுப்பாமலா! இதோ சற்று நேரத்திற்கெல்லாம் மோட்டார் அனுப்பப் போகிறேன்; தாயும், பிள்ளையும் சேர்ந்து வந்து விடுவார்கள்; பிறகு பார்டி நடத்தலாம்.- என்றாள்.

தாமோதரனும், பொன்னம்மாளும் அந்த துண்டுக் கடி தத்தைப் பற்றி ஒன்றும் தோன்றாது யோசித்தார்கள்; எனினும் அதைப் பற்றி அவர்கள் நம்பவில்லை. "இதை யாரோ வேண்டுமென்று செய்திருக்க வேண்டும். தாமோதரா! இதைப் பார்க்கையில் எனக்கு என்ன தோன்றுகிறது தெரியுமா ! இந்திராணி நல்ல செல்வச் சீமாட்டியாயும், அழகாயும் இருக்கிறாள்; அதோடு நல்ல புத்திசாலி. அவளை எங்கே உனக்கு விவாகம் செய்துவிடப் போகிறார்களோ! என்கிற பயம் அவர்களைச் சேர்ந்த எந்த மனிதர்களுக்காவது இருக்கலாம். பொறாமையினால் அவர்கள் இப்படிச் செய்து அதைக் கலைக்க முயன்றிருக்கலாம். இதைத் தவிர வேறு எதுவும் எனக்குத் தோன்றவில்லையே! உனக்கு என்ன தோன்றுகிறது?" என்றாள்.

"எனக்கா! நீ சொல்கிறபடிதான் இருக்கலாம். உண்மையில் நான் பழகிய வரையில் அவள் என்னை முழு மனத்துடன் நேசிக்கிறாள் என்பதை நான் தெரிந்து கொண் டேன்! அவளுக்கு என்னை விவாகம் செய்து கொள்ள வேண்டுமென்கிற எண்ணம் பரிபூர்ணமாக விருக்கிறது. ஆனால்..."

பொன்ன:- என்ன ஆனால்? ஆனால் உனக்குப் பிடிக்கவில்லையா! அதுதானே சொல்லப் போகிறாய்! அதைப் பற்றி இப்போது விசாரமென்ன! வீதியில் ஏதோ மோட்டார் வந்த சப்தம் கேட்கிறதே பாரு என்றாள்.

உடனே ஒரு ஆள் வந்து "இந்திராணியம்மாள் வீட்டிலிருந்து கார் வந்திருக்கிறது. அவர்களுக்கு வருவதற்கு ஓய்வு இல்லையாம்; உங்களிரண்டு பேர்களையும் அழைத்துக் கொண்டு வரச் சொன்னார்கள்" என்று கூறினான். இந்த மொட்டைக் கடிதத்தைக் கவனிக்காமல் இருவரும் புறப்பட்டு வண்டியில் ஏறி விட்டார்கள். வண்டியும் வெகு வேகமாகச் சென்று கொண்டிருக்கிறது.

தாமோ:-ட்ரைவர்! அந்த பங்களா எங்கிருக்கிறது? வெகு தூரமா!

ட்ரைவர்:-இல்லீங்க; கிட்டதானுங்க இருக்குது. நம்ப ஊட்டுக்கும் பங்களாவுக்கும் 10 மெயிலுதாங்க. ஜாஸ்தி இல்லீங்க.- என்று பேசிக் கொண்டே செல்கையில் எதிரே ஒரு மோட்டார் வெகு வேகமாக தலைத்தெறிக்கவந்தது. இவ்வண்டியின் சமீபத்தில் வருகையில் அந்த மோட்டார் நின்று விட்டது. வண்டியிலிருந்த ட்ரைவர் ஒரு குதி குதித்து, இறங்கி "அடேய்! வண்டியை நிறுத்து. உம்; நகருகிறாயா!" என்று கூறிக்கொண்டே துப்பாக்கியைக் காட்டினான். இந்த எதிர்பாராத சம்பவத்தைக் கண்டு நடு நடுங்கிய ட்ரைவரின் கை கால்கள் வெல வெலத்துப் போய் அப்படியே சாய்ந்து விட்டான். பொன்னம்மாள், தாமோதரன் ஆகியவர்களின் நிலைமையைக் கூற வேண்டுமா! கதி கலங்கி நிலை தடுமாறி ஸ்தம்பித்து "ஹா!" என்று வாய்விட்டு அலறிவிட்டார்கள்.

அப்போது மாலை 5 மணி சுமாரிருக்கும் காலம் ஐப்பிசி மாதமாகையினால் 5 மணிக்கு சூரியன் அஸ்தமனமாகும் தருணமாகி விட்டது. சாலையின் இரண்டு புறமும் சவுக்கு மரங்கள் அடர்ந்திருந்தமையினால் இருள் சூழ்ந்த வாறே இருந்தது. பக்ஷி இனங்களின் ஆரவாரங்களைத் தவிர வேறு சந்தடியே இல்லை. இத்தகைய நிர்மானுஷ்யமான காட்டு வழியில்தான் மேற் கூறியபடி சம்பவம் நிகழ்ந்தது. கதி கலங்கிய தாயும் மகனும் மருண்டிருந்த சமயம் இரண்டு முரட்டு ஆட்கள் வந்து இவர்களை மிரட்டியவாறு துப்பாக்கியைக் காட்டி "பதில் பேசாமல் சகலத்தையும் ஆடையுள்பட கழட்டி வைக்கிறீர்களா! சுட்டு விடட்டுமா! உம்; பதில் பேசினால் செத்தீர்கள்." என்றார்கள்.

என்ன செய்வார்கள் பாவம்! திருகத் திருக விழிக்கிறார்கள். உயிருக்கு மிஞ்சி யாதுமில்லை யாதலால் சகலத்தையும் கழற்றி வைத்தார்கள். வந்த முரடர்கள் எல்லாவற்றையும் பார்த்து விட்டு, "அடேய் திருட்டுப் பயலே! ஓகோ! எங்களிடமா இந்த ஜால வித்தை! "ஜெய ஸஞ்சீவி" செய்யும் முறைக் காகித மெங்கே! அதற்காகத்தான் நாங்கள் உன்னைத் தேடியலைவது? இந்த வைரமெல்லாங் கிடக்கட்டும்; உம். அதை எடுத்து வை! எங்கே வைத்திருக்கிறாய்! சொல்லு" என்று அதட்டி மீண்டும் துப்பாக்கியைக் காட்டினார்கள். இனி என்ன செய்ய முடியும்? பொன்னம்மாள் அந்த முறையை ஓர் சிறிய பையில் போட்டுத் தன் தலையில் வைத்து முடிபோட்டுக் கொண்டிருந்தாள்! "அதை எப்படி இவர்கள் கண்டு கொள்ளப் போகிறார்கள்?" என்று எண்ணி "ஐயா! அந்த அல்ப

விஷயத்திற்கா எங்களை இவ்விதம் செய்கிறீர்கள்? எங்களுக்கு அந்த முறை வாயிலேயே பாடமேயல்லாது ப்ரத்யேக ப்ளான் ஒன்றுமில்லை. வேண்டுமாயின் சொல்லுகிறேன்" என்று சற்று தைரியமாகக் கூறினாள்.

இதற்குள் அந்த முரடரில் ஒருவன் "ஓகோ! எங்களை எய்ப்பதற்கு இது ஒரு முறையோ! அதெல்லாம் முடியாது. நீ கொள்ளை யடித்த விஷயத்தை நாங்களறிவோம். அதைக் கூட நீ உயிருடன் சொல்ல மாட்டாயா! இந்த கதைக் கெல்லாம் நானா கட்டுப் படுகிறவன். உம்; அதை வைக்கிறாயா, இல்லையா!" என்று கேட்டபடியே சற்றும் அச்சமின்றி பொன்னம்மாளைத் தீண்டி, கையைப் பிடித்து இழுத்து, மற்றொரு கையினால் தலையில் கையைக் கொடுத்து மோட்டாரிலிருந்து கீழே தள்ளினான்.

அப்போது தலையில் வைத்திருந்த அந்தப் பையுடன் தலையவிழ்ந்து, அது பொத்தெனக் கீழே விழுந்தது. அதைக் கண்டதும் "ஆ!" என்று அந்த முரடர்கள் ஆரவாரித்தார்கள். பொன்னம்மாளும், தாமோதரனும் அப்படியே அலறி ஸ்மரணை தப்பியவர்களைப் போலானார்கள்: அடுத்த நிமிடம் அந்த முரடர்கள் அதை எடுத்துக்கொண்டு தங்கள் மோட்டாரில் ஏறிக்கொண்டு போய் விட்டார்கள்: அவர்கள் எல்லோரும் கருப்புச் சட்டை அணிந்திருந்ததால் இருளுக்கும் அதற்கும் வெகு பயங்கரமாகத் தோன்றியது.

அம்முரடர்கள் சென்று 5 நிமிடம் கழிந்த பிறகே இவ் விருவருக்கும் சற்று உயிர் வந்தது. இனி எது வந்து என்ன செய்யக் கூடும்? "ஐயோ! தாமோதரா! இப்படியோர் விதி வந்து நேரும் என்று நாம் கனவிலும் கருத வில்லையே! இனி என்ன செய்வது?" என்று பொன்னம்மாள் புலம்பினாள். "அந்த வழிபறிக் கொள்ளைக்காரர்களுக்கு நம்மிடம் இந்த ப்ளான் இருக்கிறது எவ்விதம் தெரிந்திருக்கும்? ஐயோ! அம்மா! நமக்கு டீபார்ட்டியும் வேண்டாம், இழவும். வேண்டாம். நாம் இப்போதே வீடு திரும்பி விடுவோம். வண்டியை மட்டும் திருப்பியனுப்பி விடுவோம். அப்பா! ட்ரைவர்! தயவு செய்து நீ எங்கள் வீட்டிற்கே ஒட்டு. நாங்கள் இந்த அலங்கோலத்தி லிருக்கையில் டீபார்ட்டிதானா குறைவு! நேரே திருப்பு" என்றான் தாமோதரன். வண்டிக்காரனும் நடுக்கத்தோடு "ஐயா! இதென்ன ஆபத்து! நமக்கு பெரிய கண்டமாகவல்லோ முடிந்தது! என்ன ப்ளான்னு அது? எனக்கு விசயமெ தெரியலயே!" என்று கூறிக் கொண்டே வண்டியைத் திருப்பி வீட்டிற்கு ஒட்டினான்.

அவர்களுக்குள்ள, கலக்கமும், கிலியும் கூறத் திறமற்று விட்டது. "அந்த மொட்டைக் கடிதத்தை நாம் சட்டை செய்யாதுபோன தன் பலனோ இது!" என்று தவிக்கிறார்கள்: வண்டிக்காரன் மீண்டும் அவ் வழியே தான் எவ்விதம் போவது என்று பயந்தவாறு, தலை தரிக்க ஓட்டத் தொடங்கி வீட்டை யடைந்தான்.

சுமார் இரண்டாயிரம் ரூபாய் தாளுமான மோதிரம்; இரண்டாயிர ரூபாய் கடுக்கன்; கெடியாரம், ஜோபியில் இருந்த 100 ரூபாய் ஆக எல்லாம் போய்விட்டது ஒரு பங்கு இருக்க, அந்த மருந்து முறை போய் விட்ட துக்கம் கூறத் திறமன்று. நாம் என்ன செய்யலாம் என்று யோசித்து யோசித்துப் பார்க்கிறார்கள்: ஒன்றும் புலப்படவில்லை. தங்களுக்கு இவ்விதம்

நேர்ந்தது என்பதைக் கூறவும் வெட்கம். கூறாமல் எவ்வித மிருப்பது. என்ற யோசனையில் இரவு முற்றும் குழம்புகிறார்கள்.

வண்டியோட்டி மெல்ல நடுங்கியவாறு வீட்டை யடைந்தான். இந்திராணி முதலியோர் இவர்கள் வரவை வெகு ஆவலோடு எதிர் பார்த்திருந்தார்கள். வண்டி வரும் சத்தங் கேட்டவுடனே இந்திராணி பெரும் ஆரவாரத்துடன் இவர்களை எதிர் கொண்டழைக்க வீதிக்கு ஓடிவந்தாள்: அங்கு கிலி பிடித்த முகத்துடன் வண்டியோட்டிமட்டும் இறங்கி "அம்மா! காரியம் மோசமாக முடிந்துவிட்டது.கள்ளனுக்கு மேல் பெருங் கள்ளன் நம் கண்ணில் மண்ணைத் தூவி ஏமாற்றி விட்டான்" என்று கூறி முடிப்பதற்குள் "ஹா! என்ன! என்ன! கொள்ளை போய்விட்டதா? அந்த ப்ளானா கொள்ளை போயிற்று! ஐயையோ! தாண்டவா! இனி வெளியில் வா: அவன் வரவில்லை: விஷயம் விபரீதமாகி விட்டது. அந்த சங்கரனையும், சீதாராமனையும் காணாமலிருக்கையிலேயே நமக்கு எதிராக வேலை செய்வதற்குத் தான் மறைந்து விட்டார்கள் என்று நான் கூறவில்லையா? நமக்கு எதிராகவே இப்போது செய்து விட்டார்கள்: இனி என்ன செய்வது! நாம் இத்தனை சிரமம் எடுத்துக் கொண்டதெல்லாம் வீணாயிற்றே!" என்று பெரியதாக அலறினாள்.

இதற்குள் மறைந்திருந்த தாண்டவராயன் முதலியோர் வெளியில் வந்தார்கள். "ஐயோ! நான் கூட அன்றே நினைத்தேன். நம்மிடம் சொல்லாமல் அந்த சங்கரன் எங்கே யும் செல்லமாட்டான்: அங்ஙன மிருக்க அவன் நமக்குத் தெரியாமல் சீதாராமனையும் இழுத்துக்கொண்டு மறைந் திருந்து இக் காரியத்தைச் செய்திருக்கிறார்கள்: "ஏண்டா! நீதானே வண்டி யோட்டினாய்? ஆள் யார் என்பது உனக்குத் தெரிந்ததா?" என்றான்.

வண்டி:- எஜமான்! எல்லோரும் கருப்பு சொக்காய் கருப்பு குல்லாய் போட்டிருந்தார்கள். முகத்தில் கூலிங் கிளாஸு போல கருப்புக் கண்ணாடி பெரியதாக அணிந்திருந்தார்கள்: மீசை கட்டையாக விருந்தது. சங்கரன் குரல் போல ஒருவனுக்கு இருந்தது. இப்போதுதான் நினைவிற்கு வருகிறது; என்னைப் பார்த்ததும் அவன் விலகி இருந்து ஆட்களை ஏவினான்.

தாண்:-எண்டா! அந்த ப்ளானைப் பிடுங்கிக் கொண்டதைப் பார்த்தாயா?

வண்டி:-ஆகா! என் கண்ணால் கண்டேன். கருப்புப் பட்டினால் செய்த சிறிய பையில் அந்த காகிதத்தைப் போட்டு அந்த அம்மாள் தலை மயிரோடு மயிராக முடிந்து கொண்டிருந்தாள். அந்த ஆசாமி முதலில் அதைத்தான் தேடிப் பிடித்து வாங்கிச் சென்றான்.

தாண்:-ஐயோ! நாம் ஒன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைத்துவிட்டது என்பது நிஜமாய் விட்டதே! இனிமேல் நாம் இவர்களை விட்டு விட்டு அந்தப் பயலைத் தேடவேண் டும்: அவன் எந்த பாதாள லோகத்தில் ஒளிந்திருப்பினும் நான் விடப் போவதில்லை: அவன் என்னிடமே வித்தையைக் கற்று என்னிடமே அதைக் காட்டுகிறானா! ஆகட்டும்; அவனைக் கண்டு பிடித்து ப்ளானைக் கைப்பற்றிக்கொண்டு. அவன் எனக்குச் செய்த த்ரோகத்திற்காக அவனைச் சிறையிலிட்டுச் சித்திரவதை செய்யாவிடின் என் பெயர் தாண்டவனல்ல. இது சத்தியம்: என்ன இந்திராணீ!

இந்தி:- ஆமாம். அந்தப் பாவியை இலேசில் விடக் கூடாது. நான் திடீரென்று வேலைக்குப் போகாமல் நிறுத்தி விட்டால் அந்த மனிதன் நடந்த சம்பவத்தையும், நான் நின்றதையும் ஒத்திட்டுப் பார்த்துச் சந்தேகங் கொள்வான். பிறகு நாம் சங்கரனைக் கண்டு பிடித்து ப்ளானைப் பெற்று மருந்து செய்ய வாரம்பித்தால் நம்மைத்தான் கள்வர்களென்று வெகு சுலபத்தில் கண்டு போலீஸில் காட்டிக் கொடுத்துவிடுவான். நாம் சிரமப்பட்டும் பலனில்லாது போய்விடும். ஆகையினால் நான் என்னவோ வழக்கம் போல வேலைக்குப் போய்க்கொண்டே அவனிடம் அகப் பட்டதைச் சுரண்டிக் கொள்கிறேன்: உள்ளுக்குள் வேலையும் நடக்கட்டும் – என்றாள்.

தாண்டவராயன் இந்திராணியின் சாமர்த்தியமான புத்திக்கு மெச்சி "கண்ணாட்டீ! உன் புத்தியே புத்தி; உன் இஷ்டப்படியே செய். நான் அந்தப் பயல் சங்கரனை விடப் போவதில்லை; ஜாக்ரதை!" என்று கர்ஜித்தான். வழக்கம் போல மறு தினம் காலையில் இந்திராணி வேலைக்கு வந்தாள்: அதற்கு முன்பே சிந்தாமணியும் வந்தாள்: பொன்னம்மாளும் தாமோதரனும் அன்று வழக்கத்திற்கு விரோதமாய் மிக்க துயரமுற்று இருப்பதைக் கண்டு "அவர்களை விசாரிப்பதா! வேண்டாமா!" என்று பெரிய குழப்ப மடைந்தாள்: எனினும் கேட்பதே சரி என்று எண்ணினாள்:

இதற்குள்ளேயே இந்திராணியும் வந்து சேர்ந்தாள். இந்திராணியின் வண்டிக்காரன் மூலம் அவளுக்கு விஷயம் தெரிந்திருக்குமென்று தாமோதரனுக்குத் தெரியும்: ஆதலால் இந்த விஷயத்தைப் பற்றி இந்திராணி தன்னைக் கேட்பாள் என்று எதிர்பார்த்துக் கொண்டே இருந்தான்: அதற்கு முன்பே சிந்தாமணி இவனைச் சந்தித்தபோது, "என்ன உடம்பு? முகம் ஏதோ ஒருவாறாக இருக்கிறதே! விஷயமென்ன!" என்று வெகு வணக்கத்துடன் கேட்டாள்

இதைக் கேட்ட தாமோதரனுக்கு உண்மையைக் கூற மனமில்லை. இது விஷயம் இவளுக்குத் தெரியாதிருக்கையில் தான் எதற்குக் கூற வேண்டுமென்று எண்ணியவனாய், "ஒன்றுமில்லை. நேற்று முதல் தலை இடியும், காய்ச்சலுமாக விருக்கிறது. அதனால்தான் ஒரு மாதிரி இருக்கிறது. வேறொன்றுமில்லை." என்று கூறிக் கொண்டே சரியானபடி பேசாமல் போய் விட்டான். அடுத்த நிமிடமே இந்திராணியைச் சந்திக்கையில் அவள் வெகு நாணத்துடன் பேசுவது போல அபிநயித்து, "என்ன போங்கோ! இரவு ட்ரைவர் வந்து சொன்னது முதல் எனக்குத் தூக்கமே வரவில்லை. என் மனதே அத்தகைய வேதனை யடைந்தபோது உங்கள் நிலைமையைக் கூற வேண்டுமா! ஏதோ ப்ளானாமே அது விஷயமே ஒருவருக்கும் தெரியாதே! எந்த சண்டாளர்கள் அதை அப்படிக் கண்டு கொண்டு உங்களையும் வருத்தி கொள்ளையிட்டு, எங்கள் டீ பார்டியையும் நடக்காமல் செய்து விட்டார்களோ! தெரியவில்லையே ! இதை நினைக்க மிக்க வயிற்றெரிச்சலாக விருக்கிறது. இதற்கு மேற்கொண்டு என்ன செய்தீர்கள்?" என்று தான் ஏதுமே அறியாத பரம சாதுவைப் போலக் கேட்டாள்.

இதைக் கேட்ட தாமோதரன் "அம்மா! இது என்னவோ பெரிய வேடிக்கையாய் ஆச்சரியமாய் நடந்திருக்கிறது. சில காலமாக என்னிடம் உள்ள ப்ளான் மீது சிலர் கண் வைத்திருக்கிறார்கள் என்றும், அதை என்னிடமிருந்து அபகரிக்கப் போகிறார்களென்றும்,

வதந்தி என் காதிற் கெட்டியது. அதுமுதல் நான் வெகு உஷாராகவே இருக்கிறேன். நேற்று களவு போனது உண்மையான ப்ளானல்ல. நாங்கள் வேண்டுமென்று தாயாரித்த போலி ப்ளான்; அதை வெகு ஜாக்ரதையாக வைத்துக் கொண்டிருப்பதுபோல நடித்து வருகிறோம்: இந்த உண்மையை நான் யாருக்கும் கூறியதில்லை. உண்மையான ப்ளான் இருக்குமிடத்தை இந்திரன், சந்திரன்கூட அறிய மாட்டான். அது யார் கையிலும் அகப்பட முடியாது.'' என்பதற்குள் இந்திராணிக்கு உள்ளுக்குள், தான் ஏமாறவில்லை. தனக்கு இன்னும் அந்த ப்ளானைப் பெறும் சந்தர்ப்பம் இருக்கிறதென்ற பெரும் மகிழ்ச்சி தாண்டவமாடுகிறது. மேலுக்கு அதை யடக்கிக் கொண்டு வெகு அன்பு காட்கிறவள் போல ''ஹா! அப்படியா! இப்போதுதான் என் மனது குளிர்ந்தது. உண்மையான ப்ளான்தான் போய்விட்டதோ என்று கலங்கிவிட்டேன்'' என்று கூறியவாறு, தாமோதரனின் இரு கரங்களையும் பிடித்துக் கொண்டு தன் உத்சாகத்தைத் தெரிவித்தாள்.

இச் செய்கை தாமோதரனுக்கு அபாரமான வெறுப்பையும், அசங்கியத்தையும் உண்டாக்கியது. ''சீ! பெண் பிள்ளையாம் இவள்; தானாக வலுவில் இவ்விதம் செய்வார்களா!'' என்று மனத்திற்குள் திடீரென்ற ஓர் அருவருப்பு அவளிடம் உண்டாகி விட்டது. இதை வெளிக்குக் காட்டிக் கொள்ளாமல் ''அம்மா! தாங்கள் இவ்விதம் செய்தது அழகில்லை. எனக்கு இது பிடிக்கவில்லை'' என்று கூறிக் கொண்டே எழுந்திருக்கப் போனான்.

வெகுவாய் வருத்தப் படுவதுபோல நடித்து, ''ஐயையோ! நான் சுத்த மடத்தனம் செய்து விட்டேன்,என் மனத்தில் தங்கள்பாலுள்ள பிரேமையைப் பன்முறை கூறி இருப்பது தாங்களறிந்ததே! அந்த மிகுதியால் தீண்டிவிட்டேன். இனி தங்கள் உத்திரவின்றி நான் எதுவும் செய்வ தில்லை. சித்தத்தில் ஆயாஸங் கொள்ளலாகாது. மன்னிக்க வேண்டும்'' என்று கூறி வணங்கினாள். ''ஆனால் இனி உண்மையான ப்ளானுக்கு ஆபத்தில்லையே! அதுதான் வேண்டியது!'' என்றாள்.

தாமோதரன் ''அது சதா என் வசமே இருக்கிறது. ஆனால் எந்த விடத்திலிருக்கிறது என்பதை யாராலும் கண்டு பிடிக்க முடியாது.'' என்று கூறிக் கொண்டிருக்கையில் டெலிபோன் மணியடித்ததால் அங்கு போய் விட்டான். அந்த சம்பாஷனை அதோடு நின்றுவிட்டது. இந்திராணி அளப்பரிய சந்தோஷத்துடன் அன்று வேலையை முடித்துக்கொண்டு வீட்டிற்கு வந்தாள். இவளுடைய உற்சாகக் களை உச்ச நிலையை அடைந்து ஜொலிப்பதைக் கண்ட தாண்டவராயன் ''கண்ணே! விஷயமென்ன?'' என்றான். இந்திராணியும் உண்மையை ஆதியோடந்தமாகக் கூறிவிட்டாள். தாண்டவராயன் இதைக் கேட்டு பெருமிதமான பூரிப்பை யடைந்து மீசை முறுக்கி, மார்பு தட்டி அமர்க்களம் செய்தான். ''இந்திராணி! இனி எப்படி வகை செய்யலாம்?'' என்றான்.

இந்தி:- வகை என்ன! மூலாதாரந்தான் அம்மனிதன் கையிலேயே இருக்கிறது. அவனை எப்படியும் நான் என் வலையில் போட்டு அதைக் கொண்டு வந்து விடுகிறேன்; சமயத்தைப் பார்த்துச் செய்கிறேன்-என்றாள்.

வழக்கம்போல அவள் ஆபீஸுக்குச் செல்வதும், வருவதும் வெகு ஒழுங்காகச் செய்து கொண்டு வந்தாள்.

தாமோதரனுக்கோ, உண்மையான ப்ளான் போய் விட்ட துக்கம் தாங்க முடியவில்லை. அதை வெளியிடாமல் இந்திராணியிடம் சொல்லியதுபோல "போலி ப்ளான் களவு போய்விட்டதாகவும் அதைக் கண்டு தயாரிக்கும் மருந்துகள் வியாதிக்கு ப்ரதிகூலத்தை யுண்டாக்கி விடுமென்றும் ஆகவே அதை அபகரித்தவர்கள் மருந்து தயார் செய்வதில் உபயோகமில்லை என்பதை யறியவும்:" என்று சகலமான பத்திரிகைகளிலும் விளம்பரம் செய்துவிட்டான்.

நாட்கள் சிலவாகிப் பலவாகி, வாரங்களும் சில கழிந்தன. இந்திராணி சமயத்தை எதிர்பார்த்து வெகு ஒழுங் காக வேலை செய்துகொண் டிருக்கிறாள். பொன்னம்மாளும் தாமோதரனும் ரகஸியத்திலேயே, துப்பறிபவனை வைத்து அந்த ப்ளானைப் பற்றி விசாரித்து வந்தார்கள். அதே ஏக்கத்தினால் தாமோதரனுக்குப் பெரும் மன அதிர்ச்சி ஏற்பட்டு அதே கவலையால் நோய் கொண்டவன் போலாய் விட்டான்.

இவன் நாளைக்கு நாள் மெலிவதைக் காண பொன்னம்மாளின் கவலையும் அதிகரித்தது. தாமோதரன் ஏதோ சொந்த வேலையின் நிமித்தம் வெளியில் சென்றான்: அந்த சமயம் இவன் சென்ற வீதியில் ஓர் மாடி வீட்டிற்குள் ளிருந்து சிலர் இறங்கி வந்து, வீதியிலிருந்த மோட்டாரில் ஏறும்போது தாமோதரன் பார்த்து அப்படியே பிரமித்து நின்றுவிட்டான். அவ்வாறு பிரமிப்பதற்குக் காரணம் யாதாக விருக்கும்! தாமோதரனின் பழய சினேகிதர்களாகிய சோதாக்கள் – தாண்டவராயனும், மற்றவர்களும் இந்திராணியுடன் வெகு சல்லாக்காகப் பேசிக்கொண்டு வண்டியில் சென்றதேயாகும்.

"இது பரியந்தம் இந்திராணியை ஓர் உயர்தரக் குடும்பத்தைச் சேர்ந்தவ ளென்றும், மகா பரிசுத்தவதி என்றும் எண்ணி அவளை ஓர் உயர்தரப் படிக்கட்டில் வைத்து ஏமார்ந்தோமே! ஆகா! என்ன மோசம்! இந்தக் கூட்டத்தின் கையாளாக வன்றோ அவள் அமைந்திருக்க வேண் டும். அடாடா! எனக்கு டூ பார்ட்டி கொடுப்பது போலக் கொடுத்து என்னுடைய ப்ளானை யபகரிக்க அவளே இவ் வித சூழ்ச்சி செய்திருப்பாளா? இல்லையேல் உயர் குலத் துதித்த உத்தமப் பெண்மணியாக விருப்பின் ஏன் இந்த அல்ப சோதாக் கூட்டத்துடன் சகவாசம் செய்வாள்? இதில் ஏதோ பெரிய மோசமிருக்கவேண்டும். இதை நாம் கண்டு பிடிக்காது விடக்கூடாது" என்று தீர்மானித்து அவர்கள் சென்ற கார் நம்பரைப் பார்த்துக் கொண்டான்: பிறகு தன் வீட்டிற்கு வந்து தான் கண்ட விஷயங்ளைத் தன் தாயாரிடம் கூறினான்.

இதைக் கேட்ட பொன்னம்மாள் ஆச்சரியமடைந்ததோடு அபாரமான கவலையை அடைந்தாள். "தாமூ! எனக்கென்னவோ இப்போது தோன்றுகிறது. அந்த ப்ளானை அவளைச் சேர்ந்த கூட்டத்தினர்தான் அபகரித்திருக்க வேண்டும். ஐயையோ! அந்த சிறிய துண்டுக் கடிதத்தைப் பற்றி நாம் சற்றும் சட்டை செய்யாது போய்விட்டோமே! அதை நமக்கு அவளே தன்மீது சந்தேகமில்லாதிருக்கும், பொருட்டு மொட்டையாக அனுப்பி இருப்பாளோ! ஒன்றும் தெரியவில்லையே! இப்போது அந்த ப்ளான் அவளை விட்டு

வேறு எங்கேயும் போகவில்லை என்று நன்றாகத் தோன்றுகிறது. அந்த ப்ளானை அந்த பஜாரியிட மிருந்து எவ்விதம் நாம் பெறுவது? தர்ம சங்கடமாக விருக்கிறதே: அவளை நாம் இப்போது வேலையை விட்டு நீக்காது ஓர் பங்தத்தைச் செய்து அவளிடமிருந்து அதை கிரகிக்கவேண் டும். சிந்தாமணியைக் கலந்துகொண்டு செய்யலாமா!" என்று கேட்டாள்.

தாமோத:- அம்மா! நாம் எதிலும் அவசரப் படக் கூடாது. நாம் அந்த இந்திராணியை உயர்வித்துச் சீமாட்டி என்று நம்பி பெரு மோசம் போனோம்; சிந்தாமணியோ, நம் கம்பெனியில் வந்த நாள் முதல் அவளுடைய அடக்க ஒடுக்கம், பணிவு; உத்தமமான குணம், தலை நிமிராத ஒழுக்கம் முதலியவைகளைக் காண அவனிடத்தில் தானாக நன்மதிப்பும், அன்பும் சுறக்கின்றன. அவளும் நம்மை வெகு மேன்மையாக மதித்திருக்கிறாள் : அங்ஙன மிருக்க நாம் இக் கேவலத்தை அவளிடம் எவ்விதம் தெரிவிப்பது என்று லஜ்ஜையாக விருக்கிறதம்மா! நீ நன்றாக யோசித்துக் கூறு.

பொன்ன:- ஆமாம்: வாஸ்தவம்தான்! அந்நங்கை நல்லாளின் நடத்தையைக் கண்டு மனம் வியப்புறுகிறேன். உரத்த குரலில் பேசி அவளை நான் கண்டதே இல்லை. எந்த சமயத்திலும் சாந்தமே குடிகொண்டிருக்கிறாள்: நாம் ஏமாந்த விஷயத்தைத் தெரிவிப்ப தென்றால் வெட்கமாயு மிருக்கிறது. சரி; இனிமேல் நீ என்ன செய்யவேண்டு மென்றால் அவள் உன்னை நேசிப்பதாக நடிப்பதுபோல அவளை நீயும் நேசிப்பதாக மிக மிக இனிப்பு வார்த்தைகள் கூறி நடித்து அவளை மயக்கிப்பின் அதை யபகரித்து விடு; நானும் அதற்குத் துணையாகவே நடிக்கின்றேன்-என்று பேசி முடிவு கட்டிக் கொண்டார்கள்.

மறு தினம் காலையில் வழக்கம்போல இந்திராணி வேலைக்கு வந்தாள்: அன்று அவள் தனக்கு ஏதோ உடம்பு சரியில்லா தவளைப் போன்று "அப்பா, அம்மா" என்று அலற்றியவாறு தலையைப் பிடித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தாள். இதைக் கண்ட தாமோதரன், "ஆகா! துஷ்டஜந்துவே! உன்னால் மோசம் போனோமே!" என்று உள்ளுக்குள் எண்ணியவாறு, அருகில் சென்று தன் வேலையை ஏதோ கவனிப்பது போலப் பாசாங்கு செய்துவிட்டு..."என்ன உடம்பு? தலையைப் பிடித்துக்கொள்ளுகிறீர்களே?" என்று கேட்டபடியே உட்கார்ந்தான்.

இந்தி:-(இவ்விதமான சமயத்தையே எதிர்பார்த்திருந்தாளாதலால் வெகு நாணிக் கோணி, குலுக்கிப் பிலுக்கி) ஒன்றுமில்லை: ஏதோ சற்று தலைவலி: இரவு தூக்கமே கிடையாது. அதனால் இப்போது தலை வலிக்கிறது.

தாமோ:- ஏன் தூக்கமில்லை.... எங்கேனும் ட்ராமா, சினிமா போயிருந்தீர்களா? தலைவலியாயின் இன்று ஏன் லீவ் வாங்கிக்கொள்ளக் கூடாது. தேக அசுகமாயின் எப்படி வேலை செய்ய முடியும்?

இந்தி:-ஊம். இதற்கெல்லாம்நான்லீவுஎடுப்பதென்றால்தினம்எடுக்கவேண்டியதுதான். என்னைச் சில தினங்களாகவே தலைவலியும் உடம்பு ஓய்ச்சலும் பீடிக்கின்றன. நான் என்ன செய்வது?

தாமோ:- ஏனம்மா அப்படி உடம்பு? தாங்கள் நல்ல டாக்டரிடத்தில் ஏன் மருந்து சாப்பிடலாகாது? உடம்பு நன்றாக விருந்தாலல்லவோ வேலை செய்ய முடியும்? எங்கள் வைத்தியரிடம் வருகிறீர்களா?

இந்தி:- நான் என்ன பதில் கூறுவேன்? நான் முதலில் இங்கு வரும்போதே சொன்னேன். எனக்கு வேலை செய்து பிழைக்க வேண்டுவதில்லை என்று. ஏதோ என் விசனம் மறையும் பொருட்டு வந்தேன். வந்த விடத்தில் ஓர் பெரிய நோயிக்கு அடிமையாகி விட்டேன். இதை ஜாடைமாடை யாகத் தங்களிடமே பன்முறை தெரிவித்திருக்கிறேன். எனது நோயைத் தீர்க்கும் மருத்துவன் உலகத்தில் தங்களை யன்றி வேறு உண்டா! இதை வெளிப்படையாயும் கூறி விட்டேன். நான் வயிற்றுக் கில்லாமலா இங்கு வந்து உழைக்கிறேன்! தங்களின் தரிசனத்திற்கும், தங்கள் கம்பெனியில் வேலையாவது செய்யலாமே என்கிற ஓர் ஆசையினால் நான் அலைகிறேன். ஊணும் உறக்கமும் ஒழிந்து எத்தனையோ நாட்களாயின" என்று கூறிக் கண்ணீர் விட்டாள்.

கள்ளனுக்குள் குள்ளன் என்பதுபோல தாமோதரன் அதற்கிசைந்த பதில் கூறி நடித்தாக வேண்டும். அவ்வாறு செய்யவோ அவன் மனம் சற்றும் சம்மதிக்கவில்லை. அவன் மனத்துள் அழுந்திக் கிடக்கும் உருவத்திற்கு விரோதமாக இந்த மூதேவியை நடத்தச் சங்கடமுண்டாகிறது. என்ன செய்வான் பாவம்! கடவுளே! என் மனப் பூர்வமான – பரிசுத்தமான – காதலை நான் ஓர் உயர்ந்த உத்தமியிடம் அடையும்படியாகக் கருணை செய்தாய்! மனக் கோட்டையை விட்டு இன்று தினம் வரையில் பெற்ற அன்னைக்கும், காதலித்த காரிகைக்கும் வெளியிடாது என் லஜ்ஜையும், அபாரமான வெட்கமும் என்னை மூடிவிட்டன. இந்த சனியனிடத்தில் மனம் பிடிக்காது நான் எவ்விதம் உரையாடுவது? ஈசா!" என்று உண்மையிலேயே விசனித்தான். தனக்கு முக்கியமான ப்ளானைக் கைக் கொள்ள வேண்டி எல்லாவற்றையும் சகித்துக் கொண்டு...கண்ணே! "இந்திராணீ ! நான் என்ன பெரிய முட்டாள் என்று எண்ணி விட்டாயா! உன்னைப்போலவே நானும் வருத்தப்படுவதை நீ யறிய மாட்டாய்! என் சுபாவம் மிக்க லஜ்ஜை யுற்றது. அதனால் நான் என் கருத்தை வெளியிடாது பொறுமையா யிருக்கிறேன்; எனினும் என் தாயாரும் நானும் வீணாகக் காலத்தைக் கழிக்க வில்லை. எப்பொழுது விவாகத்தை முடிக்கலாம் என்று யோசித்துக் கொண்டுதானிருக்கிறோம்; அதை நாங்களே உன்னிடம் தெரிவிக்க நினைத்தோம். அதற்குள்ளாக அது வெளியாக வேண்டிய காலம் நெருங்கிவிட்டது" என்றான்.

இதைக் கேட்ட இந்திராணியின் சந்தோஷத்தைக் கூற வேண்டுமா! தன் காரியத்தில் ஜெயம் பிறந்து விட்டது என்று மனத்திற்குள் துள்ளிக் குதித்தாள். "ஆ! அப்படியா! இதைக் கேட்ட என் தேகமே சிலிர்க்கின்றதே! மயிர் கூச்செரிகின்றதே! என் வியாதி எல்லாம் போய் விட்டது. இச்சந்தோஷச் செய்தியை என் தாயார் கேட்டால் அளப்பரிய சந்தோஷ மடைவாள். தாங்கள் இனியும் லஜ்ஜை லஜ்ஜை என்று நாட்களைக் கழிக்காமல் விவாகத்திற்கு ஏற்பாடு செய்து விடுவதுதான் நல்லது. நான் இனி என் வீட்டிற்கே போகமாட்டேன்; இன்று முதல் நான் இங்கேயே தானிருக்கப் போகிறேன்; என்ன சொல்கிறீர்கள்?" என்று தாமோதரனின் கையைப் பிடித்துக் கொண்டு கேட்டாள்.

தாமோ:-ஆகா! அப்படியே செய் ; உன்னிஷ்டம் எப் படியோ அப்படி நடக்க நான் தயாராக இருக்கிறேன்; அதோ என் தாயாரும் வருகிறாள் "அம்மா! நாம் நெடு நாட்களாக யோசித்துக் கொண்டிருந்த விஷயம் இன்று முடிவாகி விட்டது" என்றான்.

இதற்குள் இந்திராணி "மாமீ! என்னை அங்கீகரிக்க வேண்டும்" என்று கூறிப் பொன்னம்மாளுக்கு வணங்கினாள்; மூவர் நடிக்கும் நாடகம் வெகு ஜோராக நடக்கின்றது. முதல் சீன் முதல் தரமாகவே முடிந்தது. இதையே ஒரு சாக்காகக் கொண்டு இந்திராணி "இவ்விடத்திலேயே தங்கி, இரவு பெட்டி முதலியவற்றைத் திறந்து ப்ளானைக் கொள்ளையடிக்க வேண்டும்; பாலில் மயக்கத்தைப் போட்டு இருவருக்கும் கொடுத்து விட்டு இன்றே வேலையை முடித்து விடுவது" என்று தீர்மானித்துக் கொண்டாள்..

உடனே வேலைகள் முடிந்ததும் டிப்பனுக்குப் போவது போலச் சென்றாள். அக்கம்பெனிக்குச் சமீபத்தில் ஒரு ஒட்டல் இருக்கிறது. அதில்தான் இவர்கள் முக்கியமான சமயம் சந்திப்பது வழக்கம். அன்று அங்கு சென்று ஒரு தனித்த விடுதியில் வெகு அட்டகாஸத்துடன் புகுந்தாள்.

அங்கு தயாராக வீற்றிருந்த தாண்டவராயன் "ஹல்லோ! என்ன செய்தி! இன்னும் எத்தனை நாளாகும்? வேலையைச் சீக்கிரம் முடிக்கத் தெரியவில்லையே! அந்த இரண்டு பயல்களும் அகப்படவே இல்லை. என்ன செய்வது?" என்றான்.

இந்தி:- என்ன ஆத்திரப் படுகிறாயே ! இன்றுதான் நம் காரியம் ஜெயமாகும் கடைசீ தினமாக விருக்கலாம். அத்தனை ஏற்பாடுகளைச் செய்து விட்டேன். இன்று முதல் நான் அங்கேயே இருக்கப் போவதாயும் கூறி விட்டேன்; இன்று ஒரு இரவிலேயே நான் வேலையை முடித்து விடுகிறேன்.நீ என்ன செய்ய வேண்டு மென்றால் மயக்க மருந்து, ஒரு ரிவால்வர், முக மூடி இவைகளை எனக்கு இப்போதே கொடுத்து விடு. இரண்டாவது, நீங்கள் உங்கள் கூட்டத்துடன் அந்த பங்களாவின் தோட்டத்தில் நின்று கொண்டிருங்கள். நான்கு புறமும் பார்த்துக் கொண்டே வா! என்னுடைய பாக்கெட்டு விளக்கின் வெளிச்சம் எப்போது தெரிகிறதோ அப்போது அதைக் கவனித்துக் கொண்டு அந்த விடத்திற்கு வந்து விடுங்கள். இதுதான் சமிக்ஞை; இதற்குப் பிறகு நாம் அங்கு அகப்படும் சகலத்தையும் எடுத்துக் கொண்டு கம்பி நீட்டி விடலாம். ஞாபகமிருக்குமா! ஜாக்ரதை ; ஜாக்ரதை" என்றாள்.

தாண்டவராயன் அபாரமானசந்தோஷத்துடன் இந்திராணியைத் தட்டிக் கொடுத்தான். ஒரு ரிவால்வர், மயக்க மருந்து, முக மூடி, மூன்றும் கொடுத்தான். அவற்றை வாங்கித் தன் மடியில் மறைவிடமாகச் சொறுகிக் கொண்டாள். "சரி ! நான் சொன்னபடி செய்யுங்கள் என்று கூறிவிட்டு வெளியில் வந்தாள். ஒன்று மறியாத மகா சாதுவைப் போலத் தன் வேலை ஸ்தலத்தில் வந்து அமர்ந்து விட்டாள்.

– தொடரும்...

புதிய வெளியீடுகள்







விலை ரூ120

சந்திரோதயம் பதிப்பகம், மதுரை -18. போன் 7010997639